# கேள்விகளும் பதில்களும்

நம்முடைய கர்த்தருடைய ஆராதனையில் இன்றிரவு மீண்டும் இங்கு இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இப்பொழுது, நீங்கள் யாவரும் மகிழ்ச்சியாய் இந்த அற்புதமான பழைய பாடல்களைப் பாடுவதைக் காணும்போது, எல்லாமே ஆவியினால் நிரப்பப்பட்டவை போன்றவை, நம்மை உண்மையாகவே நல்லதாக உணரச் செய்கின்றன.

2 இன்றிரவு மீண்டும் ஒரு சில நிமிடங்கள் ஒதுக்கி ஒன்றிரண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்க நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நாங்கள் இன்று காலை உங்கள் நேரத்தைச் சற்று அதிகமாக எடுத்துக்கொண்டோம், ஆனால் நீங்கள் ஆசீர்வாதத்தை பெற்றிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன், நான் அதைக் குறித்து பேசுவதன் மூலமே ஆசிர்வதிக்கப்பட்டேன். அது…உங்களுக்குத் தெரியும், நாம் பேசுவதற்கு அநேக காரியங்கள் உள்ளன, நாம் பேச வேண்டியதில்லையா? நாங்கள் இதைக் குறித்து பேசக்கூடிய ஒரு நபரை உடையவர்களாயிருக்கிறோம், அது நம்முடைய கர்த்தராகிய இயேசு.

3 சகோதரன் டெடி, நான்…நீங்கள் விரும்பினால், நீங்கள் இங்கே ஒரு நிமிடம் தரித்திருங்கள். இக்கட்டிடத்தில் ஒரு சிறு சுகவீனமான குழந்தை இருந்ததாக என்னிடம் கூறப்பட்டது.

4 நான் இதன் பேரில் துவங்குவதற்கு முன்பு, நமக்கு இராப்போஜன ஆராதனை உள்ளது (எனவே நாம் விரும்புவது…அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை) ஒருவேளை ஒரு ஞானஸ்நானம் கொடுக்கலாம். அவர்கள்…முதலில் ஜெபிக்கப்பட விரும்புகிறவர்களுக்காக நான் ஜெபிக்க விரும்புகிறேன், நான் துவங்குவதற்கு முன்பு, முதலில் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்படியாக, இது உள்ளது.

5 இப்பொழுது…டெடி, நீங்கள் விரும்பினால், *மகத்தான வைத்தியர் இப்பொழுது அருகில் இருக்கிறார்* என்ற பாடலை வாசியுங்கள். நாங்கள் இங்குள்ள வியாதியஸ்தர்களை அழைத்து, அவர்களுக்காக ஆசீர்வாதங்களைக் கேட்கப் போகிறோம். இன்றிரவு இங்கு எத்தனை பேர் ஜெபிக்கப்பட வேண்டும்? இக்காலையில் சிலரை நாம் தவறவிட்டிருந்தோம். நீங்கள் உங்களுடைய கரங்களை உயர்த்தினால், நீங்கள்…[ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.]…அந்தச் சாட்சியைக் கேட்டு, அவருடைய எல்லா நன்மைக்காகவும் தேவனைத் துதிக்க வேண்டும். எல்லா ஆசீர்வாதங்களையும் ஓடி வருகிறச் செய்கிற தேவனைப் போற்றுங்கள். அது சரிதானே?

6 இப்பொழுது, இந்தச் சாட்சிகளின் பேரில் நாம் துரிதமாகத் துவங்குவோம், நாம் கேள்விகளின் பேரில், அல்லது, என்னை

மன்னிக்கவும், முயற்சிக்கப் போகிறோம். தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களை இந்த—இந்த விதத்தில் ஊற்றுவார் என்று நான் நம்புகிறேன்.

7 இப்பொழுது, நான் அவைகளைக் குறித்து நீண்ட நேரம் செல்ல அனுமதிக்க வேண்டாம். சகோதரன் காக்ஸ், நான் உங்களுடைய கவனத்தை ஈர்க்கப் போகிறேன், நீங்களும், முன் வரிசையில் அமர்ந்துள்ள உதவிக்காரர்களும், நமக்கு இராபோஜனம் கொடுக்க நேரம் வரும்போது, என்னை நிறுத்த…(நீங்கள் பார்த்தீர்களா?), ஏனென்றால் நான் அவர்களை நீண்ட நேரம் வைக்கிறேன். என்னால் முடிந்தளவு வேகமாகச் செல்ல நான் முயற்சிப்பேன். அதன்பின்னர், இந்த ஞாயிற்றுக்கிழமை நான் அவைகளை முடிக்கவில்லையென்றால், அடுத்த ஞாயிற்றுக்கிழமை நான் எடுத்துக்கொள்வேன்; இல்லை, இன்றிரவே நான் முடித்துவிட முயற்சிப்பேன்.

8 அவை மிகவும் நல்ல கேள்விகள். நண்பர்களே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அது எழுப்புதலும் மற்ற காரியங்களும் நடந்து கொண்டிருக்கவில்லையென்றால், நான் சுமார் ஒரு வாரம் முழுவதையும்…ஆதியாகமம், யாத்திராகமம், வெளிப்படுத்தின விசேஷம் போன்ற வேதாகம போதனைகளை மட்டுமே நேரடியாகப் படிப்பதில் செலவிட்டு, ஒரு—ஒரு நன்றாகப் பொழுதைக் கழிக்க விரும்புகிறேன். நீங்கள் ஏதோ ஒரு கட்டுக்கதையின் பேரிலிருந்து விலகிச் செல்லாதவரையில், நான் ஆழமான வேதாகம கேள்விகளையும், வேதாகம போதகங்களையும் விரும்புகிறேன். அப்படியே தெளிவான, பழைய, கலப்படமற்ற தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருங்கள்; அது உங்களைச் சரியான பாதையில் கொண்டு செல்லும். நீங்கள் அதை விசுவாசிக்கவில்லையா?

9 சரி, இந்தக் காலையில், எங்களிடம் சில—சில அருமையான கேள்விகள் இருந்தன, அவைகளில் சில ஏறக்குறைய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர், அவர்கள் யாராயிருந்தனர், அவர்கள் எந்தப் பாகமாயிருப்பார்கள்? மேலும்—மேலும், மணவாட்டியைக் குறித்தும். ஓ, அநேக காரியங்கள், உண்மையான ஆழமான கேள்விகள். நான் முடிக்காத ஒரு சிலவற்றை வைத்திருந்தேன்.

10 இப்பொழுது, இன்றிரவு நாம் இந்த ஒன்றின் பேரில் சரியாக இங்கே துவங்கப் போகிறோம், நமக்கு உதவி செய்யும்படி கர்த்தரிடம் வேண்டிக்கொள்கிறோம். இப்பொழுது, நாம் வேதாகமத்தை திறக்க முடியாது. நாம் இந்த விதமாக அதைத் திறக்க முடியும், ஆனால் அதை உண்மையாகவே நமக்குத் திறந்து கொடுக்கத் தேவன் தேவைப்படுகிறார். நாம் பக்கங்களை இழுக்க முடியும். ஆனால் வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில், யோவான் பார்த்தபோது, அவன் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருக்கிறதைக் கண்டான், அங்கே…அவர் தன்னுடைய

கையில் ஒரு புஸ்தகத்தை வைத்திருந்தார். அந்தப் புத்தகத்தை எடுத்துக்கொள்ளவும், அல்லது முத்திரைகளைத் திறக்கவும், அதைப் பார்க்கக்கூடவும் தகுதியான மனிதன் ஒருவனும் இல்லை. பரலோகத்திலோ, அல்லது பூமியிலோ, அல்லது பூமியின் கீழோ, அல்லது எந்த மனிதனும் அதற்குப் பாத்திரவானாக இருக்கவில்லை. அவன் உலகத் தோற்றத்திற்கு முன்பே அடிக்கப்பட்டிருந்த, ஒரு ஆட்டுக்குட்டியானவரைக் கண்டான். அவர் வந்து, அவருடைய கரங்களிலிருந்து புஸ்தகத்தை வாங்கி, முத்திரைகளைத் திறந்தார்; அது இயேசு கிறிஸ்துவாயிருந்தது.

11 இப்பொழுது, நான் இந்த வாரம் ஒரு மனிதனிடம் பேசிக் கொண்டிருந்தேன், நகரத்தில் உள்ள ஒரு முக்கியமான வர்த்தக புருஷனிடம், ஆப்பிரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் திரும்பிச் செல்வதைக் குறித்து அவர் என்னிடத்தில் கூறினார்: அவர், "ஏன், அவர்கள் அங்கிருந்த ஒரு பிரிட்டிஷ் தளபதியைக் கொன்று விட்டார்கள்," என்றார்.

நான், "அதற்கும் எனக்கும் என்ன சம்மந்தம்?" என்று கேட்டேன்.

அப்பொழுது அவர், "அந்தக் கொலைகளும், இனக் கலவரமும், அதுபோன்றவையும் நடக்கும் இடத்துக்கு நீங்கள் திரும்பிச் செல்லப் போகிறீர்களா?" என்று கேட்டார்.

நான், "நிச்சயமாக, அங்குதான் நான் தேவைப்படுகிறேன், நான் அங்கே போக வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார்" என்றேன்.

அவர், "அவர்கள் உன்னைக் கொன்றால் என்னவாகும்?" என்று கேட்டார்.

நான், "பாருங்கள், தேவன் நான் கொல்லப்பட வேண்டும் என்று விரும்பினால், நான் கொல்லப்படுவேன், அவ்வளவுதான்" என்றேன்.

அதற்கு அவர், "ஓ, என்னே!" என்று கூறிவிட்டு. "சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் அதைக் குறித்து நினைக்கக் கூடாது. பாருங்கள்," என்று கூறி, "எனக்குக் கவலையில்லை. நீங்கள் மத நம்பிக்கை உள்ளவர் என்றும், நீங்கள் ஒரு நல்ல மனிதர் என்று நான் நினைக்கிறேன்," அவர், "ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவையும் கூடக் கொன்றனர்" என்றார்.

நான், "நிச்சயமாக, அது தேவனுடைய சித்தம்" என்றேன்.

அவர், "என்ன? தேவனுடைய சித்தமா?" என்றார். நான்... அந்த மனிதன் சபைக்குச் சென்று கொண்டிருக்கிறார் (அவருக்குக் கிட்டத்தட்ட எழுபது வயது இருக்கும்), சபைக்குச் சென்று கொண்டிருக்கிறார் (அவர் இந்த நகரத்தில் உள்ள ஒரு சிறந்த சபைப் பதிவேட்டில் இடம்பெற்றுள்ளார்), அவ்வாறு வந்து, அது நிகழ்ந்தது, இயேசு மரிப்பது தேவனுடைய சித்தமாயிருந்தது என்பதை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.

12 ஏன், நான், "சகோதரனே, அவர் உலகத் தோற்றத்திற்கு முன்பே ஆதிமுதல் அடிக்கப்பட்டார். அவர் பூமிக்கு வருவதற்கு முன்பே அவர் அடிக்கப்பட்டார்." அது சரியா? அவர் பூமியின் அஸ்திபாரம் முதல் அடிக்கப்பட்ட தேவனுடைய ஆட்டுக்குட்டியாயிருந்தார்.

13 கேள்விகளுக்காக நாம் சற்று நேரம் அவரிடத்தில் பேசுவோமாக. இப்பொழுதும் பிதாவே, நாங்கள் புஸ்தகத்தைத் திறக்கவோ, அல்லது அதில் நோக்கிப் பார்க்கவோ நாங்கள் தகுதியற்றவர்களும், இயலாதவர்களும் என்பதை நாங்கள் உணர்கிறோம். ஆனால் ஆட்டுக்குட்டியானவர் இன்றிரவு வரட்டும், உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட தேவனுடைய ஆட்டுக்குட்டியானவர், தேவனுடைய காரியங்களை எடுத்து அவைகளை சபையோருக்கு அளிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் இந்த வார்த்தைகளைச் எடுத்து செல்வாராக, அவைகள் என்னுடைய வார்த்தைகளாயிராமல் அல்லது மனிதனுடைய வார்த்தைகளாயிராமல், ஆனால் அவைகள் பசியுள்ள ஒவ்வொரு இருதயத்திற்கும் தேவனுடைய வார்த்தைகளாக இருப்பதாக. நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

இங்கே முதலாவது ஒன்று (நாம் அவைகளை சுற்றித் திருப்பவோ அல்லது வேறெந்த காரியத்தையும் செய்திருக்கவில்லை, ஆனால் அவைகள் வந்த விதத்தில்) அது மிகவும் நன்றாக இருப்பதாகத் தோன்றுகிறது. முதலாவதாக, எத்தனை பேர் கேள்விகளில் ஆர்வமாக இருக்கிறீர்கள்? நாங்கள் உங்களுடைய...காண்போமாக. பாருங்கள், அது மிகவும் அருமையாயுள்ளது. எனக்குத் தெரிந்தால் போதும்.

**15.** இப்பொழுது. **மரணத்தின்போது மனிதன் பரலோகத்திற்கு அல்லது—அல்லது உடனடியாக நரகத்திற்குச் செல்கிறானா, அல்லது அவர்கள் நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கிறார்களா?**

14 அது ஒரு நல்ல கேள்வி. அது செய்கிறது...மிகுந்த நல்ல பரிசீலனைக்குரியது, ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் இதில் ஆர்வமாக உள்ளான், இந்த வாழ்க்கை முடிந்த பிறகு அவன் என்னவாக இருக்கப் போகிறான்? ஒவ்வொரு மனிதனும் ஆர்வங்கொண்டுள்ளான். சரி இப்பொழுது, நான், என் பங்கிற்கு, நான்—நான் அறியமாட்டேன். நான் வேதத்திலிருந்து பதிலளிக்க வேண்டும்.

15 கொஞ்ச காலத்திற்கு முன்பு லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து ஒரு பெண், தன் கணவனை விட்டுப் பிரிந்து வேறொருவரைத் திருமணம் செய்துகொள்வது சட்டப்பூர்வமானது மற்றும் சரியானது என்று என்னைச் சொல்ல வைப்பதற்காக, சுமார் முப்பத்தைந்து அல்லது நாற்பது நிமிடங்கள், அல்லது ஒருவேளை அதற்கும் சற்று அதிக நேரம், தொலைதூர அழைப்பில் பேசி ஐம்பது டாலர் கட்டணம் வரவைத்தாள் என்று நினைக்கிறேன். நான் அதைச் செய்யமாட்டேன். இல்லை! நான், "இல்லை, ஐயா!" என்றேன்.

அவள், “பாருங்கள், என் கணவர் ஒரு பாவி, இந்த மனிதன் ஒரு கிறிஸ்தவன்” என்றாள்.

16 அதற்கு நான், “அதற்கு இதனோடு எந்தச் சம்மந்தமும் கிடையாது. நீ நிச்சயமாய் விபச்சாரத்தில் ஈடுபடுவாய்” என்றேன்.

“பாருங்கள், நான் ஒரு காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளேன், இந்த மனிதனை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்றால், நான் உயிர் வாழத் தேவையில்லை” என்றாள்.

17 நான், “நீ மோகம் கொண்டிருக்கிறாய், அன்பில் அல்ல, ஏனென்றால் உன்னால் இருக்க முடியாது, அவ்வளவுதான், ஏனென்றால் அது உன்னுடைய கணவன். மரணம் உங்களைப் பிரிக்கும் வரையில் நீங்கள் அவரோடு வாழ்வதாக வாக்களிக்கப்பட்டுள்ளீர்கள். அதிலிருந்து வேறெந்த காரியமாய் இருந்தால், நீ விபச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறாய்” என்றேன். அதனால், அவள் விடாப் பிடியாயிருந்தாள். நான், “பெண்மணியே, அது அவசியமில்லை…” என்றேன்.

அவள், “அது சரியா என்று நீங்கள் என்னிடம் கூறுங்கள்” என்றாள்.

அதற்கு நான், “நான் அதைச் செய்யமாட்டேன்” என்றேன். நான், “நான்…” என்றேன்.

அவள், “சரி, சகோதரன் பிரான்ஹாம், நாங்கள் உங்கள்மேல் அதிக நம்பிக்கை வைத்துள்ளோம்” என்றாள்.

18 நான், “அப்படியானால் நான் உங்களுக்குக் கூற முயற்சிப்பதைக் கவனியுங்கள். நான் உங்களுக்குச் சத்தியத்தையே கூறிக்கொண்டிருக்கிறேன், ஏனென்றால் தேவன் கூறினதைத் தவிர வேறொன்றையும் என்னால் கூற முடியாது” என்றேன். அது உண்மையென்று தேவன் கூறினார், எனவே அந்தவிதமாகவே அது உள்ளது. பார்த்தீர்களா? நான், “அந்தவிதமாகத்தான் அது—அது இருக்க வேண்டும், அந்த விதமாகத்தான் அது இருக்க வேண்டும்” என்றேன்.

19 இப்பொழுது, இந்தக் கேள்விகள், அந்தவிதமாகவே அவைகள் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இப்போது, எப்போதுமே ஒரு எண்ணம் உண்டு…இப்போது, இங்கே, இன்றிரவு இந்தச் சில ஜனங்களிடம், நீங்கள் உணர்கிறீர்கள், அநேகமாகப் பலவிதமான மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் உணர்வீர்கள்; மேலும், அவை ஒவ்வொன்றும் நல்லவை என்றே நாங்கள் கருதுகிறோம். உங்களுடைய கருத்து நல்லதுதான், அது ஒரு…ஆனால் இப்பொழுது, நாம் என்ன செய்கிறோம், நாம் யாரோ ஒருவர்…பெரிய வாத்துக்கள், குள்ள வாத்துகள், மற்றெல்லாவற்றிற்கும்…தேனீக்களுக்கும் ஒரு தலைவன் உண்டு. இராணித் தேனீ மரித்துப் போனால் என்ன சம்பவிக்கும் என்பதை

நீங்கள் அறிவீர்கள். தலைமை வாத்து மரித்துப் போகிறது, அவைகள் மற்றொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, அவர்களுக்கு ஒரு தலைவன் இருக்க வேண்டும்.

20 மனிதனுக்கு ஒரு தலைவன் இருக்க வேண்டும்; பரிசுத்த ஆவியானவரே தலைவர். பரிசுத்த ஆவியானவர் முதலில் சபையில், அப்போஸ்தலர்கள், அதற்குப் பிறகு, தீர்க்கதரிசிகள் போன்றவர்களையும் நியமிக்கிறார்.

அண்மையில் யாரோ ஒருவர், "ஏன், சகோதரன் பிரான்ஹாம், எங்களுக்கு எவருமே போதிக்க வேண்டியதில்லை. பரிசுத்த ஆவியானவர் வரும்போது, போதிக்க எங்களுக்கு எவருமே தேவையில்லை" என்றார். "உங்களுக்கு உபதேசம் தேவையில்லை—தேவையில்லை என்று வேதம் கூறுகிறது" என்றார்.

21 அப்பொழுது நான், "அப்படியானால் ஏன் அதே பரிசுத்த ஆவியானவர் சபை போதகர்களுக்குள் இறங்கி, சபையை ஒழுங்குபடுத்தினார், பாருங்கள், பாருங்கள், சபையை ஒழுங்குபடுத்தினார்?" என்று கேட்டேன். அவர்கள்…நமக்குப் போதகர்கள் இருக்க வேண்டும். அது உண்மை.

22 ஆனால் உனக்கு யாரும் இருக்க வேண்டியதில்லை… உனக்கு உபதேசம்பண்ண வேண்டிய அவசியம் இல்லை, "நீ விபசாரம் செய்யாதே; நீ ஆணையிடாதே, எடுக்காதே…" என்று உனக்கு ஏற்கனவே தெரியும். பரிசுத்த ஆவியாகிய உங்களுடைய மனசாட்சியே அதைச் செய்வது தவறு என்று உங்களிடம் கூறுகிறது.

23 ஆனால் இப்பொழுது வேதப் போதனையைப் பொறுத்தமட்டில், அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு பரிசுத்த ஆவியே தேவைப்படுகிறது. அது உண்மை. தேவன் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுகமளிக்கும் வரங்கள், அற்புதங்கள் போன்றவற்றின் மூலம் சபையை ஒழுங்குபடுத்தியிருக்கிறார். அவர் சபையை ஒழுங்காக அமைத்து, தம்முடைய சபையை வழிநடத்தவும், வழிக்காட்டவும் அங்கே போதகர்களையும், மற்றவர்களையும் வைத்தார். இந்தக் காலையில், நாம், நாம் கூறினதுபோல, இயேசு தம்முடைய சரீரமாகப் பூமியின் மேல்…அவருடைய சரீரம் அசையும்போது, அது ஒரு நிழலைப் போன்று பூமியை பிரதிபலிக்கிறது. அது அதனோடு நகரும்.

24 இப்பொழுது, அநேக ஜனங்கள்…அட்வென்டிஸ்ட் மக்கள், ஒரு மனிதன் இறக்கும்போது, அவன் உயிர்த்தெழுதல் வரை ஆத்துமாவோடும், சரீரத்தோடும் மற்றும் மற்ற அனைத்தோடும் அப்படியே கல்லறைக்குள் சென்று அங்கேயே தங்கியிருக்கிறான் என்று நம்புகிறார்கள். அவர்களுடைய…அவர்கள் அதை "ஆத்துமா உறங்குதல்" என்று அழைக்கிறார்கள். சரி, பரவாயில்லை. அவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மறுபடியும் பிறக்கும் வரையிலும் பரவாயில்லை, அது அவர்களைப் பாதிக்காது. ஆனால் இப்பொழுது வேத வாக்கியங்களின்படி, அதாவது ஒரு நபர் மரிக்கும்போது,

அவன் ஒரு கிறிஸ்தவனாயிருந்தாலும், அவன் மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தால், அவன் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளில் ஒருபோதும் நிற்க வேண்டியதில்லை. பார்த்தீர்களா? அவன் நேராகத் தேவனுடைய பிரசன்னத்திற்கு செல்கிறான். அவன் ஒருபோதும் நியாயத்தீர்ப்பில் இருக்க வேண்டியதில்லை, ஏனென்றால் அவன் ஏற்கனவே…புரிகிறதா?

25 கிறிஸ்து எனக்காக என்ன செய்தார் என்பதற்கு நான் நிற்க வேண்டியதில்லை. இப்பொழுது, நான் ஒரு பாவியாயிருந்தேன், ஆனால் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு…இங்கே—இங்கே ஒரு சில வார்த்தைகளில் முழு காரியமும் உள்ளது: தேவன், “நீ புசிக்கும் நாளிலே சாவாய்” என்றார். அதுவே அதைத் தீர்த்து வைத்தது.

26 இப்பொழுது, தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டும். அவருடைய வார்த்தையைக் காத்துக் கொள்வதைத் தவிர வேறெதையும் அவரால் செய்ய முடியாது, ஏனென்றால் அவர் தேவனாயிருக்கிறார். அப்படியானால், அவரால் முடியாது. அப்பொழுது, அவர்…நீங்கள் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறீர்கள். அந்த…அப்பொழுது, நீங்கள் பாவத்தில் பிறந்து, அக்கிரமத்தில் உருவாகி, பொய் பேசுகிறவர்களாய் உலகத்திற்கு வந்தீர்கள். ஆகையால் நீங்கள் பிறக்கும்போது, நீங்கள் சுபாவத்தினால் ஒரு பாவியாயிருக்கிறீர்கள். எனவே அதைக் குறித்து நீங்கள் உலகத்தில் ஒன்றுமே செய்ய முடியாது. நான் என்னை இரட்சித்துக் கொள்ள அல்லது நீங்கள் உங்களைக் இரட்சித்துக் கொள்ள ஒன்றுமே செய்ய முடியாது. அது தேவனுக்குள் கிறிஸ்து நமக்காக என்ன செய்தார், இல்லை, தேவன் கிறிஸ்துவுக்குள் நமக்கு என்ன செய்தார் என்பதேயாகும். பார்த்தீர்களா? பாருங்கள், நான் *இதைச்* செய்கிறேன் என்று நினைக்கிறேன் அல்லது நான் *இதைச்* செய்கிறேன் என்பது அல்ல, அது அவர் *அதைச்* செய்தாரா என்பதேயாகும்.

27 சரி இப்பொழுது, நாம் அவருக்குள் இருக்கிறோம். அப்பொழுது அவர் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளில் நின்றார்; அவர் நியாயத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டார். அவர் பாவத்திற்கு குற்றமற்றவராயிருந்து, பாவத்தை அறியாதவராயிருந்து, அதே சமயத்தில் நமக்காகப் பாவமாகப்பட்டார். ஆகையால் நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் வரையில், நீங்கள் நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலையாயிருப்பீர்கள். “அந்த இரத்தத்தை நான் காணும்போது, நான் உங்களைக் கடந்து போவேன்.” பாருங்கள், பார்த்தீர்களா? அதுதான். அந்த இரத்தம் நம்மை விடுவிக்கிறது.

28 இப்பொழுது, பாவி ஒருபோதும்…பாவி தான் நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டும். இந்த நியாயத்தீர்ப்பைத் தவிர வேறு ஒன்றும் இருக்காது. அது கிறிஸ்துவின் இரத்தத்தினால் உலகத்தைச் சுற்றிலும் ஒரு—ஒரு வட்டம் அல்லது ஒரு வானவில் போன்றது. நீங்கள் இங்கே இருக்கும் வரைக்கும்…கிறிஸ்துவின் இரத்தத்தினூடாகத்

தவிர வேறெந்த வழியிலும் தேவனால் பூமியை அதனுடைய நிலையில் காண முடிந்தால், அவர் அதை ஒரு நொடியில் அழித்துவிடுவார். அவர் அப்படிச் செய்தாக வேண்டியிருக்கும். நிச்சயமாகவே அவர் செய்ய வேண்டும். அங்கேதான் நியாயத்தீர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

29 இப்பொழுது, அல்லது, ஒரு மனிதன் இங்கே கீழே இருக்கும் வரை, அந்த மனிதன் ஒரு குடிகாரனாயிருந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை, ஒரு சூதாடுபவர், ஒரு பயங்கரமான அவிசுவாசி, தேவனுடைய இரக்கங்கள் இன்னமும் அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது. ஒரு ஸ்திரீ, அவள் என்னவாயிருந்தாலும், அவள் என்னவாயிருந்தாலும், ஒரு விலைமாதுவாக இருந்தாலும் சரி, வேறு எவராக இருந்தாலும் சரி, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அவளுக்காகவும் பாவநிவாரணம் செய்கிறது. ஆனால் அவளுடைய ஆத்துமா இந்தச் சரீரத்தை விட்டுச் சென்ற அந்த நிமிடமே, அவள் அதற்கு அப்பால் செல்லும்போது, அவள் இரக்கத்தின் மேல் கடந்து நியாயத்தீர்ப்புக்குள் சென்றுவிடுகிறாள். தேவன் அதை ஏற்கனவே நியாயந்தீர்த்துவிட்டார். அதுவே அதைத் தீர்த்து வைக்கிறது. அவள் முடிந்துவிட்டாள். அவள் நியாயந்தீர்க்கப்பட்டிருக்கிறாள். அவள் நியாயந்தீர்த்தாள்...

30 உங்களுடைய பாவங்களுக்கான, அங்கே, தேவனுடைய பாவநிவிர்த்தியை நீங்கள் நடத்தும் விதத்தைக் கொண்டு நீங்கள் உங்களையே நியாயந்தீர்க்கிறீர்கள். பார்த்தீர்களா? நீங்கள் உங்களை நியாயந்தீர்க்கிறீர்கள். உங்களை மன்னிக்கும் *அளவுக்கு* நீங்கள் அவரை நியாயந்தீர்ப்பதில்லை. பார்த்தீர்களா? அவர் உங்களை மன்னிப்பார் என்று நீங்கள் நினைத்தால், உங்களுடைய தவறுகளை அறிக்கை செய்யுங்கள், அவர் உங்களை மன்னிப்பார்.

31 அதன்பின்னர் ஒரே ஆவியினாலே (கவனியுங்கள்) நாம் யாவரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம். அந்தச் சரீரம் தேவனால் உயிரோடெழுப்பப்பட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, நீதிமான்களாக்கப்பட்டு, பரலோகத்தில் வல்லமையிலும் மகத்துவத்திலும் தம்முடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், கிறிஸ்துவுக்குள்ளிருந்து, நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலையாகி, உயிர்த்தெழுதலில் வருவார்கள்.

32 இப்பொழுது. ஆனால் நாம் இப்பொழுது மரிக்கும்போது—நாம் இப்பொழுது மரிக்கும்போது, நாம் நேரடியாகச் சர்வவல்லமையுள்ள தேவனின் பிரசன்னத்திற்குள்ளாக ஒரு வானத்துக்குரிய சரீரத்தில் செல்கிறோம். நான் சகோதரன் நெவிலை அங்கே சந்திப்பேனானால் நலமாயிருக்கும், நாங்கள் இருவரும் இப்பொழுது மரித்துப் போனால், இப்பொழுதிலிருந்து ஒரு மணி நேரத்தில் நான் அவரைச் சந்திப்பேன்; நான், "சகோதரன் நெவில், வாழ்த்துகள்" என்று கூறி,

அவரிடம் பேசுவேன். என்னால் அவருடைய கரத்தைக் குலுக்க முடியாது; அவர் ஒரு வானத்துக்குரிய சரீரத்தில் இருக்கிறார். நான் அவரிடம் பேச முடியும்; அவர் அங்கே இருப்பது போலவே இருப்பார். நானும் நான் இருப்பது போலவே இருப்பேன். ஆனால் நம்மால் ஒருவரோடு ஒருவர் பேச முடியும், ஆனால் நம்மால் ஒருவரையொருவர் தொட முடியாது, ஏனென்றால் நாம் பார்த்தல், சுவைத்தல், உணருதல், முகருதல், கேட்டல் ஆகிய ஐம்புலன்களில் ஒன்றையுமே பெற்றிருக்கவில்லை. பார்த்தீர்களா? ஆனால் நாம் அழியாமையுள்ளவர்களாயிருப்போம், எங்களால் ஒருவரையொருவர் காண முடியும். நாம் தேவனுடைய பலிபீடத்தண்டையில் உள்ள ஆசீர்வதிக்கப்பட்ட மண்டலங்களில் ஜீவிப்போம். யோவான் பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள், மறுபடியுமாகப் பூமிக்கு வந்து தங்கள் மேல் வஸ்திரம் பெற்றுக்கொள்ள, "எவ்வளவு காலம், ஆண்டவரே, எவ்வளவு காலம்," என்று கதறியதை கண்டான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

33 அதன்பின்னர், இப்பொழுது பரிசுத்த ஆவியின் ரூபத்தில் நமக்குள்ளாக இருக்கிற இயேசுவானவர், அவருடைய வானத்துக்குரிய சரீரம், பரிசுத்த ஆவியானவர் மகிமையடைந்த சரீரத்தோடு திரும்பி வரும்போது, நாம் அவரோடு அவருடைய சாயலில் மகிமைப்படுவோம். நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? அப்பொழுது நான் அவருடைய கரத்தைக் குலுக்கி, "இதோ அது உள்ளது, சகோதரன் நெவில்" என்று கூறுவேன். அதன்பின்னர் நாங்கள் புசிப்போம்.

34 பாருங்கள். இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் கூறினார், அவர்கள் இராப்போஜனம் எடுத்துக் கொண்டிருந்தனர், அவர், "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். அது சரியா? பார்த்தீர்களா? இதோ அது உள்ளது. எனவே, நாம்…மரித்தோர் மரிக்கும்போது… ஒரு நீதிமானாக்கப்பட்ட நபர் தேவனுடைய சமூகத்தில் நின்று கொண்டு, அவருடைய பிரசன்னத்திற்குள்ளாக ஒரு அழிவில்லாத சரீரத்திற்குள்ளாகச் சென்று, அந்த…திரும்பி வரும் நாள் வரைக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட சமாதானத்தின் மண்டலங்களில் ஜீவிக்கிறான்.

35 இப்பொழுது, ஜனங்கள் மரித்தபோது, நீதிமான்களாக்கப்பட்டவர்கள் தேவனுடைய பிரசன்னத்திற்குள்ளாகச் செல்லாத ஒரு நேரம் இருந்தது. அது பழைய ஏற்பாட்டில் இருந்தது. அவர்கள் பரதீசு என்றழைக்கப்பட்ட ஒரு இடத்திற்குச் சென்றனர், அங்கே நீதிமான்களின் ஆத்துமாக்கள் பரதீசில் காத்திருந்தன. ஆனால் பரதீசிலோ, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படும் வரைக்கும், தேவன் ஆத்துமாக்களை ஒரு

சொப்பன தேசத்தைப் போல வைத்திருந்தார். ஏனென்றால் காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் பாவத்தைப் போக்காது, அது பாவத்தை மூடி மறைத்தது மட்டுமே. ஆனால் இயேசுவின் இரத்தமோ பாவத்தைப் போக்குகிறது.

36 நீங்கள் கவனியுங்கள்…அவர் கல்வாரியில் மரித்தபோது…அவர் திரும்பி வந்தபோது, அவர் காளை, வெள்ளாடு, கிடாரி, இவைகளின் இரத்தப் பாவநிவிர்த்தியின் கீழ் மரித்திருந்த பரிசுத்தவான்களை கல்லறைகளிலிருந்து வெளியே கொண்டு வந்தார். அவர்கள் நகரத்திற்குள் பிரவேசித்து (ஓ!) அநேகருக்குக் காணப்பட்டனர். எவ்வளவு ஒரு அழகான காட்சி! ஓ, நாம் அதைச் சற்று நேரம் வர்ணிக்க முடிந்தால் நலமாயிருக்கும். இயேசுவானவர் மரித்தபோது அவரைப் பாருங்கள்.

37 இங்கே, நான் அடிக்கடி கூறியுள்ளதுபோல, இங்குள்ள சபையில், அழிவுள்ள ஜீவன்கள் இங்கே ஜீவிக்கிறதைப் போன்ற ஒரு—ஒரு வரிசையில் இங்கே உள்ளன என்று நான் நினைக்கிறேன். ஒவ்வொருவரும் கறுப்பும், இருளும் மகிழ்ச்சியும் நிறைந்த இந்தக் பெரிதான கூட்டுத்திரளாக உள்ளனர். மானிடர்கள் இங்கு வாழ்கின்றனர். இப்பொழுது, அவர்கள் ஒன்று *இந்த* வழியிலிருந்து அல்லது *அந்த* வழியிலிருந்து பாதிக்கப்படுகிறார்கள். நீங்கள் கீழான உலகத்திலிருந்தோ அல்லது மேலான உலகத்திலிருந்தோ ஒரு தாக்கமில்லாமல், இங்கே ஒரு ஆவிக்குரிய ஜீவியமான, பாவியாகவோ அல்லது பரிசுத்தவானாகவோ இருக்க முடியாது. நீங்கள் இங்கிருந்து தாக்கம் பெற்றால், நீங்கள் மேலிருந்து வந்திருக்கிறீர்கள். உங்களுடைய வானத்துக்குரிய சரீரம் இங்கே காத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நீங்கள் பொல்லாதவர்களாயும், மாய்மாலமாயும், அலட்சியமாயும் இருந்தால், உங்களுடைய வானத்துக்குரிய சரீரம் இங்கே கீழே உள்ளது, அது அங்கே மேலே உள்ளது என்று நீங்கள் எவ்வளவுதான் நினைத்தாலும் சரி; ஏனென்றால் ஜனங்களுக்கு முன்பாக நீங்கள் கொடுக்கும் கனி நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்பதை நிரூபிக்கிறது. எனவே நீங்கள் வேறெங்கோ இருப்பதை போலவே இங்கேயும் இருக்கிறீர்கள். நீங்கள் இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்போது, உங்களுடைய சுதந்தரம் என்னவாயிருக்கிறது என்பதை இங்கே ஜீவிக்கிற உங்களுடைய வாழ்க்கை அப்படியே பிரதிபலிக்கிறது. உங்களுக்குப் புரிகிறதா?

38 நாம் இப்பொழுது சரியாக இருக்கிறோம் (ஓ, நான் அதைக் குறித்து நினைக்கும்போது) நாம் இப்பொழுது தேவனுடையப் பிரசன்னத்தில் மகிமைப்படுத்தப்பட்டு, விசுவாசிகளாக மீண்டும் பிறந்திருக்கிறோம். “இந்தப் பூமிக்குரிய கூடாரம் அழிந்துபோனாலும், மகிமையில் நமக்கு ஒன்று ஏற்கனவே காத்திருக்கிறது,” வேறு எங்கோ அல்ல, சரியாக அங்கே, இப்போதே காத்திருக்கிறது. இந்தப் பூமிக்குரிய சரீரங்கள் அழியாமையை

உடுத்திக் கொள்ளத் தவிக்கின்றன. அது சரியா? வியாதிகள், வலிகள், வேதனைகள், ஏமாற்றங்கள், இருதய வேதனைகள், மற்றும்...ஓ! அந்தப் பழைய தொற்று நோய் வீடு அடைக்கப்படும்போது நான் மகிழ்ச்சியடைவேன், நீங்கள் விரும்பவில்லையா? ஆம், ஐயா! நாம் வீட்டிற்கு செல்லலாம். அது உண்மை.

39 நாம் அப்படியே தரித்துக் கொள்ளத் தவிக்கிறோம், ஆவியின் தவிப்பு. ஓ, நீங்கள் நோக்கிப் பார்க்கும்போது, சுற்றிலும் உள்ள எல்லா வேதனைகளையும், எல்லா கூட்டுக் கலவையான துர்நாற்றத்தையும், பாவத்தையும் காணும்போது, சாவுக்கேதுவான வாழ்க்கையையும், வஞ்சனையையும், மற்றும் ஒவ்வொரு காரியத்தையும், "ஓ, தேவனே, இன்னும் எவ்வளவு காலம் இது இருக்கும்?" என்று நான் நினைக்கிறேன்.

40 இந்நாட்களில் ஒன்றில் நான் என்னுடைய கடைசி பிரசங்கத்தை பிரசங்கிக்கப் போகிறேன், இந்தவிதமாக வேதாகமத்தை கீழே வைத்துவிட்டு, வீடு செல்லப் போகிறேன். ஓ, அது என்ன ஒரு நேரமாயிருக்கும்! இந்தப் பூமிக்குரிய கூடாரம் இங்கே முடிவுறும்போது, அதற்கு அப்பால் உள்ள அந்த ஒரு விநாடி கூட நான் இருக்க முடியாது; நீங்களும் அவ்வாறே செய்வீர்கள். ஓ, என்னே! அவர்கள் இவ்வாறு கூறினதில் வியப்பொன்றுமில்லை:

> இந்த மாம்ச வஸ்திரத்தை நான் கீழே போட்டுவிட்டு, எழும்பி,
> நித்திய பரிசை கைப்பற்றி,
> ஆகாயத்தினூடாகக் கடந்து செல்லும்போது சத்தமிடுங்கள்.

நிச்சயமாக, மேலே செல்கிறேன்.

41 இப்பொழுது, அது எங்கே உள்ளது? நாம் அதை எப்பொழுது பெற்றுக் கொள்கிறோம்? இப்பொழுது! "எவர்களை நீதிமான்களாக்கினாரோ, அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." மேலும், மகிமைப்படுத்தப்பட்ட, அழியாத நமது சரீரங்கள் இப்பொழுதே இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தில், நாம் வருவதற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் உணர்கிறீர்களா?

42 உங்களுக்குத் தெரியும், ஒரு குழந்தை இந்தப் பூமியில் பிறக்கும்போது, அது பிரசவிக்கப்படுவதற்கு முன்னர், அது ஜீவனைப் பெற்றுள்ளது, ஆனால் அது பிறப்பிக்கப்படவில்லை, அந்தக் குழந்தை பிறந்ததுமே, அது...அது தொடங்குகிறது... பிறக்கிறது, அதனுடைய நுரையீரல்கள் யாவும் மூடப்பட்டு, அது மரித்திருக்கிறது, அதனுடைய தசைகள் நடுங்கி, அசைந்து கொண்டிருக்கின்றன, ஆனால் முதல் காரியம், ஒரு சிறு அடி அல்லது இரண்டு அடிகள் [சகோதரன் பிரான்ஹாம் தன்னுடைய கரங்களைத் தட்டுகிறார்—ஆசி.] *அப்படியே,* அவன் *"திடுக்கிட்டு!"* மூச்சை

இழுத்துக்கொள்வான். என்ன விஷயம்? அந்த மாம்சப்பிரகாரமான சரீரம் தாயினிடத்தில் உருவாகிக் கொண்டிருந்தவுடனே, ஒரு ஆவிக்குரிய சரீரம் அந்தக் குழந்தை பிறந்தவுடனே அதைப் பெற்றுக்கொள்ள காத்துக் கொண்டிருக்கிறது.

43 இந்த ஆவிக்குரிய சரீரம் உருவாகிக் கொண்டிருக்கையில், ஒரு மாம்சப்பிரகாரமான சரீரம் இவ்வுலகை விட்டுச் சென்றவுடனே அதைப் பெற்றுக்கொள்ள காத்துக் கொண்டிருக்கிறது. பார்த்தீர்களா? அதற்கு நேர்மாறாக, மீண்டும் ஏதேனுக்கு திரும்பிச் செல்லுதல் (புரிகிறதா?), அப்படியே திரும்புதல்.

44 இப்பொழுது அங்கே, தேவன்…ஏன் மரணம், அது—அது மரணத்தின் எல்லா கொடுக்கையும் அடியோடு நீக்கிவிடுகிறது. பவுல் நின்று, “மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே?” என்று சொல்ல முடிந்ததில் வியப்பொன்றுமில்லை. அவன், “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்” என்றான். ஆம், ஐயா. இந்தப் பூமிக்குரிய கூடாரம் அழிந்து போன நிலையில், நமக்கு ஏற்கனவே ஒன்று காத்திருக்கிறது, எனவே அதைக் குறித்து மறந்துவிடுங்கள்.

45 இப்பொழுது உங்களுக்கு, நண்பனே, இதைக் கேட்டுக்கொண்ட நீ ஒரு பாவியாயிருந்தால், தேவன் உன்னிடத்தில் இரக்கமாயிருப்பாராக. ஆம், ஐயா! நீங்கள் இப்பொழுது ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் மட்டும் இருக்கவில்லை, இங்கே இல்லை, இல்லை! நீங்கள் செழித்து முன்னேறுவீர்கள். அதெல்லாம் தேவனுடைய இரக்கங்களினூடாகவேயாகும். தேவனுடைய இரக்கங்களினூடாக நீங்கள் செழித்து, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதையே அது செய்கிறது. அது உண்மை. ஆனால் இந்நாட்களில் ஒன்றில், நீங்கள் ஒரு பாவியாயிருந்து, உங்களுடைய ஆத்துமா நழுவிச் சென்றுவிட்டால், அது நியாயத்தீர்ப்புக்குள்ளாகச் சென்று ஆக்கினைக்குட்படுத்தப்படும். அப்பொழுது, நீங்கள் தள்ளப்படுவீர்கள், நீங்கள் மீண்டும் இந்தப் பூமிக்கு திரும்பக் கொண்டுவரப்படும் நாள்வரைக்கும் வேதனைக்குள்ளாவீர்கள். நீங்கள் ஒரு அழிவில்லாத சரீரத்தை, மரிக்க முடியாத ஒரு அழியாமையுள்ள சரீரத்தைப் பெற்றுக்கொள்வீர்கள், அங்கே அழுகையும், புலம்பலும், பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளில் தள்ளப்படுவீர்கள். புழு ஒருபோதும் சாகாத, நெருப்பு ஒருபோதும் அணையாத நரகத்திற்குள் நீங்கள் தள்ளப்படுவீர்கள், நீங்கள் எல்லா காலங்களினூடாகவும் வாதிக்கப்படுவீர்கள். இயேசு அதைக் கூறினார். அது ஒரு கருமையான படம், ஆனால் வேதம் அதைத்தான் கூறியுள்ளது.

46 தேவன் பாவத்தை அவ்வளவாய் ஆக்கினைக்குட்படுத்தி, அதற்கு அப்பேர்ப்பட்ட ஒரு கிரயத்தை செலுத்தி, அந்த அநீதியுள்ள ஆவிகள் மீண்டும் அவிழ்த்துவிடப்படக் கூடுமானால்

என்னவாயிருக்கும்? கடந்த ஆறாயிரம் ஆண்டுகளில் நாம் பெற்றிருந்ததைப் போன்ற மற்றொரு காரியமும் நமக்கு இருக்கும். அது சரியா? மீண்டும் ஒரு சந்தர்ப்பமும் கிடைக்காது.

47 இப்பொழுது நீங்கள், "பாருங்கள், நீங்கள் கல்லறைக்குச் செல்லும்போது, நீங்கள்—நீங்கள் நரகத்திற்குப் போகிறீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்று கூறலாம். உங்களுடைய சரீரம் நரகத்திற்குச் செல்கிறது, அது உண்மை. *நரகம்* என்றால் "பிரிதல்" என்று பொருள். *மரணம்* என்றால் "பிரிவினை" என்று பொருள். உங்களுடைய சரீரம் மரித்து, பிரிகிறது. நீங்கள் இங்கே உங்களுடைய அன்பார்ந்தவர்களை விட்டுச் செல்கிறீர்கள், ஆனால் நாம் பேசிக்கொண்டிருப்பது அதைக் குறித்து அல்ல. "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது." பார்த்தீர்களா?

48 இப்பொழுது, நீங்கள்…நீங்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டுமானால், நீங்கள் கோபமடைந்த தேவனால் நியாயந்தீர்க்கப்படப் போகிறீர்கள். தேவன்…அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை அவர் ஏற்கனவே அறிவித்துவிட்டார். எனவே நீங்கள் அங்குச் செல்வதற்கு முன்பே உங்களுடைய நியாயத்தீர்ப்பு என்னவாயிருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே செய்ய வேண்டிய காரியம் இரட்சிக்கப்பட்டு இந்த மகிமைப்படுத்தப்பட்ட…

49 பாருங்கள். நான்…என் ஆவி…பாருங்கள், நாம் மரித்த ஏதோ ஒன்றல்ல; நாம் உயிரோடிருக்கிறோம். ஒருவேளை—ஒருவேளை என்…இந்த மேசையில் இங்கே…இந்த மரக்கட்டைக்குள், என் விரலில் உள்ள உயிர் இருந்திருந்தால், அந்த மேசை, அது அதை அசைக்க ஒரு அறிவுத்திறனை உடையதாயிருந்தால், அது என்னுடைய விரலை அசைப்பது போல அசைய முடியும். நாம் அந்த விதமான பொருளினால் உண்டாக்கப்பட்டிருக்கவில்லை. நாம் உயிரணுக்களினாலும், ஜீவனினாலும், நார்ச்சத்தினாலும் உண்டாக்கப்பட்டிருக்கிறோம்; அவை எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிற ஒரு ஆவி இங்கே உண்டு. அது எவ்வளவு வேகமாகப் பயணிக்க வேண்டும் என்பதைப் பாருங்கள். இங்கே பாருங்கள்; என்னுடைய கரம் அதைத் தொடுகிறது. இப்பொழுது, சீக்கிரத்தில்…ஒரு எதிர்மறையான மற்றும் ஒரு நேர்மறையான எதிர்விளைவு இருக்க வேண்டும். என்னுடைய விரல் அதைத் தொட்டவுடனே, அது அதை உணருகிறது. அவ்வளவு துரிதமாக அது என் சிந்தைக்கு செல்கிறது, என் சிந்தையோ, "அது குளிராக இருக்கிறது" என்று கூறிவிட்டு, திரும்பிச் செல்கிறது. அது எவ்வளவு துரிதமானது என்று பார்த்தீர்களா? எண்ணத்தைக் காட்டிலும் துரிதமானது, எந்தக் காரியத்தைக் காட்டிலும் துரிதமானது. அது என்ன? அங்கே உயிருள்ள ஏதோ ஒன்று உண்டு, அந்த நரம்பு சிந்தையில் கிரியை செய்கிறது. நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? நரம்பு அதைத் தொட்டு, அதை உணர்ந்து, "இது

குளிராக இருக்கிறது” என்று மனதில் கூறுகிறது. அது குளிர்ச்சியாக இருக்கிறது என்று மனம் கூறுகிறது, ஏனென்றால் அது நரம்பினால் உணரப்படுகிறது. ஓ, என்னே! நீங்கள் ஒரு ஒப்பனையைக் குறித்துப் பேசுகிறீர்கள்.

50 அதன்பின்னர், அவை யாவும்...நாம் நினைக்கும் ஒவ்வொரு சிந்தனையையும் தேவன் எவ்வளவு துரிதமாக அறிந்திருக்கிறார். நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும், அவர் அதைக் குறித்து அறிந்திருக்கிறார்.

எனவே ஒரு விசுவாசி மரிக்கும்போது, அவன் தன்னுடைய சிருஷ்டிகரின் பிரசன்னத்திற்கு, தன்னுடைய தேவனிடத்திற்கு செல்கிறான். பாவி, அவன் மரிக்கும்போது, அவன் சேர வேண்டிய இடத்திற்குச் செல்கிறான். அதன்பின்னர் திரும்புதலில்... இப்பொழுது, நான் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறேன்.

51 ஆனால் இரண்டாம் உயிர்த்தெழுதலில் வரப்போகும் சிலர் உண்டு, அவன் நியாயத்தீர்ப்பில் பாவியோடு நின்று, அவனோடு நியாயந்தீர்க்கப்பட வேண்டும். நான் நிச்சயமாக அதைப் புரிந்து கொள்ள விரும்புகிறேன். பார்த்தீர்களா?

52 இப்பொழுது, அங்கே...முதலாவதாக மணவாட்டியின் வருகை நிகழும். உலகத்தில் ஜனங்கள் இருப்பார்கள்...நான்... நீங்கள் இதனோடு சற்று வித்தியாசப்படலாம், ஆனால் கூர்ந்து கவனியுங்கள். நீங்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட காரணத்தால், நீங்கள் எடுத்துக்கொள்ளப்படுதலில் செல்லப் போகிறீர்கள் என்று அர்த்தமல்ல. அது தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கானதாயுள்ளது, அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்வார்கள். துன்பத்தினூடாகவும், மிகுந்த உபத்திரவத்தினூடாகவும் கடந்து செல்லக்கூடிய மீதியாயிருக்கிறவர்கள் பூமியில் இருப்பார்கள். சபை எடுத்துக்கொள்ளப்படுதலில் எடுத்துக் கொள்ளப்படும்.

53 இங்குள்ள எத்தனை பெண்மணிகள், நீங்கள் ஒரு துண்டுத் துணியை வெட்டப் போகும்போது, நீங்கள் இந்த விதமாகப் பொருட்களை வெளியே கிடத்துகிறீர்கள் என்பதை அறியாமல், மற்றும் உங்கள் மாதிரியை இப்படி அதன் மீது வைத்து, நீங்கள் அந்தப் பொருளை அந்த மாதிரியின்படி சரியாக வெட்டுவீர்கள்? சரிதானே? மற்ற பொருட்களும் அந்த மாதிரியில் உள்ள அதேவிதமான பொருட்கள் தான். அது சரியா? ஆனால் இந்தவிதமாகவே நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதைத் எதிர்கால பயன்பாட்டிற்காக ஒதுக்கி வைக்கலாம், ஆனால் நீங்கள் வெட்டியெடுக்கும் பொருட்கள்...

54 இப்பொழுது, யார் முன் மாதிரியை வைக்கிறார்? தேவனே, தெரிந்து கொள்ளுதலின் மூலம். ஆமென்! தேவன்

தெரிந்து கொள்ளுதலின் மூலம் இந்த மாதிரியை வைக்கிறார். அவர், “இப்பொழுது, நான் உலகத் தோற்றத்திற்கு முன்னே தெரிந்துகொண்டேன்...நான் இவைகளை வைக்கிறேன்...” என்றார். ஏன், இயேசு சீஷர்களிடத்தில், அவர் அவர்களோடு இருப்பதாகக் கூறினார், அவர் அவர்களைத் தெரிந்து கொண்டார், உலகத் தோற்றத்திற்கு முன்பே அவர்களை அறிந்திருந்தார். அது சரிதானே? எனவே தேவன் முன்மாதிரியை வைக்கிறார். இப்பொழுது, எடுத்துக் கொள்ளப்படுதலில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் செல்வார்கள். மேலும், நல்ல ஒரு கூட்ட ஜனங்கள் இருப்பார்கள், செம்மையான, பரிசுத்த ஜீவியம், தேவனால் இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் எடுத்துக் கொள்ளப்படுதலில் இருக்கமாட்டார்கள்; அவர்கள் இரண்டாம் உயிர்த்தெழுதலில் வருவார்கள், ஏனென்றால்...

55 ஓ, நான் இங்கே உங்களுக்கு ஒரு காரியத்தை உண்மையாகவே தெளிவாகக் கூறினால், நீங்கள் என்னோடு கோபப்படமாட்டீர்கள் என்று நான்—நான் நம்புகிறேன். பார்த்தீர்களா? அதைச் செய்யாதீர்கள். நான்—நான் அதைக் கூற வேண்டும், ஏனென்றால் நான்...அதைக் கூற எனக்குத் தொடர்ந்து மூச்சுத் திணறல் உண்டாகிறது (உங்களுக்குப் புரிகிறதா?) பாருங்கள். இப்பொழுது பாருங்கள். அதன்பின்னர், நான் இதைக் கூறப்போகிறேன்: விசுவாசத்தினால் நீதிமானாகுதலை விசுவாசிக்கிற ஒரு ஜனம் உண்டு (புரிகிறதா?), அவர்கள் ஒரு நல்ல, சுத்தமான, பரிசுத்த வாழ்க்கை வாழ்கின்றனர்; அவர்களும் கூடப் பரிசுத்தமாகுதலை விசுவாசித்து, பெற்றுக்கொள்கிறார்கள்...

56 யூதாஸ்காரியோத்தைப் பாருங்கள். யூதாஸ்காரியோத்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தபோது, அவன் நீதிமானாக்கப்பட்டான் யூதாஸ்காரியோத், தன்னுடைய சொந்த இரட்சகராக அவரை ஏற்றுக்கொண்டான். யூதாஸ்காரியோத்து யோவான் 17:17-ல் பரிசுத்தமாக்கப்பட்டான் என்றும், மத்தேயு 10-ல் வெளியே சென்று பிசாசுகளைத் துரத்த அதிகாரம் அளிக்கப்பட்டது என்றும் உள்ளது. யூதாஸ்காரியோத்து வியாதியஸ்தரை சுகப்படுத்தி, பிசாசுகளைத் துரத்தியபிறகு திரும்பி வந்தான், நீங்கள் எப்போதாவது கண்டிருக்கிற எந்த நல்ல பரிசுத்த உருளையையும் போல அவன் களிகூர்ந்து, சத்தமிட்டு திரும்பி வந்தான். அது சரியா? வேதம் அவ்வண்ணமாய்க் கூறுகிறது. ஆனால் அவன் பெந்தெகொஸ்தேவிற்கு வந்தபோது, அவன் தன்னுடைய சுபாவத்தை காண்பித்தான். இப்பொழுது அந்த—அந்த ஆவியைக் கவனியுங்கள்.

57 இன்றைக்கு உலகத்தில் ஜனங்கள் இருக்கிறார்கள், நீதிமானாகுதலை விசுவாசிக்கும் நல்ல கிறிஸ்தவ ஜனங்கள், அவர்களில் அநேகர், ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கானோர் நீதிமானாக்கப்படுதலை விசுவாசிக்கின்றனர். ஆனால் பரிசுத்தமாக்கப்படுதலோடு அவர்களுக்கு எந்தச் சம்பந்தமும்

இருக்காது. நாம் அதைப் பிரஸ்பிடேரியன், எபிஸ்கோபலியன் போன்றவர்கள் என்று கூறலாம். அவர்கள் நீதிமானாக்கப்படுதலை விசுவாசிக்கிறார்கள்; அதைப் பிரசங்கிக்கிறார்கள். அது நல்லதுதான்; அவர்கள் சரியாயிருக்கிறார்கள்.

58 ஆனால் இப்பொழுது, நசரேயன்கள், யாத்திரீக பரிசுத்தர், சுயாதீன மெதோடிஸ்டுகள் பரிசுத்தமாகுதலுக்குள் நகர்கின்றனர். அவர்கள் பரிசுத்தமாக்கப்படுதலை விசுவாசிக்கின்றனர். சரியாக! அவர்கள் சரியாயிருக்கிறார்கள். அவர்கள் ஜெயங்கொண்டு, சத்தமிட்டு, கர்த்தரைத் துதிக்கிறார்கள். அவர்கள் சரிதான்; அவர்கள் சரியாயிருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம், வல்லமை, அடையாளங்களைக் குறித்து அவர்களில் ஒருவரிடத்தில் பேசுங்கள், அவர்கள் தங்களுடைய நிறத்தை அங்கே காண்பிப்பார்கள். “எனக்கு அது ஒன்றும் வேண்டாம். நான் நம்பவில்லை…” என்று கூறலாம். சரி, என்னுடைய அருமையான நசரேய ஜனங்களும் கூட, ஒரு மனிதன் அந்நிய பாஷைகளில் பேசுவது பிசாசினால் உண்டானது என்று விசுவாசிக்கிறார்கள். மேலும், சகோதரனே, நீங்கள் அதைச் செய்கிறீர்கள், நீங்கள்…

59 ஏன், அவர்கள் சூடான் மிஷனரி சபையின் தலைவரான வேத பண்டிதர் ரீட்ஹெட் அந்நிய பாஷைகளில் பேசின காரணத்தால் அவரை வெளியேற்றினர். அவர்கள், “நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது” என்றனர்.

60 அப்பொழுது நான், “உங்களால் பவுலைப் போலப் பிரசங்கிக்க முடியாது. நீங்கள் பவுலின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள முடியாது, ஏனென்றால் பவுல், ‘அந்நிய பாஷைகளில் பேசுவதை தடை செய்யாதிருங்கள்’ என்று கூறிவிட்டான்” என்று கூறினேன். அது உண்மை. ஆனால் அவர்கள்— அவர்கள் அது பிசாசினால் உண்டானது என்று கூறுகிறார்கள். அவர்கள் ஏராளமான போலியானவைகளை அங்கே கொண்டு செல்வதைக் கண்டிருக்கிறார்கள். பார்த்தீர்களா? ஆனால் ஒரு நீதிமானாக்கப்பட்ட, பரிசுத்தமாக்கப்பட்ட சபை உண்டு; ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பரிசுத்தமாகுதலிலிருந்து ஒரு வேறுபட்ட கிரியை என்பதை மறுதலிக்கின்றனர். ஆனால் அது— அது ஒரு வித்தியாசமான கிரியையாய் உள்ளது. நிச்சயமாகவே அப்படித்தான் உள்ளது.

61 கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து மூன்று மூலக்கூறுகள் தோன்றின. அவருடைய சரீரத்திலிருந்து வந்த அதே மூலக்கூறுகளையே நாம் அவருடைய சரீரத்திற்குள் செல்ல உபயோகிக்கிறோம். ஜலம் (அது சரியா?), இரத்தம் (அது சரியா?), மற்றும் ஆவி இருந்தது. வேதவாக்கியம் இயேசுவைப் பற்றி, “பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள். ஆனால் பூலோகத்தில் சாட்சியிடுகிறவைகள்

மூன்று; அவைகள் ஒன்றல்ல," என்றார், அவர், "ஆனால் அவைகள் ஒன்றாக ஒருமைப்பட்டிருக்கிறது: ஜலம், இரத்தம், ஆவி" என்றார். அது சரியா?

62 இப்பொழுது, குமாரன் இல்லாமல் நீங்கள் பிதாவைக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெறாமல் குமாரனைக் கொண்டிருக்க முடியாது, ஏனென்றால்…நீங்கள் பரிசுத்தமாக்கப்படாமலேயே நீதிமான்களாக்கப்பட முடியும். நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறாமல் இருக்க முடியும். பார்த்தீர்களா? அது உண்மை. அது வேத வாக்கியமாயுள்ளது. அவர், "பூமியில் சாட்சி பகருகிற இந்த மூன்றும், ஜலம், இரத்தம், ஆவி அவைகள் ஒருமைப்பட்டிருக்கிறது" என்று கூறினார். பார்த்தீர்களா? அவைகள் ஒன்றல்ல, ஆனால் அவைகள் ஒருமைப்பட்டிருக்கிறது, ஏனென்றால் அது அளவுடன் கூடிய ஒரே ஆவியாய் இருக்கிறது. தேவன் நமக்கு ஆவியை அளவோடு கொடுக்கிறார்.

63 இப்பொழுது, லூத்தர், நீதிமானாக்கப்படுதலின் கீழ், அவர் அதைத்தான் பிரசங்கித்தார். அது சரியா? லூத்தர், "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்று பிரசங்கித்தார். அவர் ஒரு மகத்தான செய்தியை உடையவராயிருந்தார். அது பரிசுத்த ஆவியின் ஒரு பாகமாயிருந்தது. அதன்பின்னர் லூத்தர், தேவன் தம்முடைய சபையை எழுப்பி, அதை மகத்தானதாக (ஓ, என்னே!) அனுப்பப்போகிறார் என்ற செய்தி வந்தபோது, லூத்தர், "ஓ, நாங்கள் அதை இங்கே பெற்றுள்ளோம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்" என்றார்.

64 ஆனால் ஜான் வெஸ்லியோ, "ஓ, இல்லை!" என்றார். அவரும், ஜார்ஜ் ஒயிட் ஃபீல்டும் மற்றவர்களும், அவர்கள், "நாங்கள் பரிசுத்தமாக்கப்படுதலில், அதாவது கிருபையின் இரண்டாம் திட்டவட்டமான கிரியையாக அதை விசுவாசிக்கிறோம்" என்றனர். அது சரியா? அவர்கள் இரத்தத்தைப் பிரசங்கித்தனர். பாருங்கள், லூத்தர் முன்னேறிச்செல்ல விரும்பவில்லையென்றால், தேவன் அதை வெஸ்லியன் மெத்தோடிஸ்டுகளுக்கு அளித்தார். பார்த்தீர்களா? அவர்கள் அதை உடையவர்களாயிருந்தனர். அவர்கள் உலகமெங்கும் பரவியிருந்த ஒரு எழுப்புதலையும், உண்மையான சபையையும் உடையவர்களாயிருந்தனர்.

65 சரி, இப்பொழுது, அந்த நேரம் வரும்போது…இப்பொழுது, பரிசுத்த ஆவியானவர் அடையாளங்கள், அற்புதங்கள் மற்றும் அற்புதங்களின் அத்தாட்சியாக வருகிறார். இப்பொழுது, வெஸ்லி இதனோடு இணங்க விரும்பவில்லை. இப்பொழுது, வெஸ்லி இந்த நேரத்தில் பூமியில் இருந்திருந்தால், மார்டின் லூத்தர் இந்த நேரத்தில் பூமியில் இருந்திருந்தால், அவர்கள் அதனோடு இணங்குவார்கள், ஆனால் அவர்கள் இரண்டாம் சுற்றில் நான்கு அல்லது ஐந்து

சுற்று அப்போஸ்தலர்களைக் கடந்து சென்றனர், மேலும் அவர்கள் எல்லாவற்றையும் வலைவீசி அள்ளிச் செல்கிறார்கள்.

66 இப்பொழுது, பெந்தேகோஸ்தேயினர் அந்நிய பாஷைகளில் பேசுவதை ஏற்றுக்கொண்டு, அதை விசுவாசித்தனர். அதன்பின்னர் அவர்கள் அதை "ஆரம்ப அத்தாட்சியாக" மாற்றிவிட்டனர், ஒவ்வொருவரும் அந்நிய பாஷைகளில் பேச வேண்டியதாயிருந்தது. அது ஒரு பிழை. ஆனால் இப்பொழுது—இப்பொழுது அவர்கள் திரும்பி வந்து...அவை தேவனால் அளிக்கப்பட்ட விசேஷ குணங்கள். நான் நீலக் கண்களை உடையவனாயிருப்பதை என்னால் தவிர்க்க முடியாதது போல, அல்லது...தேவன் அதைத் தந்தருளுவார். அது சபையில் உள்ள வரங்கள் மட்டுமே. தேவன் அவற்றை நியமித்தார். "தேவன் சபையில் நியமித்திருக்கிறார்..." புரிகிறதா?

67 இப்பொழுது. ஆனால் அவர்கள் அதனோடு சேர்ந்து வரும்போது...இப்பொழுது, அவர்கள் ஒரு மகத்தான ஆசீர்வாதத்தை உடையவர்களாயிருந்தனர், அது லூத்தரன் அல்லது மெதடிஸ்ட் இரண்டிற்கும் அப்பால் சென்றது. இப்பொழுது, அவர்கள், பெந்தெகொஸ்தேயினர், மெத்தோடிஸ்ட்டைக் காட்டிலும் அல்லது மற்றவர்களைக் காட்டிலும், மோசமான நிலையில் இருக்கும் வரையில் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு வழியில் ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டனர். அதன்பின்னர், அவர்கள் ஒரு இடத்தை அடைந்தனர், அங்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் சுற்று...அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசத் துவங்கி ஏறக்குறைய நாற்பது வருடங்களாகிவிட்டன. ஆனால் இந்தத் தேவனுடைய விருட்சத்தில் ஒன்பது வித்தியாசமான கனிகள் உள்ளன. இப்பொழுது, இந்தக் கனிகளில் எதையாவது நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். பார்த்தீர்களா? தேவன் அவைகளை அனுப்பியிருக்கிறார், ஆனால் அவை யாவும் மரத்திலிருந்து தோன்றுகின்றன.

இப்பொழுது நீதிமானாக்கப்படுதல், அதைப் பாருங்கள்.

68 இந்தக் காலைப் பாடத்தைப் பாருங்கள். நியாயத்தீர்ப்பு அமைக்கப்பட்டபோது, புஸ்தகங்கள் திறக்கப்பட்டபோது... இப்பொழுது, இயேசு ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களுடன் வந்தார், அதன்பின்னர் நியாயத்தீர்ப்பு அமைக்கப்பட்டது. இங்கே அவர்கள் யாவரும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பைச் சுற்றிலும் இருக்கின்றனர் (நாம் அதனோடு வேதவாக்கியத்தை ஆராய்ந்தோம்), புத்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவ புத்தகமாகிய வேறொரு புத்தகம் திறக்கப்பட்டது. எடுத்துக் கொள்ளப்படுதலில் இருந்தவர்கள் அவர்களை நியாயந்தீர்த்துக் கொண்டிருந்தனர். அது சரியா? பரம வீட்டிற்குச் சென்று, தங்களுடைய மகிமையடைந்த சரீரங்களை பெற்றுக்கொண்டு, ஆயிரவருட அரசாட்சி முழுவதும் ஜீவித்த ஜனங்கள், இங்கே வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில், அவர்களை நியாயந்தீர்த்துக் கொண்டிருந்தனர்.

அவர் செம்மறியாடுகளை வெள்ளாடுகளிலிருந்து பிரிப்பதாகக் கூறினார்.

இப்பொழுது, நீங்கள் இங்கே, "ஏன், இப்பொழுது பாருங்கள்" என்று கூறலாம். நீங்களோ, "அது மேலே வந்துவிட்டதா…சகோதரன் பிரான்ஹாம், அதைக் குறித்து என்ன?" என்று கேட்கலாம். வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில்.

69 "எடுத்துக் கொள்ளப்படுதலைக் குறித்து என்ன?" பாருங்கள், எடுத்துக் கொள்ளப்படுதலின் நேரத்தில்…இயேசு அதை ஒரு உவமையாகப் போதித்தார். அவர் அதை அநேக பலவழிகளில் போதித்தார். இங்கே ஒரு வழி உள்ளது. பத்து கன்னிகைகள் கர்த்தரை சந்திக்க புறப்பட்டுச் சென்றனர் என்று அவர் கூறினார். எனவே-… அவர்கள் யாவரும் கன்னியர்களாயிருந்தனர், ஆனால் சிலர் தங்கள் தீவட்டிகளில் எண்ணெயைப் பெற்றிருந்தனர், சிலர் எண்ணெயைப் பெற்றிருக்கவில்லை. அது சரியா? மணவாட்டி…இப்பொழுது எண்ணெய் என்னவாயிருந்தது? *எண்ணெய்* பரிசுத்த ஆவியாய் இருந்தது; வேதம் அவ்வண்ணமாய் கூறியுள்ளது. இப்பொழுது பாருங்கள். அவர்கள் கன்னியர்களாயிருந்தனர். இப்பொழுது, *கன்னிகை* என்பதன் பொருள் என்ன? "பரிசுத்தமான, சுத்தமான, பிரிக்கப்பட்ட, பரிசுத்தமாக்கப்பட்ட." அது சரியா?

70 நான் இங்கே ஒரு சிறிய கண்ணாடியை வைத்திருந்தால், என்னவென்று உங்களுக்கு நான் காண்பிப்பேன்…இங்கே, உதாரணமாக இங்கே இந்தப் புட்டியைப் போன்றது, அது காலியாக இருந்தால், நான் அதை எடுத்தேன், அது மிகவும் அழுக்காக இருந்தது…நான் அதைப் பயன்படுத்த விரும்புகிறேன். சரி இப்பொழுது, நான் முதலில் செய்ய விரும்புவது நீதிமானாக்கப்படுதலே. நான் அதை உபயோகிக்க வேண்டும் என்ற காரணத்தால் நான் அதை எடுக்கிறேன். அது அழுக்காக உள்ளது; நான் அதை ஒரு பன்றிப்பட்டியில் அல்லது அது எங்கே இருந்ததோ அங்கே கண்டேன். இப்பொழுது, நான் சரியான நபராக இருந்தால், பாருங்கள், நான் அதைப் பயன்படுத்த வேண்டுமென்றால், அதில் சுத்தமாக எதையாவது வைக்க நான் விரும்பமாட்டேன். நான்—நான் அதை முதலில் சரி செய்ய வேண்டும். இப்பொழுது, அதைச் சுத்தம் செய்து, அதைப் பரிசுத்தப்படுத்துவதே மிகச் சிறந்த காரியம். அது சரியா? இப்பொழுது, *பரிசுத்தமாக்கப்படுதல்* என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? "சுத்திகரிக்கப்பட்டு ஆராதனைக்காக ஒதுக்கி வைக்கப்படுதல்." பண்டைய ஆலயத்தின் பாத்திரங்கள் சுத்தம் செய்யப்பட்டு சேவைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டன.

71 இப்பொழுது, அங்குதான் சபை உள்ளது: தேவன் லூத்தரன் காலத்தினூடாகத் அவர்களை நீதிமானாக்கப்படுதல்; வெஸ்லி காலத்தில், அவர் அவர்களைப் பரிசுத்தமாக்கினார்; இக்காலத்தில் அவர் அவர்களை நிரப்பி அவர்களை எடுத்துக் கொண்டார். பார்த்தீர்களா? அவர் அவர்களுக்குள் ஜீவனை வைக்கிறார். பரிசுத்த

ஆவியினூடாக அவருடைய ஜீவியம், இது…பரிசுத்த ஆவியானவர் அவர்களை மேலே எடுத்துக் கொண்டார்; பரிசுத்த ஆவியானவர் அவர்களைப் பரிசுத்தமாக்கினார்; பரிசுத்த ஆவியானவர் அவர்களை நிரப்பினார். பார்த்தீர்களா? எல்லாமே ஒரே சபைதான்.

ஆனால் இப்பொழுது பாருங்கள். இப்பொழுது இந்நாளில்…

72 இப்பொழுது, லூத்தர், வெஸ்லி மற்றும் அவர்களில் அநேகர் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்வார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட ஆவியின் பாகத்தை உடையவர்களாயிருந்தனர்; அவர்கள் அதை விசுவாசித்தனர்.

73 இப்பொழுது, எடுத்துக் கொள்ளப்படுதலில்…இன்றைக்கு அந்த ஸ்தாபனங்களுக்குள் சென்ற ஜனங்கள் முன்னோக்கிச் செல்லவில்லை. அது ஒரு…அங்கே ஒரே ஒரு ஸ்தாபனம் மாத்திரமே இருந்து வருகிறது, அது தேவனுடைய சபையாகும்; அது தொடர்ந்து அதேவிதமாகவே நகர்ந்துள்ளது. ஆனால் இந்த ஸ்தாபனங்கள் இந்தக் காரியங்களை அந்த விதமாக உடைத்தெறிந்துள்ளன. இன்றைக்கு அநேக ஜனங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பார்த்து, அது அர்த்தமற்றது என்று கூறுவார்கள். ஆனால் அதே சமயத்தில் அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறார்கள்; அதே சமயத்தில் அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ, “ஓ, அது அவ்வாறே இருந்து கொண்டேயிருக்கிறது, அந்தக் காரியம்” என்கின்றனர்.

74 பிசாசு எல்லாவிதமான பயமுறுத்தும் பொம்மைகளையும் வெளியே வைத்திருக்கிறான் என்று எனக்குத் தெரியும். அங்கேதான் பயமுறுத்தும் பொம்மைகளுள்ள இடத்தில்தான் நல்ல ஆப்பிள்களை நீங்கள் கண்டறிகிறீர்கள். அது உண்மை. நேராக அதன் பின்னால் சென்று, போய் ஆப்பிள் பழங்களைப் புசியுங்கள். புரிகிறதா?

75 இப்பொழுது, இது…அப்பொழுது தேவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு…அவர் மகிமைப்படுத்த தம்முடைய சபையை அமைத்தார். இரண்டாம் வருகையில், இங்கே சபை திரும்பி வருகிறது, மணவாட்டி. இப்பொழுது கவனியுங்கள். அவர்கள் உபத்திரவ காலத்தினூடாகச் செல்கிறார்களா என்று பாருங்கள். அவர், “இந்தக் கன்னிகைகள், அவர்கள் வந்து, ‘உங்களுடைய எண்ணெயில் எங்களுக்குக் கொடுங்கள்’என்றனர்’” என்றார்.

“மணவாளன் வருகிறார்!” என்ற சத்தம் ஒலித்தது, “இதோ மணவாளன் வருகிறார். நீங்கள் அவரைச் சந்திக்கப் புறப்பட்டுப் போங்கள்” என்றது.

இந்தக் கன்னிகைகள், கன்னிகைகள், பரிசுத்தமானவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் (அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்), பரிசுத்த, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல்

பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்கள், அவர்கள், “எங்களுக்கு எண்ணெய் கொடுங்கள்!” என்றனர்.

76 அப்பொழுது சபையோ, “எங்களுக்குப் போதுமானது இருக்கிறது. நீங்கள் போய் ஜெபியுங்கள்” என்றது. ஆனால் அப்பொழுது அது மிகவும் காலதாமதமாகிவிட்டது. ஆகையால், சபையானது கலியாணத்திற்குள்ளாகச் சென்றது, இந்த மற்றவர்களும் புறம்பான இருளில் தள்ளப்பட்டனர் (அது சரியா?), அங்கே அழுகையும் புலம்பலும் பற்கடிப்பும் உண்டாயிருந்தன; அவர்கள் துன்புறுத்தல்களினூடாகச் சென்று, பாடுபட்டு, மரித்தார்கள்.

77 இயேசு பூமிக்குத் திரும்பினார். ஆயிரவருட அரசாட்சி தொடங்கியது, அவருடன் ஒரு ஆயிரம் ஆண்டுகள். நீதியுள்ளவர்களும், அநீதியுள்ளவர்களும் வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு மனிதனையும் நியாயந்தீர்த்தனர். வெள்ளாடுகள் ஒரு பக்கத்திலும், செம்மறியாடுகள் மற்றொரு பக்கத்திலும் இருந்தன. அதன்பின்னர் தேவன் வந்து பூமி முழுவதிலும் உள்ள சபையை ஒரு முகாம் கூட்டத்திற்காக அழைத்துச் சென்றார், அங்கே நாம் யாவரும் நம்முடைய அன்பார்ந்தவர்களோடு ஒன்று கூடுகிறோம். பார்த்தீர்களா? அதுதான் வித்தியாசம்.

78 இப்பொழுது, இங்குள்ள இந்த ஜனங்கள்…நிச்சயமாகவே நாம் மரிக்கும்போது, நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்தால், நாம் கிறிஸ்து இயேசுவாகிய, அப்பால் உள்ள அந்த மகத்தான சரீரத்தோடு இருக்கப் போகிறோம். நாம் பாவிகளாயிருந்தால், நாம் அந்த மகத்தான அவிசுவாசிகளோடு சேர்ந்து இருப்போம்; நம்முடைய பாகம் மாய்மாலக்காரர்கள் போன்றவர்களோடு நரகத்தில் இருந்தது என்று தேவன் கூறினார். ஆமென்! சரியாகத் தெளிவாக இல்லாமலிருக்கலாம்.

ஆனால், நாம் இப்பொழுது கண்டறிய முடியுமா என்று பார்ப்போம்…இங்கே ஒரு சிறு குறிப்பு.

**16. யாத்திராகமம் 24-ஆம் அதிகாரம்…அதாவது, 4-ஆம் அதிகாரம் மற்றும் 24-ஆம் வசனத்தைத் தயவு கூர்ந்து விளக்கவும். தேவன் மோசேயையோ அல்லது அவனுடைய குமாரனையோ கொல்ல வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருந்தார் என்ற—இந்த வேதவாக்கியம் எதைப் பொருட்படுத்துகிறது? ஏன்?**

79 யாத்திராகமம் 4:24-ல் அது எங்கே உள்ளது என்பதை நாம் அறிவோம். அது ஒரு நல்ல கேள்வி. இப்பொழுது, நாம் இங்கே சற்று நேரம் இங்கே அதை வாசிப்போம். யாத்திராகமம் 4 மற்றும் 24:

> *வழியிலே தங்கும் இடத்தில் **கர்த்தர்** அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லப்பார்த்தார்.*

அந்தக் கதை எத்தனை பேருக்கு நினைவிருக்கிறது? இப்பொழுது, தேவன் ஆபிரகாமுக்கு, மோசேக்கு முன்னிருந்த தலைமுறைகளுக்கு விருத்தசேதனத்தின் அடையாளத்தைக்

கொடுத்தார். ஒவ்வொரு யூதனும் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்பது தேவன் செய்த உடன்படிக்கையாயிருந்தது. அது சரியா? ஒவ்வொரு மனிதனும் இருக்க வேண்டும்…அது ஒரு அடையாளமாயிருந்தது.

80 நாம் இன்றைக்கு விருத்தசேதனம் பண்ணப்பட்டிருக்கிறோமா? மாம்சத்தினால் அல்ல, பரிசுத்த ஆவியினாலே.

81 இப்பொழுது. இப்பொழுது, தேவன், “ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும்” என்ற இந்தக் கட்டளையை அளித்தார். தேவன், அவர் அங்குச் சென்று இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்கும்படி மோசேயை அழைத்தபோது, மோசே தன் மகனுக்கு அந்த மீட்பின் அடையாளத்தை நிறைவேற்றவில்லை. நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா?

82 நான், “இப்பொழுது சபையே நீங்கள் எல்லோரும், நீங்கள் ஒவ்வொருவரும்—நீங்கள் தண்ணீரினால் இங்கே ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள், நாங்கள் உங்களை சபை அங்கத்தினராக சேர்த்துக் கொள்கிறோம். நாம் யாவரும் ஒன்று சேர்ந்து மகிமைக்கு செல்லப் போகிறோம்” என்று சொல்வது போல இருக்கும். ஏன், சகோதரனே, அது வேதவாக்கியமல்ல. நீங்கள் மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியின் விருத்தசேதனம் பண்ணப்பட்டாலொழிய…நீங்கள் இருக்க வேண்டும். நீங்கள் எவ்வளவு நல்லவராக இருந்தாலும், நீங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், உங்களுடைய பெற்றோர் எவ்வளவு நல்லவர்களாக இருந்தார்கள் என்பது எனக்குப் பொருட்டல்ல, நீங்கள் பரிசுத்த ஆவியினால் மீண்டும் ஒரு தனிப்பட்ட நபராகப் பிறந்திருக்கவில்லையென்றால், நீங்கள் ஒருபோதும் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குள் செல்லமாட்டீர்கள். பார்த்தீர்களா? நீங்கள் போக முடியாது. அதுவே மீட்பின் அடையாளம், விருத்தசேதனம்; விருத்தசேதனம் பரிசுத்த ஆவியினால் உண்டாகிறது. இப்பொழுது தேவன்…

83 கேள்வி கேட்டவர் இதைக் கேட்டார்: “மோசேயையோ அல்லது அவனுடைய குமாரனையோ கொல்ல வேண்டுமென்று தேவன் குறி வைத்ததாக இந்த வேதவாக்கியம் பொருட்படுத்துகிறதா? ஏன்?” தேவன் மோசேயைத் பின் தொடர்ந்து கொண்டிருந்தார். சிப்போராள் மாத்திரமே அவனை அங்கே காப்பாற்றியிருந்தாள். ஏனென்றால் சிப்போராள் ஒரு கருக்கான கல்லை எடுத்து, போய், அவளுடைய குழந்தையின் நுனித்தோலை வெட்டி, அதை மோசேக்கு முன்பாக எறிந்து, “நீ எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன்” என்றாள். அது சரியா?

84 தேவன் மோசேயின் ஜீவனை எடுத்திருப்பார். ஆனால் ஒருக்கால் ஒரு தூதன் அங்கே நின்று கொண்டிருந்திருக்கலாம், அவன், “சிப்போராளே! அதைச் சீக்கிரமாகப் பிடித்துக்கொள்!” என்றான். பார்த்தீர்களா?

85 சிப்போராள் சென்று அந்தக் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்தாள். மேலும், "மோசே, நீ மற்ற ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும், உன்னுடைய பயணத்தைக் குறித்தும் அவ்வளவு—மிகவும் அக்கறை கொண்டிருக்கிறாய், அதனால் உன்னுடைய சொந்த பையன் விருத்தசேதனம் பண்ணப்படவில்லை" என்று கூறினாள்.

நான் பலமுறை யோசிப்பதுண்டு…சில சமயங்களில், "ஓ, தேவனுக்கு மகிமை. நான் ஒரு *குறிப்பிட்ட* காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். நான் ஆப்பிரிக்காவிற்கு, இந்தியாவிற்கு செல்ல வேண்டும் என்று அவர் விரும்புகிறார்" என்று கூறின ஜனங்களைச் சந்தித்திருக்கிறேன்.

86 நான், "பால்காரன் இரட்சிக்கப்பட்டானா என்று நீங்கள் எப்போதாவது கேட்டதுண்டா? நீங்கள் எப்பொழுதாவது செய்தித்தாள் போடும் நபரிடம், அவன் மறுபடியும் பிறந்திருக்கிறானா என்று கேட்டதுண்டா? உன்னுடைய அண்டை வீட்டுக்காரரைப் பற்றி என்ன, அவர்கள் இரட்சிக்கப்பட்டார்களா?" என்று கேட்டுள்ளேன். பார்த்தீர்களா? இப்பொழுது, அதுதான் கேள்வி. பார்த்தீர்களா? அது உங்களுடைய இருதயத்தில் இருக்குமானால்…

87 இங்கே சில காலத்திற்கு முன்னர் இங்கே புளோரிடாவில் ஒரு ஸ்திரீ என்னைச் சந்தித்தாள். அந்தச் சிறிய ஸ்திரீ, எனக்கு எந்த வழியும் இல்லை…நான் நீதிபதி அல்ல. ஆனால் ஒரு சிறு பிரசங்கியார் இங்கே இந்த மேடையில் பிரசங்கித்து வந்துள்ளார். மற்றொரு தேசத்தில் இருந்த அந்தச் சிறு நபருக்குத் திருமணமாகி மனைவியும், மூன்று அல்லது நான்கு பிள்ளைகளும் இருந்தனர். இந்த ஸ்திரீ ஒரு விதவையாயிருந்தாள். அவர்கள் டெக்ஸாஸிலிருந்து இங்கே ஒரு பெரிய காடிலாக் காரில் ஒன்றாக வந்திருந்தனர். அந்த ஸ்திரீ உள்ளே வந்தாள். அவள் எப்படி வேண்டுமானாலும் உடை உடுத்திக்கொள்ள அவளுக்கு உரிமையுண்டு, அது என்னை ஒன்றும் செய்யவில்லை; ஆனால் ஒரு கிறிஸ்தவ ஸ்திரீ என்ற முறையில் அவள் அதைப் போன்ற உடை உடுத்தவில்லை. அவள் (ஓ, என்னே!), அவள்…மிகப்பெரிய நீளமான…அந்தக் காதணிகளை (நீங்கள் அதை என்னவென்று அழைத்தாலும்) இப்படி தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள், அவள் தன்னுடைய வாயில் உண்மையாகவே ஏராளமான ஒப்பனைப் பொருட்களைக் கொண்டிருந்தாள்; மற்றும்—மற்றும்—மற்றும் அவளுடைய புருவங்கள் வெட்டப்பட்டிருந்தன, அவள் மற்ற புருவங்களைப் பென்சிலால் பூசிக்கொண்டிருந்தாள். மேலும் அவள், "சகோதரன் பிரான்ஹாம்" என்று கூறி, "கர்த்தர் என்னை ஒரு அந்நிய தேசத்திற்கு அழைக்கிறார்" என்றாள்.

நான், "அவர் அழைக்கிறாரா?" என்று கேட்டேன்.

"ஆம்!" அதற்கு அவள், "நான் இந்த மனிதனோடு செல்லப் போகிறேன்" என்றாள்.

மேலும் நான், "சரி, கர்த்தர் உங்களை அழைத்தால், சரி, சரி" என்றேன். (ஆனால் அவர்களுடைய கனியால்...எனக்கு அப்படித் தோன்றவில்லை...புரிகிறதா?)

அப்பொழுது அவள், "நீங்கள் கர்த்தரை விசுவாசிக்கவில்லையா...?" என்று கேட்டாள்.

88 நான், "இப்பொழுது, என்னைக் கேட்காதீர்கள். கர்த்தர் உங்களிடத்தில் கூறியிருந்தால், கர்த்தர் உங்களிடத்தில் செய்யும்படி கூறினதை நீங்கள் செய்யுங்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை, எனக்காக, நான் அப்படி நினைக்கவில்லை. நான் உங்களிடம் நேர்மையாக இருக்கிறேன்" என்றேன்.

அதற்கு அவள், "சரி, நீங்கள் ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

நான், "முதலாவது காரியம், நீங்கள் விவாகமான ஒரு ஸ்திரீயாக இந்த விவாகமான மனிதனுடன் இங்கே நகரத்தில் ஒன்றாகத் தங்கியிருப்பது நல்லதாகத் தெரியவில்லை. ஏதாகிலும் நிந்தையைக் கொண்டு வந்தால், அது இதுதான். புரிகிறதா?" என்று கூறினேன். நான், "இப்பொழுது, முதல் காரியம்..." என்றேன்.

89 இப்பொழுது, அந்த ஸ்திரீக்கு என்ன சம்பவித்திருந்தது? அதே காரியம் நடந்திருக்கும்...அவள் பரிசுத்த ஆவியைப் பெறாமலேயே தொடர்ந்து குழப்பிக் கொண்டிருந்தாள், இன்றைக்கு அப்பாலுள்ள அந்தப் பெண்மணி என்னை அழைத்து, அந்த மனிதனை விவாகம் செய்து கொள்ள விரும்பினது போல, தன் கணவனை விட்டுவிட்டு, அந்த மனிதனை மணந்துகொள்ளப் போவதாகக் கூறினாள். ஒருவேளை ஒருமுறை தேவனோடு தொடர்பு கொண்டிருந்த வேளையில், அவள் அப்படிப்பட்ட ஓர் இடத்திற்கு வந்திருந்தாள், ஆனால் உலகத்தின் காரியங்களை இச்சித்துக் கொண்டிருந்தாள். நான் அவளிடத்தில் கேட்டேன்; நான், "நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" என்று கேட்டேன்.

அவள், "இன்னும் பெறவில்லை, ஆனால் நான் அதைத் தேடிக்கொண்டிருக்கிறேன்" என்றாள்.

90 நான், "நீங்கள் முதலில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது அவர் உங்களுக்கு எப்படிப்பட்ட கணவனை உடையவராயிருக்க வேண்டும் என்று அவர் கூறுவார்" என்றேன். அது உண்மை. பார்த்தீர்களா?

நீங்கள்—நீங்கள்...அதுதான் அது. நீங்கள் அவ்வாறு செய்யவில்லையென்றால், அப்பொழுது நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்துப் போவீர்கள். இன்றிரவு தேவன் அதிகமாகத் தேடிக்கொண்டிருக்கிறார், அதாவது அவர் அவர்களுடைய

இருதயங்களை அநேக முறை தட்டியிருக்கிறார். [சகோதரன் பிரான்ஹாம் பிரசங்க பீடத்தைத் தட்டுகிறார்—ஆசி.] இந்தச் சமயங்களில் ஒன்றில் அவர் கதவை மூடப்போகிறார், இரக்கம் போய்விடும். புரிகிறதா?

91 நிச்சயமாகவே, தேவன் அவனுடைய ஜீவனை எடுத்திருப்பார். அவர் அவரைத் தேடினார் என்று அவர் கூறினார். வேதம் எவ்வாறு வாசிக்கப்படுகிறது என்பதைக் கவனியுங்கள்:

> *வழியிலே தங்கும் இடத்தில்* ***கர்த்தர்*** *அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லப்பார்த்தார்.* (மோசே. இப்பொழுது கவனியுங்கள்.)
>
> *அப்பொழுது சிப்போராள் கருக்கான ஒரு பாறையை—கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து: நீர் எனக்கு இரத்த சம்பந்தமான புருஷன் என்றாள்.*

92 அது உண்மை. இப்பொழுது, தேவன் குமாரனை தேடிக் கொண்டிருக்கவில்லை. தேவன்...அந்தப் பரிதாபமான சிறு குழந்தைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை; அது குற்றமற்றது. ஆனால் என்ன காரியமாயிருந்தது, அக்குழந்தையின் தந்தை, விருத்தசேதனத்தின் அடையாளத்தின் கீழ் இஸ்ரவேல் புத்திரரை விடுவிப்பதற்காகக் குழந்தையை அங்கே கொண்டு சென்று கொண்டிருந்தான்; அதே சமயத்தில் அவனுடைய சொந்த குமாரன் விருத்தசேதனம் செய்யப்படவில்லை. பார்த்தீர்களா? சிப்போராள் அதை ஒரு கருக்கான கல்லினால் அறுத்து, நுனித்தோலை எறிந்து, “நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன்” என்றாள்.

**17. தயவுசெய்து வேதவாக்கியங்களின் அர்த்தங்களையும், அது எப்போது நிறைவேறும் என்பதையும் விளக்குங்கள்: ஏசாயா 4 மற்றும் 1. நன்றி.**

சரி. நாம் இப்பொழுது திருப்புவோம்...உங்களுடைய வேதாகமங்களை வைத்துள்ள ஜனங்களாகிய நீங்கள், நாம் என்னவென்று பார்ப்போம்...இதை ஆராய்ந்து பார்க்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லை, ஆனால் நாம் ஒருவிதமான பதிலைக் கண்டறியலாம் என்று நான் நினைத்தேன். இதோ நாம் வந்துவிட்டோம்.

> *அந்*...(ஓ, ஆம்!) அது வரும்...*அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து:* இவ்வாறு கூறுவார்கள், *நாங்கள் எங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம்; எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு உன்பேர்மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள்.*

93 பாருங்கள், சகோதரனே, இப்பொழுது அது கிட்டத்தட்ட மிக மோசமாக உள்ளது. நம்முடைய தேசத்திற்கு என்ன ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது! என்னுடைய அருமையான கிறிஸ்தவ

நண்பர்களே, நான் இதைக் கூறட்டும். நான் ஒவ்வொருவருக்கும் தெய்வீக மரியாதையுடன் இதைக் கூறட்டும்: எப்போதாவது இருந்திருந்தால்...சரித்திரத்தைப் படித்த ஜனங்களாகிய நீங்கள், காலங்களினூடாக ஒவ்வொரு அருமையான தேசமும் விழுந்து, மனச்சோர்வடைந்து, பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிற அதே பாதையில் நாமும் சரியாக இருக்கிறோம்.

94 நான் இந்தக் காலையில் கூறினதுபோல...அதை மீண்டும் கூறுவதற்கு என்னை மன்னிக்கவும். அயல்நாடுகளில் உள்ள மனிதர் என்னிடம் வந்து, “சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் என்ன விதமான பெண்களை அங்கே பெற்றிருக்கிறீர்கள்? பாருங்கள், நீங்கள் பாடும் எல்லா பாடல்களுமே, உங்களுடைய ஸ்திரீகளைக் குறித்த சில பழைய அசுத்தமான பாடல்கள்” என்கின்றனர். அதுதான். எல்லாவிதமான...ஏதோ ஒரு கதம்ப கூளம்...

95 பாருங்கள், அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? நான் உங்களுக்கு ஒரு சில வார்த்தைகளில் கூற விரும்பினால், நான் உங்களுக்குச் சரியாகக் கூறுவேன். உலகம் இந்தவிதமான நிலையில் உள்ளது, ஏனெனில் அது ஒரு நவீன சோதோம் கொமோராவாகும். சரியாக! கலிபோர்னியாவில் நான் ஒரு செய்தித்தாளை எடுத்தேன். மேலும் ஓரினச்சேர்க்கையாளர்களின் அதிகரிப்பு பற்றி அறிந்துகொள்ள, ஒவ்வொரு ஆண்டும் எத்தனை ஆயிரம் பேர் அவர்களுக்குக் பிடிக்கிறார்கள் என்பதை நான் மறந்துவிட்டேன். அவர்களுடைய மாம்சப் பிரகாரமான வாஞ்சையான...கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள, மற்றவைகளும் கூட ஜனங்களை விட்டுப் போய்விட்டன. அது நிறைவேறும் என்று தேவன் கூறினது நிறைவேறும். அவர்களுடைய சொந்த...

96 நீங்கள் சிலவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்...யார் ஒருவிதமான புகழைப் பெறுகிறார்கள் என்று பாருங்கள். உங்களுடைய வானொலியிலோ அல்லது தொலைக்காட்சிகளிலோ அல்லது உங்களிடம் உள்ளவைகளிலோ கேட்டு, அதைக் கண்டறியுங்கள். அது மிகவும் மோசமானதாகவும், மிகவும் அசுத்தமாகவும்...ஏதோ ஒரு ஸ்திரீயைக் குறித்து ஒரு பாடல் உள்ளது அல்லது அதைப் போன்ற ஏதோ ஒன்று உள்ளது, அதுவே இழிப்பெயர் பெறுகிற காரியமாகும்.

97 நாம் கவலைப்படவில்லை என்று தோன்றும் ஒரு நிலையை அது அடைந்துள்ளது நம்முடைய ஸ்திரீகளுக்காக அல்லது நம்முடைய ஸ்திரீகள் தங்களைக் குறித்து கவலை கொள்வதில்லை. அதுதான் அது. ஒரு ஸ்திரீ தன்னைச் சரியாகப் பராமரித்துக் கொண்டால், ஆணும் சரியாக நடந்துகொள்ள வேண்டியிருக்கும். அது அந்த மனிதனை ஆதரித்துப் பேசுவது அல்ல. ஆனால் அது உண்மை என்பதை நான் அறிவேன். ஆம், ஐயா! ஆனால் அது என்ன? அது ஒரு—ஒரு பயங்கரமான நிலைமை, அது அப்படியே

இருந்து வருகிறது. அது வேதவாக்கியத்தின்படியாயுள்ளது. அது அந்தவிதமாகவே இருக்கும் என்று வேதம் கூறியுள்ளது. ஆகையால் நமக்கு எப்படியொரு எழுப்புதல் இருக்க முடியும்? நமக்கு எப்படியொரு எழுப்புதல் இருக்க முடியும்?

98 கிறிஸ்தவ நண்பர்களே, கவனியுங்கள். இன்னும் ஒரு சில நிமிடங்களில் நான் உங்களை ஒன்று கேட்கட்டும். நாம் பில்லி கிரஹாம்களைப் பெற்றுள்ளோம். நாம் ஜேக் ஷுலர்களைப் பெற்றுள்ளோம். நாம் உலகத்தினூடாகப் பல்வேறு விதமான எல்லா விதமான மார்க்க அசைவுகளையும் பெற்றுள்ளோம். அவர்கள் கடந்த ஆறு அல்லது ஏழு வருடங்களாக அமெரிக்கா முழுவதும் சென்று கொண்டிருக்கிறார்கள், அவர்களால் இயன்றவரை வேகமாகச் செயல்பட்டும், எழுப்புதல் இல்லை. ஏன்? கதவுகள் அடைத்துக் கொண்டிருக்கின்றன. நான் இந்தக் காலையில் கூறினதுபோல, நாம் ஒவ்வொரு மீனையும், குளத்திலிருந்து வலை வீசிப் பிடித்துவிட்டோம். ஒன்று அல்லது இரண்டு எங்காவது ஒட்டிக்கொண்டிருக்கலாம்.

99 பில்லி கிரஹாம் ஒரு கூட்டத்தை நடத்தினார், (அது பாஸ்டன் அல்லது எங்கோ இருந்தது என்று நான் நினைக்கிறேன்), அவர்கள் ஆறு வாரங்களில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்டோர் இரட்சிக்கப்பட்டதாகக் கூறினர். அவர்கள் ஒரு சில வாரங்களுக்குப் பிறகு திரும்பிச் சென்றனர், அதில் இருபது பேர்களைக் கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்! சகோதரனே, அது ஏறக்குறைய முடிந்துவிட்டது. நான் இங்கு ஒன்றைக் கூற முடியும். பார்த்தீர்களா?

100 வருவதாக தேவன் உரைத்திருந்த நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், மனிதர்கள்…நாம் அதைக் குறித்து என்ன சிந்திக்க முயற்சித்தாலும், நாம் முன்குறிக்கப்பட்டிருக்கிறோம் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. அது உண்மை. தேவன் அழைத்தது தேவனண்டை வரும்; தேவன் அழைக்காதது தேவனிடத்திற்கு வராது. தேவன் அழைக்கிறார், அவர்கள் மறுக்கிறார்கள், அவர் அழைக்கிறார், அவர்கள் மறுக்கிறார்கள். இப்பொழுது, தேவன் யாரையும் கண்டனம் செய்கிறார் என்று நான் கூறவில்லை. எல்லோரும்…எந்த ஒருவரும் அழித்துப் போக வேண்டும் என்று இல்லாமல், எல்லோரும் மனம் திரும்ப வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆனால் தேவனாக இருப்பதற்காக, அவர்கள் வரப்போவதில்லை என்பதை அவர்—அவர் ஆதியிலேயே அறிந்திருந்தார். அதே சமயத்தில் அவர் அவர்களுக்கு ஒரு தருணம் கொடுத்தார், ஆனால் அவர்கள் வர விரும்பவில்லை.

101 எப்படி…? அவர் அதை அறிந்திருக்கவில்லையென்றால்,

நமக்குக் குதிரையில்லா வண்டிகள் இருக்கும் என்று அவர் எப்படி அறிந்திருந்தார்? இப்பொழுது நமக்கு இருப்பது போன்று இந்த நேரங்கள் வரும் என்று அவர் எப்படி அறிந்திருந்தார்? ஏன் அவர், “மனுஷன் துணிகரமுள்ளவனாயும், இறுமாப்புள்ளவனாயும், சுகபோகப் பிரியனாயும் இருப்பான்” என்று கூறினார்? ஏன் எல்லா தீர்க்கதரிசிகளும் ஆதியிலிருந்தே இந்த மற்ற காரியங்கள் சரிவர வரும் என்று முன்னறிவித்தனர்? தேவன் எல்லாவற்றையும் அறிந்திருந்தார். என்னவாயிருக்கும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். காலத்தினூடாகத் தேவன் நோக்கிப் பார்த்த ஒரு மனிதகுலம் அங்கே இருக்கின்றது, “அவர்கள் வரமாட்டார்கள்” என்றார். அவர்கள் அந்த ஆக்கினைத்தீர்ப்பைக் குறித்து ஆக்கினைக்குட்படுத்தப்படுகின்றனர், ஏனென்றால் அவர்களே அதைத் தெரிந்து கொண்டனர். ஆமென்! அங்குதான் காரியம்.

102 என் சகோதரனே, சகோதரியே, (நான் இதைத் தேவ பக்தியோடும், என் இருதயத்தில் தேவபயத்தோடும் கூறுகிறேன்) அமெரிக்கா மூழ்கிப் போய்விட்டது என்று நான் நினைக்கிறேன்! அவள் மனச்சோர்வடைந்திருக்கிறாள். அவள் மிகவும் தாழ்ந்த நிலையில் கீழே இருக்கிறாள். இது ஒரு பரிதாபம்.

103 இந்த வேதவாக்கியத்தில் நான் பதிலளிக்கையில், ஏழு ஸ்திரீகள் ஒரு புருஷனைப் பற்றிக் கொள்கிறார்கள் என்று நான் கூறுவதை சற்று இங்குச் சிந்தித்துப் பாருங்கள். முதலாம் உலகப் போரின்போது… இரண்டாம் உலகப் போரின்போது…நான் செய்தித்தாளிலிருந்து ஒரு—ஒரு செய்தித் தொகுப்பை வீட்டிலிருந்து எடுத்தேன். அதை நீங்களே வாசித்துப் பாருங்கள். மேலும், “நம்முடைய அமெரிக்க ஸ்திரீகளின் ஒழுக்கத்திற்கு என்ன நேர்ந்தது? முதல் ஆறு மாதங்களில் வெளிநாடுகளுக்குச் சென்ற அவர்களுடைய மனைவிகளால் ஒவ்வொரு மூன்று இராணுவ வீரர்களில் இருவர் விவாகரத்து செய்யப்பட்டனர்” என்று கூறப்பட்டிருந்தது. மூன்று பேரில் இருவர் விவாகரத்து செய்யப்பட்டனர். இந்த ஸ்திரீகள் புறப்பட்டு வெளியே ஓடினர். அது ஏன்? நண்பர்களே, நீங்கள் புரிந்து கொள்வீர்களேயானால், அது காலத்தின் ஆவியாகும்.

104 கடைசி நாட்கள் இங்கே இருக்கும்போது, நாம் கடைசி நாட்களின் ஆவிக்குள்ளாக வேண்டும். நீங்கள் ஒரு நடன அரங்கத்திற்குச் சென்றால், நீங்கள் நடனமாடும் ஆவியைப் பெற்றிருக்க வேண்டும், இல்லையென்றால் அவர்கள் நடனமாடமாட்டார்கள். நீங்கள் சபைக்குச் செல்லும்போது, நீங்கள் ஆராதிப்பதற்கு முன்பு நீங்கள் ஆவிக்குரிய ஆராதனையைப் பெற்றிருக்க வேண்டும். கடைசி நாட்கள் வருவதற்கு முன்னர் உலகம் கடைசி நாட்களின் ஆவிக்குள் வர வேண்டும், நாம் கடைசி நாட்களின் ஆவியில் இருக்கிறோம். இந்தக் காரியங்கள் இங்கே இருக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார், அதைத்தான் நாம் பெற்றுள்ளோம்.

நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம். புருஷர்களும், ஸ்திரீகளும் நித்திரையடைந்து கொண்டிருக்கிறார்கள், அதை உணரவில்லை.

105 ஒழுக்கங்கள்...நான் இங்கே அன்றொரு நாள் ஒரு வாலிப பையனை...ஓ, சில காலத்திற்கு முன்பு, இந்தக் கடந்த இலையுதிர் காலத்தில் சந்தித்தேன். நாங்கள் ஒரு நகரத்திற்குள் வந்து கொண்டிருந்தோம். அவன் திருமணமான ஒரு வாலிப உயர்நிலைப் பள்ளி பையன், அவன் என்னிடத்தில் கூறிக்கொண்டிருந்தான். அவன், "நான் இந்தப் பெண்ணை மணந்து கொண்டேன், ஏனென்றால் அவள் ஒரு நல்ல பெண்ணாயிருந்தாள், அவள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிப்பதற்கு முன்பே அவளை மணந்து கொள்ள வேண்டியதாயிருந்தது" என்றான். மேலும், "எனக்குத் தெரிந்த வரையில் இங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் அநேக ஆண்டுகளாக நாங்கள் ஒரு கன்னியையும் பெற்றிருக்கவில்லை" என்றான். பார்த்தீர்களா? மிகவும் மனச்சோர்வடைந்துவிட்டது.

106 மேலும் கலிஃஃபோர்னியாவிற்குள் சென்றபோது, காவல்துறையினர் தெருவில் வராதீர்கள் என்று சொல்லும் இடங்களின் தெருக்களில் வழியாகச் நான் சென்றேன். வீதியினூடாகக் கடந்து செல்லும் ஒரு மனிதனுக்கு அது ஒரு பெண்ணைக் காட்டிலும் ஆபத்தானது. இருண்ட சந்துகள். ஓ, தேவனே, இரக்கமாயிரும்! அந்தக் காரியங்கள் சம்பவிக்கும் என்று வேதம் கூறியுள்ளதை நீங்கள் அறியவில்லையா?

107 அவர் சோதோம் கொமோராவில் அதன் நிழலைக் கொடுப்பதற்கு சற்று முன்பு, அங்கே சென்றபோது, சரியாகக் கூறினால், அதே விஷயம் நடந்தது—நடந்திருந்தது, என்று சொல்லலாம். தேவன் அக்கினியை அனுப்பி, அந்த இடத்தைச் சுட்டெரித்தார். உலகம் முழுவதிலுமிருந்து அந்த இடத்திற்கு வரும்போது, அவர்களுக்குக் கிடைக்கும் என்பதைக் காட்டும் ஒரு வழிகாட்டிச் சின்னம் [ஒலி நாடாவில் காலியிடம்—ஆசி.] அது.

108 நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம். நிச்சயமாக. ஏழு ஸ்திரீகள் ஒரு மனிதனைப் பிடித்துக் கொண்டு, "நாங்கள் எங்களுடைய சொந்த ஆகாரத்தைப் புசித்து, எங்களுடைய சொந்த வஸ்திரங்களை உடுப்போம், எங்களுடைய நிந்தையை நீங்கும்படிக்கு உன் பெயர் மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும்" என்பார்கள் சகோதரனே, நீங்கள் அமெரிக்காவிலிருந்து செல்ல வேண்டியதில்லை. என் வாழ்வில் நான் கண்ட ஒரே ஒரு இடம் எதுவென்றால் எங்களுடைய சொந்த நாட்டில் நான் பார்த்த தெருக்களும், இருந்த சூழல்களுமே மோசமானது என்று நான் நினைத்திருந்தேன். நாம் எந்த முன்னேற்றமும் அடையவில்லை. நாம் தொடர்ந்து எல்லா நேரத்திலும் மோசமடைந்து கொண்டேயிருக்கிறோம். நான் கர்த்தருடைய நாமத்தில் பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் தொடர்ந்து மோசமாகிக்கொண்டே

செல்வோம். ஒரே ஒரு நம்பிக்கை மாத்திரமே உண்டு, அது கிறிஸ்து இயேசுவில் உள்ளது. நீங்கள் என்ன செய்தாலும் பரவாயில்லை.

109 நான் இங்குள்ள தேசத்தினூடாகச் சென்று கதறியிருக்கிறேன். தேவன் மரித்தோரையும் எழுப்பியிருக்கிறார். நாங்கள் பட்டணங்களுக்குச் சென்றோம்; அநேக வருடங்களாகச் சக்கர நாற்காலிகளில் உள்ள ஜனங்கள் எழும்பி, மற்றும் பார வண்டிகளுக்குப் பின்னால் நகரத்தின் வழியாக நடந்து, தங்கள் வண்டிகளையும் அது போன்ற பொருட்களையும் தள்ளிக்கொண்டு சென்றனர். பெண்கள், மருத்துவர்கள் மரித்துவிட்டதாக அறிவித்தனர், மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பப்பட்டபோது, அதற்கு மேலே மருத்துவரின் பெயர் எழுதப்பட்டிருந்த தங்களுடைய ஊடுகதிர் படலத்தை எடுத்து வைத்தனர். நகரத்தார் யாவரும் பின்னால் அமர்ந்து, "ஹூ, மனோத்தத்துவம்; ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள்" என்றனர். ஓ, நீங்கள் ஆக்கினைத் தீர்ப்பைத் தவிர வேறொன்றையும் எதிர்பார்க்க முடியாது! ஓ! அது உண்மையே!

110 நியாயத்தீர்ப்பு இங்கே உள்ளது, நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சகோதரனே, உங்களால் முடிந்தளவு துரிதமாக வந்து கிறிஸ்து இயேசுவினிடத்திற்கு செல், கோபாக்கினையை விட்டு விலகி ஓடுங்கள்! இந்தக் காரியங்களிலிருந்து வெளியே வாருங்கள்! ஆம், அது கடைசி நாட்களின் ஆவியாய் உள்ளது. அநேக காரியங்கள் கூறப்படலாம். நான் துரிதமாக முடிக்கிறேன்.

**18. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் ஆலயத்திற்குள் நாம் எவ்வாறு வந்து ஆராதிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார் என்பதைத் தயவுசெய்து எங்களுக்குச் சொல்வீர்களா?**

111 சரி, அது ஒரு நல்ல ஒன்று. அது எந்தச் சபைக்கும் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. நீங்கள் சபை வீட்டிற்கு வர வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்…இப்பொழுது, அது ஒரு கேள்வி, ஒரு சரியான கேள்வி. அது வேதப்பிரகாரமான ஒன்றல்ல; அது…இன்னும் அது உள்ளது. பொறுங்கள், அவர் என்ன கூறினார் என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன். முதலாவதாக, உங்களுக்கு வேதவாக்கியங்கள் வேண்டுமென்றால், ஜனங்கள் தேவனுடைய வீட்டிற்கு ஒரு நோக்கத்திற்காக வர வேண்டும், அதாவது ஆராதிப்பதும், பாடல்களைப் பாடுவதும், தேவனை ஆராதிப்பதுமேயாகும். அந்தவிதமாகத்தான் தேவன் நம்மை எதிர்பார்க்கிறார். நாம் தேவனுடைய வீட்டிற்குள் வந்து நம்முடைய… அல்லது வேறு ஏதோ ஒன்றைக் குறித்துப் பேச வேண்டும் அல்லது ஒருவரையொருவர் குறித்து பேசுதல், அல்லது இந்த வாரம் முழுவதும் நாம் செய்ய வேண்டியவைகளைக் குறித்து பேசுதலை அவர் எதிர்பார்க்கிறதில்லை; நாம் அவரைத் தொழுது கொள்ள வர வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அது ஒரு வழிபாட்டு

வீடு. பவுல், “ஒவ்வொரு காரியமும் ஒழுக்கமாகவும் ஒழுங்காகவும் செய்யப்பட வேண்டும்” என்று வேதாகமத்தில் கூறினான். எல்லாமே சரியாக இருக்க வேண்டும். செய்தி இருக்க வேண்டும்.

112 பழைய ஏற்பாட்டில் சபையின் விதிகளின்படி நான் கூற வேண்டிய முதல் காரியம், இல்லை, புதிய ஏற்பாட்டில் முதலாவதாக, ஜனங்கள் தேவனுடைய சபைக்குள் ஒரு ஆவியான ஆராதனையில் பிரவேசித்தனர். அவர்கள் உள்ளே நடந்து சென்றனர், கீர்த்தனைகள் பாடப்பட்டன. ஒருக்கால் அந்தப் பிரசங்கியார் பேசலாம், ஏனென்றால் அவர் சபையின் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தார். (ஒரு புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசி ஒரு பிரசங்கி; நாம் அதை அறிவோம்: “இயேசு கிறிஸ்துவின் சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது” என்று வெளிப்படுத்தின விசேஷம் கூறுகிறது.)

113 இப்பொழுது, பிரசங்கியார் பிரசங்கிக்கத் துவங்குகிறார். அவர் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில், ஒருவேளை அவருடைய பிரசங்கத்தின் முடிவிலே, ஆசீர்வாதங்கள் விழத் தொடங்கின; ஜனங்கள், “ஆமென்” என்று கூறி, தேவனை ஸ்தோத்தரிப்பார்கள். அவர் பிரசங்கிப்பதை நிறுத்தியவுடனே, ஒரு செய்தியானது வரக்கூடும், ஒருவேளை அந்நிய பாஷைகளில் பேசுதல் (முதலாம் கொரிந்தியர் 14:13,14). அப்பொழுது—அப்பொழுது சபையில் அர்த்தம் உரைப்பவர் இல்லாமற்போனால், இந்த நபர் அமைதியாயிருக்க வேண்டும், ஏனென்றால் அவர்கள் அந்நிய பாஷைகளில் சரியாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் அதைத் தேவனுக்கு முன்பாகச் செய்கிறார்கள். பார்த்தீர்களா? ஆனால் அவர்கள் அந்நிய பாஷையில் பேசும்போது, அதற்கு அர்த்தம் உரைப்பவர் இருந்தால், வியாக்கியானிப்பவர் செய்தியை அளிக்க வேண்டும். எல்லா சபைகளும் அதற்கு வந்து கொண்டிருக்கின்றன.

114 சார்லஸ் ஃபுல்லர், நான் அங்கே இருந்தபோது, அவர் அதைக் குறித்து என்னிடம் எவ்வளவாகத் தொடர்ந்து வம்பு செய்தாரோ, அவர் அதை இப்பொழுது ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவர்கள் அதை லாங் பீச்சில் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆம், ஐயா! சரியாகக் கரையில், சரியாக அரங்கத்தில், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்று, அந்நிய பாஷைகளில் பேசி, அந்நிய பாஷைகளுக்கு அர்த்தம் உரைத்தல், வியாதியஸ்தருக்காக ஜெபித்தல். அவர் என்னுடன் முகமுகமாய் நின்று, “சகோதரன் பிரான்ஹாம், நான் அந்தக் காரியத்தில் நம்பிக்கைக் கொண்டிருக்கவில்லை” என்றார்.

நான், “சரி, அது உங்களைப் பொறுத்ததாயுள்ளது. அது அவிசுவாசிகளுக்கானதல்ல, சகோதரன் புல்லர், அது விசுவாசிக்கிறவர்களுக்கானதாயுள்ளது” என்று கூறினேன். இப்பொழுது அவர் அதே காரியத்தைப் பிரசங்கித்துக்

கொண்டிருக்கிறார். அது ஒரு நேரத்திற்கு வருகிறது; ஒரு பலப்பரீட்சை உள்ளது.

115 இப்பொழுது அப்படியானால், அது ஒழுங்காக இருக்குமானால், இதைத்தான் நீங்கள் கூற வருவது என்றால்...பிரசங்கியார் பேசிக்கொண்டிருக்கும்போது, பிரசங்கியைக் கேட்க ஒவ்வொருவரும் அமைதியாக இருக்க வேண்டும். ஏனென்றால் அவர் அபிஷேகத்தின் கீழ் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார் என்றால், அங்கே தேவனுடைய வார்த்தை புறப்பட்டுச் செல்லும். ஆகையால், தீர்க்கதரிசிகளின் ஒவ்வொரு ஆவியும் தீர்க்கதரிசிக்கு அடங்கியிருக்கிறது. ஒரு போதகர் மேடையண்டை நடந்து சென்று, அந்த வேதாகமத்தை திருப்புகிறபோது, சபை அமைதியாக இருக்க வேண்டும், அவருடைய வேத வாசிப்பைக் கேட்டு...அவர் என்ன கூறப்போகிறார் என்பதைக் கவனியுங்கள். உங்களுக்கு நல்லதாகத் தென்படுகிற ஏதோ ஒரு காரியத்தை அவர் கூறினால், நீங்கள், “ஆமென், கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!” என்றோ அல்லது நீங்கள் விரும்புகிற எதை வேண்டுமானாலும் கூறலாம். *ஆமென்* என்றால் “அப்படியே ஆகக்கடவது” என்று பொருள். அதைச் செய்யும்படி வேதம் கூறியுள்ளது.

116 பிறகு, செய்தி முடிந்த பிறகு...பின்பு பிரசங்கி மக்கள் அனைவரும் களிகூருகிற ஓர் இடத்தை அங்கே கொடுத்தால், ஜனங்களுக்கு மத்தியில் ஆவியானவர், ஒருவேளை அவர் மற்றொரு செய்தியை அனுப்பலாம். அவர் ஒரு செய்தியை அனுப்பினால், அது யாருக்காவது வந்து, அப்பொழுது ஒரு அர்த்தம் உரைக்கப்படும்; அது வேத வசனங்களை மேற்கோள் காட்டுவதாகவோ அல்லது ஏதோ ஒரு காரியத்தைச் செய்வதாகவோ இருக்காது. தேவன் வீணான திரும்பத் திரும்பச் சொல்லுதல்களைப் பயன்படுத்துவதில்லை. ஆனால் அது சபையைப் பக்திவிருத்திக்குட்படுத்தும் ஒரு *குறிப்பிட்ட* காரியத்தை அல்லது ஏதோ ஒரு காரியத்தை யாரோ ஒருவருக்கு செய்யும் ஒரு நேரடியான செய்தியாக இருக்கும். அதன்பின்னர் அவர்கள் அந்தச் சபையின் பக்தி விருத்தியடையும்போது, நீங்கள்...

117 இதைப் போன்ற உதாரணமாக இது உள்ளது: யாரோ ஒருவர் இங்கே நின்று அந்நிய பாஷையில் பேசுகிறார்; இந்த ஒருவர் வியாக்கியானத்து, **“பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறதாவது:** *இன்னார்-இன்னார்* இங்கே இந்த நபர்மீது கைகளை வைக்கட்டும், ஏனென்றால் **பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறதாவது,** இன்றிரவே அவர்கள் சுகமடைவதற்கான நேரமாயிருக்கிறது” என்று கூறுகிறார். அது என்ன?

அப்பொழுது இதே நபர், “நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தேன்; அந்தக் குழந்தைக்காக என் இருதயம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது” என்றார். இப்பொழுது—இப்பொழுது அவர்கள் ஆவிக்குக் கீழ்படிந்து எழும்பி, சென்று

உங்களுடைய கரங்களைக் குழந்தையின் மீது வைக்கும்போது, அது நலமாகிறது. அப்படி குணமாகவில்லை என்றால், ஏதோ தவறு இருக்கிறது. பாருங்கள், பார்த்தீர்களா? அது ஒரு நேரடியான செய்தியாகும்.

118 அப்பொழுது அவிசுவாசி அங்கே அமர்ந்து, “ஒரு நிமிடம் பொறும். தேவன் அந்த ஜனங்களோடு இருக்கிறார்!” என்று கூறுவான். நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா?

119 அப்பொழுது அவன், அதாவது, **“பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறதாவது:** பட்டணத்தின் தெற்கில் உள்ள ஸ்பிரிங் தெருவிற்கு அந்தப் பக்கத்திலிருந்து ஒவ்வொருவரும், இன்னும் இரண்டு நாட்களுக்குள் அங்கிருந்து போய்விடுங்கள், ஏனென்றால் ஒரு புயல் வந்துகொண்டிருக்கிறது, அது பட்டணத்தின் எல்லாப் பக்கங்களிலும் வீசும்” என்று கூறுவான். அதன்பின்னர், முதலாவது காரியம் உங்களுக்குத் தெரியுமா, முழு சபைக்கும் ஒரு தீர்க்கதரிசனம் உண்டு.

120 அப்பொழுது யாரோ ஒருவர், ஆவிக்குரிய நியாயத்தீர்ப்பு எழும்பி, “அது கர்த்தருடையதா?” என்று கேட்பார். ஒவ்வொன்றும். ஆவிக்குரிய நியாயாதிபதிகள், மூன்று நல்ல மனிதர்கள் நின்று, “அது கர்த்தரால் உண்டானது” என்று கூறினால், அப்பொழுது சபையானது அதை ஏற்றுக்கொள்கிறது; அந்தப் பட்டணத்தின் முனையில் உள்ள ஒவ்வொருவரும் அந்த நேரத்தில் அங்கிருந்து வெளியேறி, தப்பிச் செல்கிறார்கள். அது நிறைவேறவில்லையென்றால், அந்த நபரைச் சோதித்துப் பார்ப்பது நல்லது. பார்த்தீர்களா? உங்களுக்கு மத்தியில் வேறொரு ஆவி உள்ளது. ஆனால் அது நிறைவேறுமானால், அப்பொழுது தேவனுக்கு ஸ்தோத்திரம், வரப்போகும் கோபாக்கினைக்கு நீங்கள் தப்பித்துக் கொள்ள அனுமதித்ததற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். பார்த்தீர்களா? அந்தக் காரியங்களைக் கவனியுங்கள். அதுவே சபை ஒழுங்கில் உள்ளது.

121 இரண்டு அல்லது மூன்று செய்திகள், மூன்றுக்கு மேல் அல்ல, அந்த விதமாக ஒரே நேரத்தில் செல்லும். வெளியில் உள்ள எதுவாக இருந்தாலும், பாருங்கள், அது ஒழுங்காக அமைக்கப்பட வேண்டும். முதலாவதாக…அதன்பின்னர் வேறொரு சபை, ஒழுங்கில் உள்ள மற்றொரு காரியம்…

122 எனக்குத் தெரியாது. இதைக் கேட்டது ஒரு ஸ்திரீயாயிருக்கலாம். நான்…வேறொரு காரியம் என்னுடைய சிந்தையில் தோன்றினது, எனவே நான் அதைக் கூறுவது நல்லது. ஸ்திரீகள், அவர்கள் சபைக்குள் வரும்போது, புதிய ஏற்பாட்டின்படி, ஒரு முக்காடிட்டுக் கொண்ட முகத்தோடும், சோகமான முகத்தோடும் உட்கார வேண்டியதாயிருந்தது, முழு ஆராதனை நேரமும் அங்கேயே இருக்க வேண்டும். அது வேத வாக்கியத்தின்படியாயுள்ளது. இப்பொழுது.

ஆனால் நான் ஒரு பெண் என்று நினைக்கிறேன்...நிச்சயமாக. இப்பொழுது, ஸ்திரீகளாகிய உங்களை நான் கண்டிக்கவில்லை. பார்த்தீர்களா?

123 சற்று முன்னர் ஒரு வாலிபப் பெண்மணி என்னிடம் வந்தாள். இல்லை...சகோதரன் ஜூனியர் அங்கே இருந்தபோது; ஒரு ஸ்திரீ வந்தாள், அவளுக்கு ஏதோ கோளாறு இருந்தது. அவளுடைய அண்டை வீட்டார் அவளைப் பார்த்து நகைத்தனர், ஏனென்றால் அவள் அண்மையில் இங்கே தன்னுடைய தலைமுடியை வெட்டமாட்டாள். அவள் போய்த் தன்னுடைய தலைமுடியைக் கத்தரித்துக்கொண்டாள். அதன்பின்னர், ஆற்றின் அந்தப் பக்கம் இருந்த யாரோ ஒரு பெண் அவளைக் குழப்பிவிட்டாள், ஒரு ஆவிக்குரிய வழியில், அவளுடைய கரத்தினால் அவளுடைய கால்களைக் கட்டப்போவதாகக் கூறி, அல்லது, சிகை அலங்காரம் மற்றும் அவள் இந்தப் பெண்ணை ஒரு பயத்திற்குள்ளாக்கினாள். இரண்டு பிள்ளைகளையுடைய அந்த ஸ்திரீ தன்னுடைய புத்தியை கிட்டத்தட்ட இழந்து விட்டாள். அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவள் அந்தவிதமாகவே அமர்ந்துகொண்டிருந்தாள்.

124 அவள் ஒரு நாள் வீட்டிற்கு முன்னால் காரோட்டி வந்திருந்தாள். பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்து, அவளிடத்தில் பேசி, அவள் சுகமடையப் போகிறாள் என்றும், **“ஆவியானவர் உரைக்கிறதாவது...”** என்றார். அவள்—அவள் அந்தவிதமாகச் சில நாட்கள் இருந்தாள், அதன்பின்னர் அவள்...நான் நேற்று சகோதரன் ஜூனியர் மற்றும் சகோதரன் ஃபங்க் அவர்களுடன் அந்தப் பெண்ணைப் பார்க்கப் போவதாயிருந்தேன். நான் அரை மைல் தூரத்தில் இருந்தேன். அவள் நின்று கொண்டு, இப்போது வளரவிடப் போகும் தன் கூந்தலை சீவிக்கொண்டிருந்தாள். “அண்டை வீட்டுக்காரர்கள் சிரிக்கட்டும், அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்” என்று கூறினாள்.

125 அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் என்னை அங்குச் செல்ல அனுமதிக்கவில்லை. அவர் அவளிடம் பேசி, நான் அந்த இடத்திற்கு அருகில் இருப்பதாகவும், நான் வர விரும்புவதாகவும் அவளிடம் கூறினார். நேற்றிரவு ஒரு தரிசனத்தில், அந்த ஸ்திரீ வருவதைக் கண்டேன், அவளோடுள்ள கோளாறு என்னவென்று சொல்லப்பட்டது; அவள் சற்று முன்பு என்னுடைய அறையில் சுகமடைந்தாள். பார்த்தீர்களா? சகோதரன் ஜூனியர், அது சரியா? அது உண்மை. சற்று முன்னர் தான். பார்த்தீர்களா? அந்தக் காரியம் இன்னும் ஆயத்தமாகாத காரணத்தால் தேவன் என்னை அங்குச் செல்ல அனுமதிக்கவில்லை. பார்த்தீர்களா? அவர் என்னை அந்த இடத்திற்கு கொண்டு வந்து, அது ஒரு மனிதனல்ல, அது தேவனாயிருந்தது என்பதைக் காண்பிக்கும்படியாக அங்கே அதை உறுதிப்படுத்தினார். பார்த்தீர்களா?

இப்பொழுது. அவள், “சகோதரன் பிரான்ஹாம், என் கணவர் நான் நீண்ட தலைமுடியை வைத்திருக்க விரும்புகிறார்” என்றாள்.

126 நான், “தேவனும் அதையே விரும்புகிறார்” என்றேன். அது உண்மை, ஏனென்றால் பெண்கள் நீண்ட தலைமுடியை உடையவர்களாக இருக்க வேண்டும். அதுவே அவர்களுடைய முக்காடு ஆகும்.

127 இன்றைக்கு பெண்மணிகளாகிய நாம் அல்லது பெண்மணிகளாகிய நீங்கள், சரியாகக் கூறினால், தொப்பிகளை அணிகிறோம் என்பதை நான் அறிவேன். அதுவே உங்களுடைய முக்காடு என்று நீங்கள் கூறுகிறீர்கள். அது தவறு. ஒரு ஸ்திரீயின் முக்காடு அவளுடைய தலைமுடி என்று வேதம் கூறியுள்ளது. அவள் தன்னுடைய தலைமுடியை கத்தரித்துக் கொள்வாளேயானால், அவள் ஜெபிப்பது ஒரு சாதாரண காரியமாயுள்ளது. அது சரியா? அது வேத வாக்கியமாயுள்ளது. பார்த்தீர்களா? எனவே இப்பொழுது, நீங்கள் அதைப் பற்றி என்ன நினைக்க விரும்பினாலும் சரி, ஸ்திரீகள் நீண்ட தலைமுடியை வைத்திருக்க வேண்டும்; அதுதான் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாகும். நீங்கள் எனக்கு எந்த இடத்தையும் காண்பிக்கலாம்…

128 நீங்களோ, “பாருங்கள், என்னுடைய தலைமுடி நீளமாக இருக்கிறது. பாருங்கள், அது என்னுடைய தோள்பட்டை வரையிலும் உள்ளது” என்று சொல்கிறீர்கள். அது குட்டையான முடியாயிருந்தது. “கிறிஸ்து…” நீங்கள், “கிறிஸ்து நீண்ட தலைமுடியை உடையவராயிருந்தார்” என்றீர்கள். இல்லை, அவர் ஒருபோதும் அப்படி இருந்ததில்லை. கிறிஸ்து தோள்பட்டை வரை முடியை உடையவராயிருந்தார் என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்கள்—அவர்கள் அதை இந்தவிதமாகச் சுற்றி இழுத்து, தோள்பட்டை வரை நீளமுள்ள முடியை வெட்டி விடுகின்றனர். அதன் பேரிலான கிரேக்க வார்த்தையைப் பாருங்கள், அப்பொழுது நீங்கள் அதைக் கண்டறியலாம்.

129 பெண்மையைப் போன்ற முடி…ஒரு மனிதன் நீண்ட தலைமுடியை வைத்திருக்கக் கூடாது, ஏனெனில் அது பெண்மையைப் போன்றே, இந்த விதமாக நீண்டதாக உள்ளது. ஆனால் அவர் அதை இங்கே தம்முடைய தோள்களின் மேல் துண்டித்துவிட்டார், அங்கே அவர்கள் அதை வெட்டினர், அவருடைய தலையைச் சுற்றி, அதை இந்தவிதமாகக் குட்டையாகத் வெட்டிக் கொண்டார். அது குட்டையான முடியாயிருந்தது.

130 எனவே, தோள்பட்டை வரையிலும் முடியையுடைய பெண்மணிகள், அது இன்னமும் குட்டை முடிதான். இப்பொழுது, அது உங்களை நரகத்திற்கு அனுப்பும் அல்லது உங்களைப் பரலோகத்திற்கு கொண்டு செல்லும் என்று நான் கூறவில்லை. அதற்கு இதனோடு எந்தச் சம்மந்தமும் கிடையாது. ஆனால்

சபையின் ஒழுங்கு பெண்கள் நீண்ட தலைமுடியை வைத்திருக்க வேண்டும் என்பதேயாகும். அது உண்மை; அது உண்மை. சபைக்குள் பிரவேசிக்க…மேலும்—மேலும் இந்த விவகாரங்களில் எந்தச் சம்மந்தமும் வைத்துக் கொள்ள வேண்டாம், சமூக விவகாரங்கள், இல்லை, அல்ல…நான் சபையில் உள்ள வர்த்தக விவகாரங்களைக் குறிப்பிடுகிறேன். அவள் கீழ்ப்படிதலும், பயபக்தியோடும், அது போன்று, மற்றவற்றுடனும் இருக்க வேண்டும், ஏனென்றால் அவள்தான் முதலாம் வீழ்ச்சியைக் கொண்டு வந்தாள் என்று வேதம் கூறியுள்ளது. அது உண்மை; அது உண்மை. இப்பொழுது, சீக்கிரம். அது புண்படுத்தவில்லை என்று நான் நம்புகிறேன்.

**19.** கேள்வி: **நான் என்னுடைய சபையில் இராபோஜனம் எடுக்கவிருந்தபோது, ஏன் தேவனுடைய தரிசனம் எனக்கு முன்பாக வர வேண்டும்? முடிந்துவிட்டது**. (பாருங்கள், அது ஒரு பெண்மணியினுடைய பெயர்; ஆம், அது ஒரு பெண்மணியின் பெயர்,) **ஒரு…நான் என்னுடைய சபையில் இராபோஜனம் எடுக்கவிருந்தபோது, ஏன் தேவனுடைய தரிசனம் எனக்கு முன்பாக வர வேண்டும்?**

131 பாருங்கள், சகோதரியே, இது இவ்வாறு இருந்தாலொழிய, நான் அறியமாட்டேன்: உங்கள் சபையில் நீங்கள் இராபோஜனம் எடுத்துக்கொண்டிருக்கையில், இயேசு கிறிஸ்து ஒரு தரிசனத்தில் தோன்றியதை நீங்கள் கண்டிருந்தால், அவர் இதை உங்களுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார்: அதாவது நீங்கள் அவரை ஒரு அடையாளத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இராபோஜனம் என்பது இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகும்; நீங்கள் அவரை உங்களுடைய சரீரத்திற்குள் ஒரு அடையாளமாக எடுத்துக் கொண்டிருந்தீர்கள். ஆகையால் சுத்தமாக ஜீவித்து, தூய்மையாய் ஜீவியுங்கள்.

132 கவனியுங்கள். நீங்கள் இராபோஜனம் எடுத்துக்கொண்டால் (ஒரு சில நிமிடங்களில் நீங்கள் அது வாசிக்கப்படுவதை கேட்பீர்கள்) நீங்கள் அபாத்திரராயிருக்கும்போது, நீங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தையும், சரீரத்தையும் குறித்து குற்றமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். சமுதாயத்தில் தேவனுக்கு முன்பாகச் சரியாக ஜீவிக்கட்டும், சரியாகக் கூறினால், இராபோஜனத்தை எடுக்கிற ஒரு மனிதன் தேவனுக்கு முன்பாகச் சரியாக ஜீவிக்கட்டும். அதை அபாத்திரமாய் எடுத்துக்கொள்ளாதே. அது வெறும்…

133 பாருங்கள். கடைசி நாட்களில் தேவனுடைய போஜனபீடங்களெல்லாம் வாந்தியினால் நிறைந்திருக்கும் என்று வேதம் முன்னுரைத்துள்ளது. எவருமே புரிந்து கொள்ளக் கூடாதவர்களாயிருப்பார்கள். அது சரியா? பாருங்கள். அண்மையில் நான் ஒரு பெரிய கூடாரத்திற்குச் சென்றேன். நான் பெயரைக் கூறமாட்டேன்; நீங்கள் யாவரும் அதை நன்கு அறிவீர்கள்.

அவர்கள் இராபோஜனத்திற்காக என்ன வைத்திருந்தனர் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் முழு ரொட்டியை, ஜீவனத்துக்கான ரொட்டியை, இலேசான ரொட்டி ஆகியவற்றை எடுத்து, அவற்றை மெல்லிய துண்டுகளாக வெட்டினார்கள். ஒரு கூட்ட உதவிக்காரர்கள், அவர்களில் ஏழு பேர் குடிகாரர்கள் என்று பிரசங்கியார் கூறினார்…அது உண்மை. அவர்கள் ஒவ்வொருவரும், முழு கூட்டமும்…அவர்கள் கட்டிடத்தினூடாகச் சென்றபோது, ஜனங்களிடத்தில் பேசிக் கொண்டிருந்ததை உங்களால் காண முடிந்தது. இறுதியில், ஞாயிறு பள்ளிக்கும் சபைக்கும் இடையில், சபை கலைக்கப்பட்டபோது, ஒவ்வொருவருக்கும் அருகாமையில், போதகர் மற்றும் யாவரும், வெளியே சென்று, வெளிப்புறமாகச் சிகரெட்டுகளை புகைத்து, மீண்டும் உள்ளே வந்து கர்த்தருடைய இராபோஜனத்தை எடுத்துக் கொண்டனர். அதற்காகத் தேவன் உங்களைக் குற்றமற்றவர்களாக்கமாட்டார் என்று கூறினார். “உங்களில் அநேகர் வியாதியாயும், பலவீனரும், அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.” அது உண்மை.

134 “தேவனுடைய போஜனபீடங்களெல்லாம் வாந்தியினால் நிறைந்திருக்கிறது, நான் யாருக்கு உபதேசத்தைக் கற்பிக்க முடியும்” என்று கூறப்பட்டுள்ளது. அவன், “கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள். நன்மையானதைப் பற்றிக் கொள்ளுங்கள். பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் நான் இந்த ஜனத்தோடே பேசுவேன், இதுவே நான் கூறியுள்ள இளைப்பாறுதல், ஆனால் இவை எல்லாவற்றோடும் அவர்கள் தங்களுடையத் தலைகளை ஆட்டி, ‘நாங்கள் இதற்குச் செவிகொடுக்க மாட்டோம்’ என்று கூறிவிட்டு சென்றுவிட்டனர்” என்றான். நண்பர்களே, நாம் எங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைப் பாருங்கள். ஓ, இரக்கம்! விழித்தெழு!

135 ஆம், சகோதரியே, உங்களுடைய தரிசனம்…நீங்கள் தேவனுக்கு முன்பாக ஒரு நல்ல, சுத்தமான, பரிசுத்த ஸ்திரீயாக இருந்தால், நீங்கள் அங்கு நின்று கொண்டிருக்கையில், இயேசு இராபோஜனம் கொடுத்துக் கொண்டிருந்தார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்படி செய்து கொண்டிருந்தார், நீங்கள் அவரை அங்கே ஒரு அடையாளமாகக் எடுத்துக் கொண்டிருந்தீர்கள்; நீங்கள் அவ்வாறு செய்யவில்லையென்றால், நீங்கள் அதை மீண்டும் செய்வதற்கு முன்பு தேவனோடு சரிபடுத்திக் கொள்ளும்படியான ஒரு எச்சரிப்பாக இருக்கிறது.

**20. பின்வருபவை என்னவென்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்: முதலாம் தீமோத்தேயு, 2ம்…இரண்டாம் தீமோத்தேயு 2-ம் அதிகாரம், 16-ம் வசனம்.**

136 அப்படியே ஒரு நிமிடம். இரண்டாம் தீமோத்தேயு… [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] நாம் ஒன்று கூடுவோம்.

ஒரு வேளை நான் கூறினதை நீங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள். உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்ல…அப்பொழுது, நீங்கள் வீட்டிற்குச் சென்று உண்மையாகவே அதிகமாகப் படிப்பீர்கள், அப்பொழுது அது நீங்கள் ஆவிக்குரியப் பிரகாரமாக இருக்க உதவி செய்யும். சரி, இரண்டாம் தீமோத்தேயு 2 மற்றும் 16 வசனங்கள் இதைப் போன்று வாசிக்கப்படுகின்றன:

> *சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்;*

ஆம். சரி, “சீர்கேடான வீண்பேச்சு” என்றால் என்ன என்பதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறீர்கள். “சீர்கேடான…சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகள் அதிகரிக்கும்.”

137 இப்பொழுது, முதலாவது காரியம், “சீர்கேடான வீண்பேச்சு, ஏனென்றால் அவைகள் அதிகரிக்கும்.” இப்பொழுது, பழமையான எந்தக் காரியமும்…வீண்பேச்சைத் தொடர்ந்து பேசிக் கொண்டேயிருத்தல். வேதம் கூறியுள்ளது, இயேசு, “உங்கள் ‘ஆம்’ என்பது ‘ஆம்’ என்றும், உங்களுடைய ‘இல்லை’ என்பது ‘இல்லை’ என்றும் இருக்கக்கடவது, ஏனென்றால் இதைப் பார்க்கிலும் மேலான எந்தக் காரியமும் பாவத்திற்கு வரும்.” நீங்கள் ஒருவருக்கொருவர் நகைச்சுவையாகப் பேசவோ, சண்டையிடவோ கூடாது. நீங்கள் பேசும் ஒவ்வொரு வீணான வார்த்தைக்காகவும் தேவன் உங்களைக் கணக்கொப்புவிக்கச் செய்வார். அது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் வீணான ஒவ்வொரு வார்த்தைக்காகவும் கணக்கொப்புவிக்க வேண்டும் என்று வேதம் உரைத்துள்ளது. ஆகையால் நாம் எந்தவிதமான ஒரு ஜனமாக இருக்க வேண்டும்? ஜனங்கள் வெளிப்படையாகவும், கண்டிப்புடனும், அன்பாகவும், தயவுள்ளவர்களாகவும், ஒருபோதும் ஒரு கூட்ட அர்த்தமற்றவர்களாகவும், எப்பொழுதும் சேர்ந்து கொண்டிருக்கிற…

138 பாருங்கள். இன்றைக்கு துவங்கப்போகும் ஒரு நபரை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்…நான் ஒரு அயர்லாந்துக்காரனாயிருந்து, என்னுடைய சொந்த சுபாவத்தை உடையவனாயிருந்தபடியால், நானே அதைக் கவனித்தேன்; எப்படியும், கலகலப்பாக இருப்பதற்கும், கலகலவெனச் சுற்றித் திரிவதற்கும் எனக்கு எப்போதுமே ஒருவித துணிச்சல் உண்டு. ஒவ்வொரு முறையும்—ஒவ்வொரு முறையும் என் மனைவியும் கூட, “இப்பொழுது, பில்…!” என்று கூறுகிறாள்.

நான், “அது உண்மை, தேனே” என்று கூறுகிறேன். அவள் சொல்வாள், நான் குழந்தைகளோடு கலகலவென்று இருந்தேன்… நான் சொல்வேன்…அவர்களுடன் சண்டை அல்லது அதுபோல

ஏதாவது சொல்வேன், "இப்பொழுது கென்டக்கியிலிருந்து மூன்று மகத்தான மனிதர்கள் தோன்றினர் என்பதை நீங்கள் அறிவீர்கள்."

"யார் அது?"

"பாருங்கள், ஆபிரகாம் லிங்கன்."

"ஆம்."

"டானியல் பூன்."

"ஹூ ஹு"

"உன்னுடைய தகப்பனும்" அதைப் போன்ற ஒரு காரியம்.

139 அப்பொழுது அவள், "இப்பொழுது, பில், நீர் மறுபடியும் போய்விட்டீர்" என்று கூறுவாள். நான் எங்காவது ஒரு அறைக்குள் சென்று, "கர்த்தாவே, என்னை மன்னியும், நான் அதைக் கூற வேண்டும் என்ற நோக்கத்தில் கூறவில்லை. எனக்கு ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்; என்னை அதிலிருந்து விலகச் செய்யும்" என்பேன். பார்த்தீர்களா?

140 ஒவ்வொரு நாளும் நான்...நான் அதைச் செய்தால்... இப்பொழுது, நாம் இந்தக் காலையில் *பின்வாங்குதல்* என்ற வார்த்தையைக் குறித்து பேசிக்கொண்டிருந்தோம். நீங்கள் அதைச் செய்யும்போது, நீங்கள் பின்மாற்றமடைந்திருக்கிறீர்கள். ஆம், ஐயா! நீங்கள் மனந்திரும்ப வேண்டும். அது சரியா? இப்பொழுது, நீங்கள் உலகத்திற்குச் சென்று, நீங்கள் *இதை* மற்றும் *அதைச்* செய்தீர்கள் என்று நான் கூறவில்லை, ஆனால் நீங்கள் ஏதோ ஒன்றைச் செய்தீர்கள். இயேசு கிறிஸ்துவுக்குள் ஜீவிக்க நீங்கள் மனந்திரும்பி அனுதினமும் மரிக்க வேண்டும். ஆகையால் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாளும், நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் ஜீவிக்க ஒவ்வொரு நாளும் மரிக்க வேண்டும்.

141 நான் ஒரு காரியத்தைச் செய்யும்போது...நான் அநேக சமயங்களில் தவறான காரியங்களைச் செய்கிறேன். நான் வெளியே வரும்போது, யாராவது ஏதோ ஒரு காரியத்தை அல்லது மற்றதைக் கூறினால், நான் அதைக் குறித்து ஒரு சிறு நகைச்சுவையாகக் கூறலாம். யாரோ ஒருவர்...மோசமான ஒன்றல்ல; இப்பொழுது, கிறிஸ்தவர்கள் இழிவான கேலிப் பேச்சுகளைக் கூறுவதாக நான் நம்புவதில்லை. இல்லை, ஐயா! இல்லை, ஐயா! அது கிறிஸ்தவர்களாக மாறுவதும் கூட இல்லை என்று வேதம் கூறியுள்ளது. அது போன்ற பழைய சீர்கேடான விஷயங்களையும், நகைச்சுவைகளையும், கேலிகளையும், கிண்டல்களையும், அது போன்ற காரியங்களையும் நிராகரிக்க வேண்டும் என்று அதில் சொல்லப்பட்டிருந்தது. இல்லை, கிறிஸ்தவர்கள் அந்தக் காரியங்களைக் கூறுகிறதில்லை; கிறிஸ்தவர்கள் தூய்மையான சிந்தனைகளை உடையவர்களாயிருக்கிறார்கள்.

142 ஆனால் நீங்கள் கவனிக்கவில்லையென்றால், எப்பொழுதாவது ஒருமுறை நீங்கள் ஒரு மனிதனைப் சந்திப்பீர்கள்...அவன் இன்றைக்கு ஒரு சிறு நகைச்சுவையைக் கூறுவான். பாருங்கள், அது சரிதான் என்று அவன் ஒருவிதமாக நினைத்துக் கொண்டு, அவன் அதை அப்படியே விட்டுவிடுகிறான், அதைக் குறித்து இனிமேல் சிந்திக்கவேமாட்டான். அடுத்த நாள் நீங்கள் இரண்டு சிறு நகைச்சுவைகளைச் சொல்கிறீர்கள். பார்த்தீர்களா? அடுத்த காரியம் உங்களுக்குத் தெரியுமா, நீங்கள் வேறொன்றைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். முதலாவதாக நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், அது மீண்டும் அந்தப் பழைய முறைமைக்கே திரும்பிச் செல்கிறது. அது சரியா? அந்தக் காரியத்திலிருந்து விலகியிருங்கள். அதை விலக்கி வையுங்கள்! அந்தச் சீர்கேடான பேச்சை விட்டு விலகுங்கள்.

143 யாரோ ஒருவர் வருவதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்... நான் உங்களுக்கு ஒரு சிறிய உதாரணத்தைக் கூறவுள்ளேன். "திருமதி டோ, என்னவென்று உனக்குத் தெரியுமா? நான் உங்களுடைய கணவரைக் கண்டேன். என்னவென்று நான் உங்களுக்குக் கூறுகிறேன். அவர் ஒரு உதவிக்காரராயிருக்கிறார்." பார்த்தீர்களா? மேலும்...

இப்பொழுது, அந்தக் காரியத்தை, "நான் அதைக் கேட்க விரும்பவில்லை!" என்று கூறுங்கள். அது உண்மை, தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டாம். அதை அதிகமாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள், அவர்கள் அதை வெட்டிவிடுவார்கள். அது உண்மை.

144 "ஓ, சகோதரியே, என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? சகோதரனுக்கு என்ன சம்பவித்தது என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன்." சகோதரி மட்டுமல்ல, சகோதரனும் கூட. பார்த்தீர்களா?

"சகோதரனே, என்ன நடந்தது என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன். நாம் இந்தப் பிரசங்கியாரை அகற்றிவிட்டால், *இதை* நம்மால் செய்துவிட முடிந்தால், அல்லது இந்த உதவிக்காரரை நீக்கிவிட முடிந்தால், அல்லது எங்களால் *இதைச்* செய்ய முடிந்தால் உங்களுக்குத் தெரியும்." ஓ, ஓ! அப்படியே—அப்படியே அப்படியே அந்தக் காரியத்தைப் புறக்கணித்துவிடுங்கள்.

145 இது உங்கள் மேசையில் நீங்கள் வைத்திருக்க வேண்டிய ஒரு நல்ல சிறிய பொருள் என்று நான் நினைக்கிறேன், அது அண்மையில் புளோரிடாவில் நான் கண்ட ஒரு சிறு காரியம். அது மூன்று குட்டி குரங்குகள்; அவைகளில் ஒன்று தன்னுடையக் கைகளைத் தன்னுடைய கண்களின்மேல் மூடி, "தீமையைக் காணாதே" என்று கூறினது; மற்றொன்று தன்னுடைய விரல்களைத் தன்னுடைய காதுகளில் வைத்து, "தீமைக்குச் செவிகொடாதே" என்று கூறினது; மற்றொன்று தன் கையை வாயில் வைத்துக்கொண்டு, "தீயதைப்

பேசாதே” என்று கூறினது. அது ஒரு நல்ல காரியம் என்று நான் நினைக்கிறேன், நீங்கள் அவ்வாறு நினைக்கவில்லையா? ஆம், ஐயா! ஓ, என்னே! அது மிகவும் நல்ல காரியம்.

146 கிறிஸ்துவின் பேரில் உங்கள் சிந்தையை சுத்தமாக வைத்திருங்கள். நீங்கள், “நல்லது, இப்பொழுது...” என்று கூற முடியாது. இப்பொழுது பாருங்கள், நீங்கள் கவனிக்கவில்லையென்றால், உங்களை ஒரு நிலைக்குக் கொண்டு சென்றுவிடுவீர்கள், நீங்கள் அதைக் குறித்து தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தால்...மேலும், நீங்கள் பெற்றுள்ளதாக எண்ண வேண்டாம்...அந்தத் தவறை இப்பொழுது நீங்கள் செய்யுமளவிற்கு நீங்கள் அவ்வளவு பரிபூரணமாக ஜீவிக்க முடியாது. இப்பொழுது, நீங்கள் எப்பொழுதாவது அந்தவிதமாக ஆகிவிடுவீர்கள் என்று நீங்கள் நினைக்காதீர்கள், ஏனென்றால் நீங்கள் அவ்வாறு இருக்கமாட்டீர்கள். இல்லை, ஐயா! நீங்கள் பாவமற்றவர் அல்ல, நீங்கள் இந்தப் பக்கத்திலும், அந்தப் பக்கத்திலும் உள்ள பாதையில் நிச்சயமாகவே விலகிச் செல்வீர்கள்.

147 ஆனால் ஒரு மனிதன் ஒரு முறை வீழ்த்தப்பட்டால், அவன் ஒரு உண்மையான இராணுவ வீரனாயிருந்தால், அவன் மீண்டும் எழும்புவான். “கர்த்தாவே, நான் எழும்பி அதை மீண்டும் முயற்சிக்கட்டும்.” ஆனால் ஒரு கோழையினர், நான் இந்தக் காலையில் கூறினதுபோல, அவன் தன்னுடைய முதல் சிறு தவறைச் செய்வதைக் கண்டவுடனே: பூச்சியும், சிலந்திப் பூச்சியும் மீண்டும் தண்ணீருக்குள்ளேயே ஊர்ந்துவிடும். பார்த்தீர்களா? அவனால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாது.

148 எனவே பழைய—அந்தச் சீர்கேடான பேச்சையும், தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதையும் மறுத்துவிடுங்கள். *வீண் பேச்சு* என்பது “குழப்பம்” என்று பொருள்படுகிறது. வேதமோ, “உங்களுக்குள்ளே சண்டை சச்சரவுகளை உண்டுபண்ணுகிறவர்களைக் குறித்துக் கொள்ளுங்கள்” என்று கூறியுள்ளது.

149 யாராவது, “ஹூ ஹூ! ஹூ ஹூ,” என்று சொன்னால், இப்பொழுது—இப்பொழுது சொல்லுங்கள், “நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? உங்களை மீண்டும் காண்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்கு நன்றி” என்று கூறுங்கள். தொடர்ந்து சென்று கொண்டேயிருங்கள். அதுவே மிகச் சிறந்த காரியமாகும். அவர்களை ஒதுக்காதீர்கள், ஆனால் அவர்களைக் குறித்து வையுங்கள். கவனம் செலுத்த வேண்டாம், ஏனென்றால் அது எதற்கு வழிநடத்துகிறது என்பதை நீங்கள் காண்கிறீர்கள்.

### 21. இயேசு எங்கிருந்து வந்தார்...இயேசு அவருடைய ஞானஸ்நானத்திலிருந்து அவருடைய ஊழியத்தின் மூன்று ஆண்டுகள்வரை எங்கிருந்தார்?

150 சரி. இயேசு, அவர் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது, உடனே

ஜலத்தை விட்டு வெளியேற, ஆவியானவர் அவரை இரவும் பகலும் நாற்பது நாட்கள் பிசாசினால் சோதிக்கப்படும்படி வனாந்திரத்திற்குள் வழி நடத்திச் சென்றார். அவர் இரவும் பகலும் நாற்பது நாள் சோதிக்கப்பட்டார். அவர் உபவாசித்தார். அவர் வெளியே வந்தார். அவர் உபவாசத்திற்குப் பிறகு வெளியே வந்தபோது, பிசாசு அவரைச் சோதித்தான். அவர் தேவனுடைய வார்த்தையினால் பிசாசை எதிர்த்து நின்று, அவருடைய ஊழியத்தில் பிரவேசித்து, வேதவாக்கியங்களின்படி மூன்றரை வருடங்கள் பிரசங்கித்தார்.

151 பாருங்கள். பண்டைய காலத்தில் தானியேலில் தேவன் பேசினார், அவர் மூன்றரை வருடங்கள் பிரசங்கித்து, அந்த நேரத்தில் ஒரு பலிக்காகச் சங்கரிக்கப்ப்படுவார் என்று கூறினார். சரியாக. உலகத் தோற்றத்திற்கு முன்பே அவர் நியமிக்கப்பட்டார். அது உண்மை.

152 மத்தேயு 4-ம் அதிகாரத்தில் நீங்கள் அதைக் காணலாம். அது உங்களுடைய விசுவாசத்தின்படி சரியாக இல்லையென்றால், சரி.

இப்பொழுது, அந்த ஒன்று…என்னவென்று நாம் பார்ப்போம்…ஓ, ஆம். “எங்கே…?” நாம் சற்று முன்னர் அதைப் பெற்றுக்கொண்டோம். “மரித்தவர்கள் எங்கே?”

### 22. ஒரு காலத்தில்—ஒரு காலத்தில் நாம் அனைவரும் வெள்ளையர்களா அல்லது நிறத்தவர்களா?இவ்விரண்டில், எந்த ஒன்று சாபமாகப் போடப்பட்டது?

153 இப்பொழுது, நாம் அறிந்தமட்டில், ஆதாமும் ஏவாளும் வெள்ளை அல்லது பழுப்பு அல்லது மஞ்சள் அல்லது கறுப்பு நிறமாயிருந்தனர் என்பதை என்னால் உங்களுக்குக் கூற முடியாது. என்னால் உங்களிடம் கூற முடியாது. தேவன் ஒருவரைத் தவிர வேறு எவருமே அறியார் என்று, நான் யூகிக்கிறேன்; அவர் அங்கே அப்பொழுது இருந்தார். இப்போது…பாபேல் கோபுரக் குழப்பம் வரையிலும் நாம் அனைவரும் ஒரே பாஷையிலும் ஒரே ஜனமாகவும் இருந்தோம். அதன்பின்னர் அவர்களுடைய மொழிகள் வித்தியாசமாயின. நாம் அறிந்தமட்டில் அவர்கள் யாவரும் அந்த நேரம்வரை ஒரே ஜனங்களாக இருந்தனர். அவர்கள் பிரிந்து உலகின் பல்வேறு பாகங்களிலும் சிதறிப்போனார்கள்.

154 சில…நீங்கள் ஒரு மிருகத்தை எடுத்துக்கொள்ளுங்கள்; ஒரு குறிப்பிட்ட மண்ணை உண்ணும் எந்த ஜீவனையும் நீங்கள் எடுத்துக் கொண்டால், அது அந்த நிறமாக மாறும். இங்கே வேட்டைக்காரன் யாராவது இருந்தால், நீங்கள் என்னை ஒரு சில நிமிடங்கள்பின் தொடருங்கள். மெக்ஸிகோவிற்குச் சென்று, அங்குள்ள ஓநாயைக் கொண்டு வாருங்கள்; இங்கே அரிசோனாவுக்கு வந்து ஓநாயைப் பிடியுங்கள்; நீங்கள் வடக்குப் பகுதிக்குச் சென்று அதே ஓநாயைப் பிடித்து, மூன்று நிறங்களையும் கவனித்துப் பாருங்கள். டெக்சாஸில் வளர்க்கப்பட்ட ஒரு கிலா அரக்கப்

பல்லியையும், அரிசோனாவில் வளர்க்கப்பட்ட இன்னொன்றையும் எடுத்து, அவற்றுக்கு இடையேயான வித்தியாசத்தைப் பாருங்கள் (புரிகிறதா?), ஏனென்றால் அவை வாழும் மண்தான் காரணம். பார்த்தீர்களா?

155 இப்பொழுது, சீனர், சீனர் என்பவர் ஒரு—ஒரு மஞ்சள் நிற நபர், ஜப்பானியர், போன்றவர், மற்றும் ஒரு சீனர் ஆவார். எத்தியோப்பியன் ஒரு—ஒரு கறுப்பு நிற மனிதன், அல்லது இப்போது நம்மிடம் இருக்கும் கறுப்பினத்தவர். அவன் அங்கே அந்த இருண்ட தேசங்களுக்குச் சென்றான்.

156 மேலும் அவர்கள்—மேலும்—மேலும் அவர்கள்…பின்னர் அந்த வெள்ளையன் என்பவன் ஆங்கிலோ-சாக்சன் மக்களாக இருந்தனர், அவர்களே நாம். மேலும், இங்குள்ள மக்களில்—நாம் வெள்ளையர்கள் என்று அழைப்பவர்களில், அவர்கள் இங்கிலாந்திலிருந்து வந்தவர்கள், அது முன்பு “தூதர் தேசம்” என்று அழைக்கப்பட்டது. ஏனென்றால் அவர்கள் வெள்ளையாகவும், பொன்னிற முடியுடனும், அதுபோலவும் இருந்ததால்…மேலும் அயர்லாந்து, நார்வே மற்றும் அவ்வாறான இடங்களில், அங்கே பரவலாகச் சிதறடிக்கப்பட்டனர். அவர்கள் எல்லோருமே ஆங்கிலோ-சாக்ஸன் ஜனங்களிலிருந்து வந்தவர்கள்.

157 இப்பொழுது, எது முதலில் இருந்தது, எது சபிக்கப்பட்டது? அவர்கள் யாருமே இல்லை. நீங்கள் எதை அடைய முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். நீங்கள் காமிடம் செல்ல முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன், காமின் ஜனங்களிடத்திற்கே.

158 இப்பொழுது, காம், சேம், யாப்பேத் என்பவர்கள் இருந்தனர். இப்பொழுது காம், அவன்—அவன்—அவன் தன்னுடைய தகப்பனின் நிர்வாணத்தை மறைக்க முயற்சிக்கவில்லை, ஆனால் அவனை நகைத்து, பரிகசித்தான். காம் தன்னுடைய தகப்பனின் நிர்வாணத்தை நோக்கிப் பார்த்து, அவனுடைய அவமானத்தை மறைக்க முயற்சிக்காத காரணத்தால் தேவன் காமின் மேல் ஒரு சாபத்தை வைத்தார். அப்பொழுது சேமும் யாப்பேத்தும் பின்னிட்டு வந்து தங்களுடைய தகப்பனார் நிர்வாணமாய் படுத்திருந்தபோது, தங்களுடைய மேலங்கிகளை மேலே போட்டுவிட்டனர். இப்பொழுது, தேவன் காமிடம், அவனுடைய சந்ததி மற்றவர்களுக்குச் சேவை செய்யும் என்று கூறினார்.

159 இப்பொழுது கருமை நிறம் ஒரு சாபமாய் இருந்தது என்று நீங்கள் நினைத்திருந்தால், சரி அப்படியானால், யூதர்களும் கருமை நிறத்தவர்கள்தான். நீங்கள் அதை—நாம் கருப்பின மனிதர் என்று அழைப்பதாக நினைத்தால், அல்லது, இப்பொழுது இங்கிருக்கிற இந்தத் தேசத்தின் நீக்ரோக்கள், நீங்கள் இந்தியாவிற்கு

செல்ல வேண்டும். நீக்ரோக்களை விட இந்தியர்கள் மிகவும் கருமையானவர்கள். நான் அவர்கள் இருவரின் நாடுகளுக்கும் சென்றிருக்கிறேன். இங்கே எத்தியோப்பியாவிலிருந்து வந்துள்ள அந்த எத்தியோப்பியனும், ஆப்பிரிக்கனையும், இன்றைக்கு நாம் அறிந்துள்ள கறுத்த மனிதனையும் காண்கிறோம். அவர்கள் அங்கே கீழே உள்ளனர், அவர்களில் அநேகர் இன்னமும் தங்களுடைய பழமையான கோத்திரங்களில் உள்ளனர். இயேசுவானவர் வந்தபோது நாம் இருந்ததைப் போன்றே.

160 இப்பொழுது ஆப்பிரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவர்களைப் போலவே வெள்ளையர்களும் மிகவும் பழமையானவர்களாக இருந்தனர், ஒருவேளை இதைவிட மோசமாக இருக்கலாம். நினைவிருக்கட்டும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நாம் நிர்வாணமான பழங்குடியினராக ஒரு வில், அம்பு, ஒரு கற்கோடாரியால் வேட்டையாடின (அதுதான் சரி), நாம் ஆங்கிலோ-சாக்ஸன் ஜனங்களாக இருந்தோம். அது முற்றிலும் உண்மை. எனவே எது எது?

161 இன்றைக்கு சபிக்கப்பட்ட ஒருவன் தான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவன் என்று நான் உங்களுக்குச் சொல்லுவேன். அவ்வளவுதான். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறவன் பாக்கியவான்.

162 இப்பொழுது, நீங்கள் கூற முடியாது…நான் அந்தத் தேசத்திலிருந்து எஸ்கிமோக்களை வெளியே கொண்டு வருவேன். அவன் அங்கே மேலே இருக்கிறான்; அந்த மனிதன் இங்குள்ள கறுப்பு நிறமுள்ள ஜனங்களைக் காட்டிலும் கருமையாக இருக்கிறான். நான் இந்தியாவிற்கு சென்று இந்தியர்களை அழைத்து வருவேன்; அவன்—அவன் ஒரு கறுப்பு நிறமுள்ள மனிதன் அல்ல, அவன் உண்மையாகவே கறுப்பு நிறமுள்ளவன். அவன் உண்மையாகவே கறுப்பு நிறத்தைக் காட்டிலும்…கருப்பானவன். அவன்…என்று அழைக்கப்படுகிறான். அவன் ஒரு இந்தியன். பாருங்கள், இப்பொழுது ஆப்பிரிக்காவில் உள்ள ஆப்பிரிக்க ஜனங்களில் சிலரை நாம் காண்கிறோம்…அவர்களில் சிலர் வெளிர் நிறமாயிருக்கின்றனர்; அவர்களில் சிலர் ஏறக்குறைய வெள்ளை நிறத்தைப் போன்று உள்ளனர்; அவர்களில் சிலர் வித்தியாசமான வழிகளில் உள்ளனர்.

163 நீங்கள் யூதர்களிடம் செல்லுங்கள்; யூதர்கள் யாவரும் கருமை நிறமுள்ளவர்கள் என்று கூறுகிறீர்கள். ஒரு யூதன் ஒரு பழுப்பு நிற நபராய் இருக்கிறான், ஆனால் நான் நீல நிறக் கண்களோடும், சிகப்பான சருமத்தோடும், சிவந்த தலையோடும் அநேகரைக் கண்டிருக்கிறேன். பார்த்தீர்களா?

164 ஆகையால் முழு காரியமும் இதுதான்: நாம் யாவரும் ஒரு மரத்திலிருந்து தோன்றியிருக்கிறோம். அது உண்மை. நாம் யாவரும் ஏதேனின் வீழ்ச்சியினூடாகச் சபிக்கப்பட்டோம்.

நாம் யாவரும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினூடாக இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். ஆமென். இதோ அது உள்ளது. எனவே சாபமே கிடையாது. விசுவாசிக்காதவர்கள் சபிக்கப்பட்டவர்கள், ஆனால் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள். ஆகையால் நண்பனே, கறுப்பு நிறத்தவனும் அல்லது கறுப்பர் இனத்தவனும், வெள்ளைக்காரன் அல்லது மஞ்சள் நிற மனிதன் என்ற எவருமே கிடையாது. அப்படியானால், கறுப்பு மனிதன் கறுப்பாயிருப்பதனால் சபிக்கப்பட்டான் என்றால், அப்பொழுது மஞ்சள் நிற மனிதன் பாதி சபிக்கப்பட்டவனாயிருக்கிறான். அதன்பின்னர்—அதன்பின்னர் மஞ்சள் நிற மனிதன், அதன்பின்னர் பழுப்பு நிற மனிதன், அவன் மூன்றில் இரண்டு பங்கு சபிக்கப்பட்டவனாயிருக்கிறான். பார்த்தீர்களா? அதன்பின்னர், ஆப்பிரிக்கர் கிட்டத்தட்ட ஐந்தில் நான்கு பங்கு சபிக்கப்பட்டனர். அப்பொழுது இந்தியன் உண்மையாகவே சபிக்கப்பட்டவன் என்று நான் யூகிக்கிறேன். ஓ, என்னே! எவ்வளவு அர்த்தமற்றது! இல்லை! அது வித்தியாசமான காலநிலை மற்றும் ஜனங்கள் வாழ்ந்த சூழல்கள்தான். அவர்கள் திரும்பினர், பழங்குடியினர் மற்றும் பிற, அவர்கள் வித்தியாசமாக இருந்தனர்.

165 அமெரிக்க இந்தியனைப் பாருங்கள். அவர்களில் அநேகர்... அங்குள்ள நவாஜோக்கள் இந்தத் தேசத்தில் உள்ள நம்முடைய கறுப்பு நிறமுள்ள எத்தியோப்பிய ஜனங்களைவிட, நவாஜோ இனம் கறுத்த இனம். அப்பாச்சிகள்...அவர்கள் ஒருவிதமான செப்பு நிறத்தில் இருப்பார்கள். மேலும், வெவ்வேறு பழங்குடியினர்... பார்த்தீர்களா? எனவே அங்கே இந்தியர்கள் மத்தியில், சரியாக இங்கே, நீங்கள் கருப்பானவர்களையும் காணலாம், கிட்டத்தட்ட...செரோகி கிட்டத்தட்ட நம்மைப் போலவே மங்கின நிறமாயிருக்கின்றனர். இங்கே இந்தத் தேசத்தில் பல்வேறுபட்ட பழங்குடியினர் உள்ளனர். எனவே நீங்கள் பாருங்கள், அவர்கள் பாதி சபிக்கப்பட்டவர்கள் என்றும், முழுவதுமாகச் சபிக்கப்பட்டவர்கள் என்றும் நீங்கள் கூற முடியாது. அவர்கள் கறுப்பாயிருக்கிறபடியால் அவர்கள் சபிக்கப்படவில்லை. அவர்கள் மஞ்சள் நிறமாயிருந்த காரணத்தினாலோ அல்லது அவர்கள் வெள்ளையாயிருந்த காரணத்தினாலோ சபிக்கப்பட்டிருக்கவில்லை. எனக்குத் தெரிந்த ஒரே ஒரு சாபம் மாத்திரமே உண்டு, அது இயேசு கிறிஸ்துவைக் குறித்த அவிசுவாசமாயுள்ளது. (டோனி, நான் முடிக்க வேண்டிய நேரமாயுள்ளது என்பதை நான் அறிவேன். ஆனால் எனக்கு இன்னும் இரண்டு கேள்விகள் உள்ளன.)

**23.** சரி இப்போது. **பல தேசங்களுக்குள்ளாகச் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலின் பத்துக் கோத்திரங்களும் (ஆதியாகமம் 44:49), யோசேப்பின் கோத்திரமும் எங்கே? சிமியோன், லேவி, அவர்கள் தங்களுக்கென்று சொந்த தேசம் இல்லாதிருந்தனர், ஆனால் மற்ற பத்து கோத்திரங்களுக்கிடையே**

**சிதறடிக்கப்பட்டுள்ளனர்...பத்து கோத்திரங்கள் எங்கே? நாம் அவர்களைக் கண்டறிய முடியுமா?**

166 ஆம், ஐயா! அவைகளைக் கண்டறிய முடியும். புவியியல் ரீதியாக அவைகளை வேதாகமத்தில் காணலாம். கடைசி நாட்களில் அவர்கள் எங்கே இருப்பார்கள் என்றும், அவர்களுடைய முடிவு என்னவாயிருக்கும் என்றும் தேவன் நமக்குக் கூறுகிறார். இப்பொழுது, நான் ஒரு புத்தகத்தைப் படித்தேன், அது இஸ்ரேலில், அங்கு அவர்கள் இருந்த இடத்தைப் பற்றியது, அங்கே ஒருவர் தன்னுடைய கால்களை எண்ணெயில் தோய்த்து மற்றெல்லாவற்றையும் செய்ததாக அவர் கூறினார். தேவன் அவைகளையெல்லாம் வெவ்வேறு இடங்களில் அமைத்திருக்கிறார். யூதர்கள் யாவரும் பாலஸ்தீனாவிற்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள், கடைசி நாட்களில் அவர்கள் அங்கே இருப்பார்கள் என்று தேவன் வாக்களித்திருந்தார்.

**24.** இன்னும் ஒரு கேள்வி: **முடியுமா...தேவன் நியாயத்தீர்ப்பாக யுத்தங்களை அனுப்பினார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. தேவன் நியாயத்தீர்ப்பாக யுத்தங்களை அனுப்புகிறார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை.** (ஒரு நிமிடம் கவனியுங்கள்.) **பண்டைய பாபிலோன் முதற்கொண்டு ஹிட்லர் முடிய உள்ள இந்த இறைச்சிக் கடைக்காரர்களின் கரங்களில் தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றக் குற்றவாளிகளுடன் சேர்ந்து, அப்பாவிப் பெண்களையும் குழந்தைகளையும்...கொல்வதற்கு தேவன் பட்டயத்தை அளித்தார் என்பதை நான் நம்பவில்லை. தேவன்...என் அன்பின் தேவன் இதைச் செய்யமாட்டார்...என் அன்பின் தேவனே** (மன்னிக்கவும்!), **இதைச் செய்யமாட்டார். யுத்தங்கள் சாத்தானின் கிரியைகளாயிருக்கின்றன. தயவு செய்து இந்தக் குழப்பத்தை உறுதிப்படுத்துங்கள்.**

167 இப்பொழுது, ஒரு நிமிடம். நான் இதைச் சற்று நேரத்திற்கு முன்பு படித்தேன், நான் இதைக் கீழே வைத்ததற்கான காரணம். இப்பொழுது, நீங்கள் ஒரு நிமிடம் அமைதியாயிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இப்பொழுது, நாம் இதைச் சரியாகப் புரிந்து கொள்வோம், ஏனெனில் இது ஒரு முக்கியமான கேள்வியாயுள்ளது. அது பயபக்தியுடன் அணுகப்பட வேண்டும். அதைத் தொடர்ந்து, நீங்கள் இன்னும் சிறிது நேரம் எங்களுடன் பொறுமையாக இருந்தால்...

168 நேரம் தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவேன், ஆனால் இது...நினைவில் கொள்ளுங்கள், அதைக் குறித்து என்ன? முன்பெல்லாம், நீங்கள் இரவு முழுவதும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் நடனமாடச் சென்று, (புரிகிறதா?), உலக காரியங்களில் ஈடுபடுவீர்கள், ஆனால், சகோதரரே, இருபது நிமிடங்களுக்கு மேலாகத் தேவனுடைய வார்த்தையைக்

கேட்கும்போது, நாம் ஒரு புதிய பிரசங்கியாரை நியமிக்க வேண்டும். பார்த்தீர்களா? இது ஒரு அவமானம். பவுல் இரவு முழுவதும் பிரசங்கித்தான். அநேக ஆண்டுகளுக்கு முன்பு நான் இங்கே அதிகாலை இரண்டு அல்லது மூன்று மணிக்குப் பிரசங்கித்தேன். ஜனங்கள் இங்கே இந்த இடத்தில் மேலும் கீழும் நடந்து அதிகாலை இரண்டு அல்லது மூன்று மணிக்குத் தேவனைத் துதித்துக் கொண்டேயிருப்பார்கள். இரண்டு மணி மற்றும் மூன்று மணிக்கு ஒரு நேரத்தில் டஜன் பேர் பரிசுத்த ஆவியைப் பெறுவதை நீங்கள் காணலாம். தேவனே இரக்கமாயிரும். நான் அதை மீண்டும் காண விரும்புகிறேன். ஆனால் நம்மால் முடியாது; அந்த நாள் போய்விட்டது. இப்பொழுது அந்த நாள் போய்விட்டது; அவள் இப்பொழுது வெகுதூரம் கழிந்துவிட்டாள். இரவு நெருங்கிக்கொண்டிருக்கிறது, ஜனங்கள்…“நல்லது, நாங்கள் இனிமேல் கவலைப்படமாட்டோம், எனவே…என்னே, நாம் உள்ளே செல்ல ஆயத்தமாகும்படி, அவர்கள் வெளியேறினால் நலமாயிருக்கும்.” அது ஏறக்குறைய அந்தவிதமாகவே செல்கிறது.

169 பொறுங்கள், இப்பொழுது நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுது, சகோதரனோ அல்லது சகோதரியோ, நான் உங்களுடன் இணங்கப் போகிறதில்லை, எனக்குத் தெரியாது. அது இன்று காலை இங்கே வைக்கப்பட்டிருந்தது. நான் அதை என்னுடைய வேதாகமத்தில் வைத்திருந்தேன், சற்று முன்பு அதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது, ஒரு சிநேகபூர்வமான வழியில்…இப்பொழுது, நீங்கள் என் மீது கோபப்படுவதை நான் விரும்பவில்லை. நீங்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

170 நாங்களும்…நினைவில் கொள்ளுங்கள், நானும் உங்களுடன் உடன்படவே விரும்புகிறேன். சற்று முன்பு அந்தப் பரிதாபமான பெண்ணோடு நான் செய்ததுபோல, உங்களுடைய தீர்மானத்தின் பேரிலான இந்த—இதன் பேரில் கூறினாள்…அவளும் அவளுடைய கணவனும், அவர்கள் ஓடிப்போய் விவாகம் செய்து கொண்டனர்; அது அங்கிருந்தது. ஆனால் அவள் தன்னுடைய உறுதிமொழியை ஏற்றுக் கொண்டாள்; அவள் அதைக் காப்பாற்றியாக வேண்டும். புரிகிறதா? இப்பொழுது, நான் தேவனுடைய வார்த்தையோடு பற்றிக்கொள்ள வேண்டும்.

> ஆனால் இப்பொழுது, **நான் நம்ப முடியவில்லை…** ஆனால் முதலாவது, **தேவன் நியாயத்தீர்ப்பாக யுத்தங்களை அனுப்புகிறார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை.**

171 சரி இப்பொழுது, நண்பனே, உங்களுடைய விசுவாசத்தில் ஒரே ஒரு காரியம் மாத்திரமே தவறாயுள்ளது, அது வேதப்பிரகாரமானதல்ல. தேவன் யுத்தத்தை நியாயத்தீர்ப்பாக அனுப்புகிறார். அது உண்மை. நான்—நான் உங்களுக்கு

வேதவசனத்தை அளிக்கப் போகிறேன்; நான் அதை இங்கே வாசிக்காமல் அதை உங்களுக்குக் கூற போகிறேன்.

பாருங்கள். **பண்டைய பாபிலோன் முதல் ஹிட்லர் வரையிலான இந்தக் இறைச்சிக் கடைக்காரர்களின் கைகளில், அப்பாவிப் பெண்களையும் குழந்தைகளையும் கொல்வதற்காகக் தேவன் ஒரு பட்டயத்தைக் கொடுத்தார் என்று சிலர் நம்புவதை நான் நம்பவில்லை.**

172 அவர் அதைச் செய்தார் என்று நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களிடம் கூறினால், அதை வேதாகமத்தின் மூலம் நிரூபித்தால், அப்பொழுது நீங்கள் அதை விசுவாசிப்பீர்களா (புரிகிறதா?), அவர் அதைச் செய்தாரா என்பதை நீங்கள் அறிவீர்களா? சரி. அவர் அதை மீண்டும் செய்யப் போகிறார். சரி. இதைக் கேளுங்கள்.

173 எனக்குத் தெரியாது. நான் அறிந்துள்ள எல்லாவற்றிற்காகவும் இங்கே அமர்ந்துள்ள என்னுடைய நெருங்கிய நண்பனாக இது இருக்கலாம்; ஏனென்றால் எனக்குக் கையெழுத்து கூடத் தெரியாது என்பதை பரலோகத்திலிருக்கிற தேவன் அறிவார். என்னால் உங்களிடம் கூற முடியவில்லை. ஆனால் நீங்கள் இதற்குச் செவிகொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். “என் தேவன் அன்பின் தேவன், என் தேவன் அன்பாயிருக்கிறார், அவர் இதைச் செய்யமாட்டார். யுத்தங்கள் சாத்தானால் உண்டானவைகள்.” யுத்தங்கள் சாத்தானால் உண்டானது என்று நான் கூறுவதை நான் ஒத்துக் கொள்கிறேன். அது சரியாகத்தான் உள்ளது. அவன் இந்த உலகத்தின் ஒரு அதிபதி. இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு இராஜ்ஜியமும், ஒவ்வொரு தேசமும் சாத்தானுக்கு சொந்தமானது. தேவன் தம்முடைய வார்த்தையில் அவைகளை அவ்வாறு கூறினார். சாத்தான், “அவை என்னுடையவை” என்றான். அவர்கள் அவனுடையவர்கள் என்று இயேசு ஒப்புக்கொண்டார். ஆனால் சிறிது காலத்திற்குப் பிறகு அவற்றுக்கெல்லாம் அவர் சுதந்தரவாளியாகப் போகிறார், இயேசு சுதந்தரித்துக் கொள்வார். அப்பொழுது நமக்கு இனிமேல் யுத்தங்களே இருக்காது. ஆனால் தேவன் திருத்துவதற்காகவும், நியாயத்தீர்ப்பிற்காகவும் சாத்தானை இதைச் செய்ய அனுமதிக்கிறார்.

174 இப்பொழுது, நாம் துவங்குவதற்கு முன்பு நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் இதற்குப் பதில் கூறி, கண்டறியும்படி நான் விரும்புகிறேன். தேவன் ஒரு…(நீர் கூறினீர்)… அது இந்தக் காரியங்களைச் செய்யமாட்டார் என்று நீங்கள் நம்பவில்லையென்றால். அதை ஆரம்பத்திலிருந்தே துவங்க… இப்பொழுது, உங்களால் முடிந்தால், உங்களுடைய முழுமையான கவனத்தை எனக்குக் கொடுங்கள். கவனியுங்கள். ஏன் தேவன் தாமே தம்முடைய சொந்த குமாரனை தண்டித்து, அவரைச் சிலுவையில் கொன்றார்? தேவன் தம்முடைய சொந்த குமாரனை சிலுவையில்

கொன்றார். வேதம், "அவரை அடிக்கவும், அவரை நொறுக்கவும், அவரைக் காயப்படுத்தவும்," "அதே சமயத்தில் தேவனுக்கு அது பிரியமாயிருந்தது" என்று கூறியுள்ளது. உங்களை இரட்சிக்க தேவன் தம்முடைய சொந்த குமாரனை அந்த விதமாகச் செய்தார்.

175 இஸ்ரவேலின் மகத்தான இராஜாவாகிய சவுலைக் குறித்து நான் கேட்க விரும்புகிறேன். தேவன் அவனிடம் சென்று, ஒக் அரசனையும், அவனுக்கிருந்த எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, அங்கிருந்த எல்லாவற்றையும் முற்றிலுமாக அழித்துப் போடும்படி கூறினார். புருஷர், ஸ்திரீகள், பிள்ளைகள் மற்றும் யாவற்றையும்... சவுல்...ஒன்றும் உயிருடன் இருக்கக் கூடாது என்று, அதைக் கொல்வதற்காகக் கால்நடைகளையும் கூட. சவுல் அங்கே போய்ச் சில கால்நடைகளைக் காப்பாற்றினான். தேவன் அவனிடத்திலிருந்து ஆவியை எடுத்துப்போட்டு, அவனை அவரிடத்திலிருந்து பிரித்தார்; அவன் தேவனுடைய சத்துருவானான்.

176 தேவன் பழைய ஒக் அரசனை ஆகாபின் கரங்களில் கொடுத்தபோது, எலியா ஏன் அங்கே நின்றான்? அவன் ஆகாபை அந்த ராஜாவைக் கொல்லச் சொன்னான். ஆகாப் அதைச் செய்ய மறுத்துவிட்டான். எலியா தீர்க்கதரிசி ஒரு காவலாளியை உடையவனாயிருந்தான்..."உன்னுடைய பட்டயத்தினால் என்னை அடி" என்றான். அவன் ஒரு தீர்க்கதரிசி என்பதை உணர்ந்தான்.

அதற்கு அவன், "நான் செய்யமாட்டேன்" என்றான். அவன் தன்னுடைய ஜீவனை இழந்தான். அப்பொழுது அவன் வேறொருவரிடம், "என்னை அடி" என்றான். அந்த மனிதன் அவனை வாளால் அடித்து வெட்டினான். அவன் மாறுவேடத்தில் தன்னை போர்த்திக் கொண்டு அங்கேயே நின்றான். இதோ ஆகாப் தன்னுடைய இரதத்தின் மேல் சவாரி செய்து வந்தான்.

அவன், "நீ எதைக்—எதைக் குறித்து இங்கே நின்று கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டான்.

அவர், "சரி, நான் ஒரு காவலாளி; எனக்கு ஒரு மனிதனைப் பராமரிக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. அவன் என்னை அடித்துவிட்டு ஓடிவிட்டான்" என்று கூறி, அவன், "நான் அவனைப் போக விட்டேன். நான் அவ்வாறு செய்ததால், நான் என்னுடைய சொந்த பிராணனை அளிக்க வேண்டும் என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள்" என்றான்.

அதற்கு அவன், "நீ உன்னுடைய சொந்த பிராணனைக் அளிக்க வேண்டும்" என்றான்.

அவன் தன் போர்வையை அவிழ்த்துவிட்டு, "**கர்த்தர் உரைக்கிறதாவது**, ஏனென்றால் நீ அங்கே அந்த ராஜாவைக் கொலை செய்யவில்லை, நீ அதற்கான கிரயமாக உன்னைத்தானே செலுத்த வேண்டும்" என்றான். அது சரியா? அது முற்றிலும் உண்மை.

177 நான் இங்கே உங்களுக்கு ஒன்றைப் படிக்கட்டும். பாபிலோனைப் பற்றி என்ன சொல்வது, யோசுவா…தேவன் யோசுவாவை அங்கே அனுப்பியபோது, அவன் சிறு குழந்தைகளையும், பிள்ளைகளையும், மற்ற எல்லாவற்றையும் முற்றிலுமாக அழித்தான். அவன் ஒரு காரியத்தை ஜீவிக்க அனுமதித்தால்…அவன் எல்லாவற்றையும் அழித்துப் போடுகிறான். சிறிய பெலிஸ்திய குழந்தைகளை, அவன் அவர்களை அழித்துப் போட்டான். தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார். அவன் அதைச் செய்யவில்லையென்றால், அது அவனுடைய சொந்த ஜீவியமாயிருந்தது.

178 நான் இன்னும் ஒரு சில நிமிடங்களில் அதைச் சரி செய்யப் போகிறேன். தேவன் அன்பாய், பரிபூரண அன்பு; ஆனால் அன்பு என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியாது. ஆகையால்தான் இன்றைக்கு ஜனங்கள் விசுவாசம் என்றால் என்னவென்று அறியாதிருக்கின்றனர். தேவன் அன்பாயிருக்கிறார். அவர் அன்பில் இருக்க வேண்டும்; அவர் தம்முடைய வார்த்தைக்கு இராஜாதிபத்தியமுள்ளவராயிருக்கிறார். அவர் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டும். அவர் உங்களை நேசிக்க வேண்டும். அவர் உங்களை நேசிக்கிறாரானால், அவர் உங்களைப் பாதுகாக்க வேண்டும்.

179 இங்கே கவனியுங்கள். பிள்ளைகளின் கொல்லுதலைக் குறித்து நீங்கள் பேசுகிறீர்கள். ஒரு நிமிடம், நான் இங்கே வேத வாக்கியங்களில் ஒன்றை, இந்தக் காரியங்களைப் பற்றி வேதம் என்ன—என்ன கூறுகிறது என்பதை நான் உங்களுக்குக் இங்கே காண்பிக்கட்டும். நாம் இங்கு வந்து இதை ஒரு நிமிடம் கேட்டு, தேவன் என்ன கூறினார் என்று பார்ப்போம். இப்பொழுது, நீங்கள் அதை குறித்துக்கொள்ள விரும்பினால், நான் எசேக்கியேல் 9-ஆம் அதிகாரத்திலிருந்து வாசித்து கொண்டிருக்கிறேன். கூர்ந்து கவனியுங்கள்:

> மேலும்…*பின்பு அவர் என் காதுகள் கேட்க மகா சத்தமாய்: நகரத்தின் விசாரிப்புக்காரர் சங்கரிக்கும் ஆயுதங்களைத் தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு வரக்கடவர்கள் என்று சொன்னார்.* (இப்பொழுது, இது தேவன் பேசுவதாகும்.)
>
> *அப்பொழுது இதோ, ஆறு புருஷர், வெட்டுகிற ஆயுதங்களைத் தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு, வடக்கே பார்த்த உயர்ந்த வாசலின் வழியிலிருந்து வந்தார்கள்; அவர்களில் சணல்நூல் அங்கிதரித்து, தன் அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற ஒருவன் இருந்தான்; அவர்கள் உள்ளே பிரவேசித்து, வெண்கல பலிபீடத்தண்டையிலே நின்றார்கள்.*
>
> *அப்பொழுது இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கேருபீன்மேலிருந்தெழும்பி, ஆலயத்தின் வாசற்படியிலே*

*வந்து, சணல்நூல் அங்கிதரித்து, தன் அரையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷனைக் கூப்பிட்டு,*

எனவே...***கர்த்தர்***...(பெரிய எழுத்து **க-ர்-த்-த-ர்,** அவர் தேவன்.)...***கர்த்தர்*** *அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்.*

(**கர்த்தர்**) *பின்பு அவர் என் காதுகள் கேட்க மற்றவர்களை நோக்கி: நீங்கள் இவன் பின்னாலே நகரமெங்கும் உருவப்போய் வெட்டுங்கள்; உங்கள் கண் தப்பவிடாமலும், நீங்கள் இரங்காமலும்,* (விழிப்புடன் இருங்கள், 6-வது வசனம்.)

*முதியோரையும்,* வாலிபரையும், *கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும் சங்கரித்துக் கொன்றுபோடுங்கள்;* (தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார். தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார்!)... *அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள், என் பரிசுத்த ஸ்தலத்திலே துவக்குங்கள் என்று என் காதுகள் கேட்கச் சொன்னார்; அப்பொழுது அவர்கள் ஆலயத்துக்கு முன்னே இருந்த மூப்பரிடத்தில் துவக்கம்பண்ணினார்கள்.*

180 வேறு வார்த்தைகளில் கூறினால், தேவன் இந்த ஜனங்களிடம், “இப்பொழுது, பொறுத்திருங்கள்; நான் முதலில் ஜனங்களை, உண்மையாகவே தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களைக் குறித்து வைக்கப் போகிறேன்...” அவர் அவர்கள்மேல் ஒரு முத்திரையைப் போட்டார். அவர், “இப்பொழுது” சங்கரிக்கும் ஆயுதத்தை வைத்துள்ள இந்த மனிதர்களிடத்தில், “நீங்கள் ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் அல்லது எந்தக் காரியத்தையும் தப்பவிடாமல், நீங்கள் எல்லாவற்றையும் முற்றிலுமாகக் கொன்று போடுங்கள்” என்றார்.

181 ஜலப்பிரளயத்திற்கு முந்தின உலக அழிவில், கோடிக்கணக்கான ஜனங்கள் பூமியின் மேல் இருந்தபோது, தேவன் நோவா என்னும் பெயர்கொண்ட ஒரு பண்டைய பரிசுத்த பிரசங்கியாரை அனுப்பி, நூற்று இருபது ஆண்டுகள் பிரசங்கித்து, அவர்களைப் பேழைக்குள் வரும்படி கூறி, அந்தப் பேழைக்குள் வராத யாவரும் அழிக்கப்படுவார்கள்...வானங்களின் ஆதிக்கத்தை உடையவராயிருந் சர்வ வல்லமையுள்ள தேவன், லட்சக்கணக்கான முதியவர்களையும், இளைஞர்களையும், சிறு குழந்தைகளையும் தண்ணீரில் மூச்சுத்திணறி மடிந்துபோகச் செய்த மழையைப் பொழிவித்தார்.

182 சர்வ வல்லமையுள்ள தேவன், அவர் உண்மையாகவே அன்பின் தேவன். அது உண்மை. அவர் செய்ய வேண்டும். அவர் தமக்குச் சொந்தமானவர்களை நேசிக்கிறார். அவர் தம்முடைய வார்த்தைக்கு இராஜாதிபத்தியமாயிருக்க வேண்டும். எனவே...ஒரு சர்ச்சைக்காக அல்ல, ஆனால் உங்களுடன் இணங்கவில்லை. உங்களுடைய அன்பின் தேவன்...

183 இங்கே அண்மையில் நான் பேசிக்கொண்டிருந்தேன்...அது ஒருக்கால் ஒரு யேகோவா சாட்சியாக இருக்கலாம். அந்த மனிதன் அருகில் வந்து, "சகோதரன் பிரான்ஹாம், எரிகிற நரகம் ஒன்று உண்டு என்று நீர் விசுவாசிக்கின்றீர் என்று நீர் என்னிடத்தில் கூறுகிறீரா?" என்று கேட்டார்.

நான், "இது நான் கூறுவது அல்ல, அது வேதம் என்ன கூறுகிறது என்பதுதான்" என்றேன்.

அவர், "அன்புள்ள பரலோகப் பிதா தம்முடைய பிள்ளைகளைச் சுட்டெரிப்பார் என்று நீர் என்னிடத்தில் கூறுகிறீரா? ஏன்," என்று கூறி, "நீங்கள் உங்களுடைய பிள்ளையை எரிக்கமாட்டீர்கள்" என்றார்.

நான், "இல்லை, ஐயா!" என்றேன்.

"அப்படியானால் நல்லது, ஒரு மானிடராகிய நீங்கள் அவ்வளவு அன்பை உடையவர்களாயிருந்தால், (புரிகிறதா, ஜனங்கள் எப்படி அந்தக் காரியத்தைத் திரித்துக் கூற முடியும்?), ஒரு மானிடராகிய நீங்கள் அவ்வளவாய் அன்பு கொண்டிருந்தால், ஒரு அன்பான பரலோகப் பிதா தம்முடைய பிள்ளைகளை அழித்துப் போடுவார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

184 நான், "ஒருபோதும் இல்லையே!" என்றேன். அவர் தம்முடைய பிள்ளைகளை அழிக்கிறதில்லை, ஆனால் நீங்கள் யாருடைய பிள்ளை? தேவன் தம்முடைய பிள்ளைகளை அழிக்கிறதில்லை. அவர் அவர்களை உள்ளே கொண்டுவர தன்னால் இயன்றவரை முயற்சித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அது அவனுடைய பிள்ளைகளை அழிக்கும்படி கட்டவிழ்க்கப்பட்டிருக்கிற பிசாசுதான். எனவே தேவன் சாத்தானை அனுமதிக்கிறார்.

185 பாருங்கள். பொல்லாங்கு இறங்கி வரவும், சாத்தான் வெளியே சென்று, இயேசு கிறிஸ்து வரும் வரை தேவனுடைய பரிபூரண ஊழியக்காரனான யோபையும், அவனுடைய பிள்ளைகளையும், அவனுக்கு இருந்த எல்லாவற்றையும் அழிக்கவும் அனுமதித்தது யார்? தேவன் அங்கே ஒரு பொல்லாத ஆவியை அனுப்பி, யோபுவின் பிள்ளைகள் எல்லோரையும் அழித்தார், ஒவ்வொரு காரியமும் தம்முடைய ஊழியக்காரனை சோதிப்பதற்கேயாகும். அது சரியா? நிச்சயமாக.

186 ஓ, நான் இங்கே ஒரு மணி நேரம் நின்று, என்னுடைய சகோதரனே, சகோதரியே, அவைகளை உங்களுக்குக் காண்பிக்க முடியும். நீங்கள் யாராயிருந்தாலும் சரி. நீங்கள் இந்தத் தேவனுடைய

ஆவியைக் குழப்பிக் கொள்ள வேண்டாம். யுத்தங்கள் தேசங்களின் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளாக இருக்கின்றன. அழிவுகள் தேவனால் அனுப்பப்படுகின்றன. வேதம் அவ்வண்ணமாய் கூறியுள்ளது. தேவன் அன்பின் தேவனாயிருக்கிறார், ஆனால் தேவன் கோபாக்கினையின் தேவனாகவும் இருக்கிறார். நீங்கள் ஒரு அன்பானவருக்கு முன்பாக நிற்கப்போவதில்லை…அதுவே இன்றைக்கு சபையைப் புண்படுத்தும் காரியமாய் இருந்து வருகிறது.

187 "ஏதோ ஒரு அன்பின் பிதா, நிச்சயமாகவே நான் இதைச் செய்ய அவர் கவலைப்படமாட்டார்." நீங்கள் அதைச் செய்ய விரும்பினால், நீங்கள் தொடர்ந்து அதைச் செய்யலாம், ஏனென்றால் தேவனுடைய அன்பு துவக்கத்திலேயே உங்களுக்குள் இல்லை.

188 நாம் இன்னும் சிறிது நேரத்தில் இராபோஜனம் எடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம், இது உண்மையாகவே உங்களுக்குள் பதிய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதைக் குறித்த காரியம் என்னவெனில், உங்களுடைய இருதயத்தில் உள்ளவை உங்களுடைய ஜீவியத்தை உருவாக்கும். நீங்கள் நிலத்தில் போடும் விதையானது அந்த விதமான விதையை உற்பத்தி செய்யும். நீங்கள் எப்படியொரு ஒரு—ஒரு மக்காச்சோள பொறிச் செடியை எடுத்து, அதிலிருந்து ஒரு—ஒரு கனிக்கல் நாணலை உருவாக்க முடியும்? ஒரு சோள மணியை எடுத்து முள்செடியை உருவாக்க முடியாதது போல, இதையும் உங்களால் செய்ய முடியாது. உங்களால் அவைகளை உண்டாக்க முடியாது, ஏனென்றால் அவைகள் இரண்டு வித்தியாசமான சுபாவங்கள், முற்றிலும் இரண்டு வித்தியாசமான ஜீவன்கள். அந்த…நீங்கள்—நீங்கள் ஒரு கனிக்கல் நாணலை விதையையும், ஒரு வெங்காய விதையையும் எடுத்து, மிகச் சிறந்த மனிதனால் கூட அவைகளை வேறுபடுத்திப் பார்க்க முடியாத அளவிற்கு அவைகள் மிகவும் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. அது உண்மை. நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம் அவைகளை நட வேண்டும். அவை இரண்டும் இயற்கையாகவே காணப்படுகின்றன, ஆனால் அவைகளை நடுங்கள். அவை இரண்டும் உற்பத்தி செய்யும்; ஒன்று கனிக்கல் நாணலாகவும், மற்றொன்று ஒரு வெங்காயமாகவும் இருக்கும். அது முற்றிலும் உண்மை.

189 "ஏன், *இந்த* விதை *இதே* மாதிரி துல்லியமாகத் தோன்றினாலும், எப்படி வேறொரு வகையான உயிரை உருவாக்குகிறது?" என்று கேட்கலாம். அதற்குக் காரணம் அந்தவிதமான ஜீவியம் அதில் உள்ளது.

190 ஒரு கிறிஸ்தவன் என்று உரிமை கோரும் ஒரு மனிதனோ அல்லது பெண்ணோ அந்த விதமான வாழ்க்கை வாழ்கிறதில்லை, தேவனுடைய கிருபையினால், அது துர்நாற்றங்கொண்ட களை. அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். அந்தக் காரியம் உங்களுடைய இருதயத்தில் இருக்குமானால், நீங்கள்

வேறு எங்கோ இருக்கிறீர்கள் என்பதற்கு சாட்சி பகருகிறது. அது பொல்லாததாயிருந்தால், நீங்கள் இங்கே கீழே இருக்கிறீர்கள் என்பதற்கு அது சாட்சி. நீங்கள் மரிக்கும்போது, நீங்கள் ஏற்கனவே உள்ள இடத்திற்கு நீங்கள் செல்ல வேண்டும்.

நீங்கள் நல்லவராயிருந்து, நீங்கள்—நீங்கள் நல்லவராயிருந்தால், தேவன் உங்களை நல்லவராக்கியிருக்கிறார், நீங்கள் மறுபடியும் பிறந்தால், நீங்கள் அந்தவிதமாகச் செல்ல வேண்டியவர்களாயிருக்கிறீர்கள், ஏனென்றால் அந்த ஜீவியம் இந்த இடத்தோடு சாட்சி பகர வேண்டியதாயிருக்கும். அது இங்கே சாட்சியாக இருந்தால், அங்குதான் நீங்கள் செல்ல வேண்டும். அது அங்கே பதிவாகுமானால், அங்குதான் நீங்கள் செல்ல வேண்டும். பார்த்தீர்களா?

191 நீங்கள் இங்கே என்ன…இப்பொழுது இதை உங்கள் சிந்தையில் கொள்ளுங்கள். நான் முடிக்கப் போகிறேன். ஆனால் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்பதோ, நீங்கள் வேறெங்கோ வேறு ஒன்றாக இருக்கிறீர்கள் என்பதற்கு ஒரு அடையாளமாயுள்ளது. கிறிஸ்தவர்களாகிய நீங்கள், நீங்கள் எப்பொழுதுமே பரிபூரணத்தில் இருக்க விரும்பியுள்ளீர்கள். ஒரு பரிபூரணம் உண்டு, அந்தப் பரிபூரணம் இந்த ஜீவியத்தில் இல்லை. ஆனால் இங்குள்ள ஒவ்வொரு மனிதனும், ஒரு கிறிஸ்தவனும், இப்பொழுது இங்குள்ள ஒரு கிறிஸ்தவனாக இருக்கிற ஒவ்வொரு நபரும் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தில் ஏற்கனவே மகிமைப்படுத்தப்பட்டுள்ளான். நீங்கள் மற்றொரு சரீரத்தை உடையவர்களாயிருக்கிறீர்கள். அதை நீங்கள் வேறொரு நேரம் பெறப்போவதில்லை, அது உங்களிடம் இப்போது இருக்கிறது. இந்தச் சரீரம் அழிந்து போகுமானால், இப்பொழுதே மற்றொரு சரீரம் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் அதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கலாமே. அதை ஒரு நிமிடம் படித்துப் பாருங்கள்.

192 நாம் ஒவ்வொருவரும் நாளைக் காலைச் சூரியன் உதிப்பதற்கு முன்னர் நித்தியத்தில் இருக்கலாம் என்பதை நீங்கள் அறிவீர்களா? இப்பொழுது, என் நண்பனே, நீ ஒரு கிறிஸ்தவனாயிருக்கவில்லையென்றால், உனக்கு ஒரு காரியம் மாத்திரமே விடப்பட்டுள்ளது. நீங்கள் அந்த வழியில் செல்ல வேண்டும். நீங்கள் அந்தப் பாதையில் இருந்தால், நீங்கள் அந்தப் பாதையில் செல்ல வேண்டும். நீங்கள் ஒரு தானிய மணியாக இருந்தால், நீங்கள் தானியத்தை உற்பத்தி செய்வீர்கள். நீங்கள் ஒரு களையாக இருந்தால், நீங்கள் அந்தக் களையின் ஜீவனை உற்பத்தி செய்வீர்கள். இப்பொழுது, நீங்கள் எங்கோ இருக்கும் ஒரு சபையில் உறுப்பினராக இருந்து, அது எதையும் அறியாமலும் போதிக்காமலும் இருந்து, உங்களை வெறுமனே சபைக்கு வந்து ஓர் உறுப்பினராக இருக்க அனுமதித்தால்…நீங்களோ, “பாருங்கள், சகோதரன் பிரான்ஹாம், நாம் இயேசு கிறிஸ்துவை நம்முடைய

சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று என்னுடைய சபை போதிக்கிறது. நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால் நாம் இரட்சிக்கப்படுகிறோம்" என்று கூறலாம். உங்களுடைய ஜீவியம் அதனோடு ஒப்பிடவில்லையென்றால், நீங்கள் அதை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை.

193 இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பிசாசு நம்புகிறான் என்பதை நீங்கள் அறிவீர்களா? நீங்கள் இயேசுவை பகிரங்கமாக அறிந்திருக்கிறீர்களா அல்லது இயேசுவை தேவனுடைய குமாரன் என்று பிசாசு பகிரங்கமாக அறிக்கை செய்ததை நீங்கள் அறிவீர்களா? அவன் இரட்சிக்கப்படவில்லை. அவனால் இரட்சிக்கப்பட முடியாது; அவன் பிசாசு. எனவே இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுதல்…

194 அந்தப் பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் எல்லோருமே மிகவும் பக்தியுள்ளவர்களாயும், மதப்பற்றுள்ள மக்களாகவும் இருந்தனர் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவர்கள் தங்கள் இருதயத்தோடு தேவனை நேசித்ததாக, அவர்கள் எண்ணி, அந்தக் குற்றமற்றவரை, தேவனுடைய குமாரனை தேவனுடைய குமாரன் என்று அடையாளங்கண்டு கொள்ளத் தவறினர்! அதே சமயத்தில் அவர்கள் மிகவும் பக்தியுள்ளவர்களாயிருந்தனர் (அது சரியா?), மிகவும் பக்தியுள்ளவர்களாய், மிகுந்த கல்வியறிவு படைத்தவர்களாயிருந்து, இன்றைக்கு நம்முடைய வேத பண்டிதர்கள் எவரையும் காட்டிலும் நன்றாக வேதாகமத்தை அறிந்தவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தலைமுறை தலைமுறையாக அங்கே அமர்ந்து கர்த்தரை சேவிப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய வேண்டியதாய் இருந்ததில்லை.

195 இப்பொழுது, வேதம் என்ன கூறுகிறது என்று பாருங்கள்: "கடைசி நாட்களில்…" என்னுடைய கிறிஸ்தவ நண்பர்களே, உங்களிடம், தேவ அன்போடு, வேதம், "கடைசி நாட்களில்… மனுஷர் துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயிருப்பார்கள்" என்று கூறியுள்ளது. இப்பொழுது, அது உண்மையல்லவா?

196 இந்தக் கட்டிடத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட நபர் அன்றொரு இரவு ஒரு புத்தாண்டு விருந்துக்குச் சென்று, அவர்கள் அடித்தளத்தில் குளிர்பானம் அருந்திக் கொண்டும், பொழுதுப் போக்கு செய்து கொண்டும், உணவு அருந்திக் கொண்டும், இரவு குளிர்பான விருந்துகள் போன்றவற்றிலும் ஈடுபட்டிருந்தனர். சபைகள் நடனங்களையும் கூட நடத்துகின்றன. தேவன் அவர்களிடம் என்ன செய்யக் கூடாது என்று கூறினாரோ, அதையே அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் செய்கின்றனர். இங்கே சபையானது செய்ய வேண்டிய காரியத்தை இயேசு கூறினார், அவர்கள் அதை மறுக்கின்றனர். இயேசு, இங்கே அவருடைய கடைசி வார்த்தைகள், அவருடைய சித்தமும், சபைக்கான ஏற்பாடும்:

“நீங்கள் உலகமெங்கும் போய்; சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (ஒரு வேளை உங்கள் போதகர் அதுவரை மட்டுமே வாசித்திருக்கலாம். ஆனால் இதோ அதனுடைய மீதியை பார்ப்போம்.) விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுத்தாலும் சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும், அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்” என்றார்.

197 இப்பொழுது, அதைத்தான் இயேசு தம்முடைய நாமத்தில் அவர்கள் செய்யும்படி கூறினார். அவர்கள் அதை மறுக்கின்றனர், ஆனால் அவர்கள் சென்று, அவர் கூறினதற்கு முரணாகச் செய்கிறார்கள், அது கடந்து சென்றது என்று போதிக்கிறார்கள், அதில் ஒன்றுமே இல்லை, அதற்குப் பதிலாக வேத சாஸ்திரத்தைப் போதிக்கிறார்கள். ஓ, நாம் இந்த நிலையில் இருப்பதில் வியப்பொன்றுமில்லை.

198 இங்கே பாருங்கள், என் சகோதரனே, நான் உங்களுக்குக் கூறட்டும். சபையானது ஒரு நிலையை அடையும்போது, அந்த அடையாளங்கள் பின்தொடரும் வரைக்கும், அங்கே உள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் நிரப்பப்பட்டிருப்பார்களாக.

199 கப்பற் சேதத்திற்குப் பிறகு அந்தத் தீவில் இருந்த பரிசுத்த பவுலைக் குறித்து நான் நினைக்கிறேன். தேவன் அவனுக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்திருந்தார். பதினான்கு பகலும் இரவும்... அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்ற அனைத்து நம்பிக்கைகளும் போய்விட்டன. அந்தச் சிறிய, பழைய படகு *அந்தவிதமாகத்* தள்ளாடிக் கொண்டிருந்தது, அவர்கள் யாவரும் பதினான்கு இரவும் பகலும் அழுதுகொண்டிருந்தனர். அங்கே பவுல் ஒரு தரிசனம் கண்டான். அவன் வெளியே வந்தான்; மேலும் அவன், “தைரியமாயிருங்கள், ஏனென்றால் நான் யாருடைய ஊழியக்காரனாயிருக்கிறேனோ, அந்தத் தேவனுடைய தூதன் எனக்கு அருகில் நின்று, ‘பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாகக் கொண்டு செல்லப்பட வேண்டும். இதோ, உன்னோடு பயணிக்கிற யாவரையும் தேவன் அளித்திருக்கிறார்’” என்றான்.

200 கப்பல் சேதமுற்று கரையை அடைந்தபோது, அவர்கள் அந்தத் தீவு மக்களுடன் அங்கே சென்றபோது, பவுல் சில விறகுகளை எடுத்துக்கொண்டிருந்தான், அவன் சென்று அவைகளை நெருப்பின்மேல் வைத்தான். அப்பொழுது அங்கே ஒரு பெரிய சர்ப்பம் அவனுடையக் கரத்தைக் கவ்விக் கொண்டது. இப்பொழுது, அந்தச் சர்ப்பம் அந்த விஷத்தை அவனுடைய கரத்தில் ஏற்றினது,

அது அவனை ஒரு நிமிடத்தில் கொன்றிருக்கும். அந்தத் தீவார், "அந்த நபர் விழுந்து மரித்துப் போவதைக் கவனியுங்கள், ஏனென்றால் அவன் இன்னும் ஒரு நிமிடத்தில் மரித்துவிடுவான்" என்றனர்.

201 அவன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறான். பக்தியான ஜனங்கள் அவனைச் சங்கிலிகளால் பிணைத்தனர். அந்த நாளிலே மிகவும் அருமையான சபைகள் அவனைச் சங்கிலிகளால் கட்டியிருந்தன. அது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் சாசனம் இல்லாவிடில், இன்றைக்கும் அவர்கள் அதையே செய்திருப்பார்கள். அது உண்மையே! அவள் இன்னும் கொஞ்சம் நொறுங்குண்டு போகும் வரை காத்திருங்கள்.

202 அப்பொழுது ஒரு சர்ப்பம் அவனுடைய கரத்தைக் கவ்விக் கொண்டது. இப்பொழுது கவனியுங்கள். பவுல் பயப்படவில்லை. அவன், "இயேசு கிறிஸ்து, 'சர்ப்பங்களை எடுத்தால், அது அவர்களைச் சேதப்படுத்தாது என்று கூறினார்'" என்றான். எனவே அவன் இங்கு நடந்து சென்று, அதனைத் தீயிலே உதறிப்போட்டான்; திரும்பிச் சென்று சில விறகுகளை எடுத்துக்கொண்டு, மீண்டும் நெருப்பில் போடுகிறான்; தன்னுடைய முதுகைக் காட்டி அனலூட்டிக்கொண்டு, இந்தவிதமாகத் திரும்பித் தன்னுடைய கரங்களைச் சூடேற்றினான். அந்தத் தீவார், "அவன் ஏன் சாகவில்லை? அந்த மனிதன் ஏன் சாகவில்லை? அவன் கீழே விழுந்து மரிக்க வேண்டும்" என்றனர். ஆனால் பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தான் (நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா?), அந்த விஷம் அவனை விஷமாக்க முடியாத அளவுக்குப் பரிசுத்த ஆவியால் நிரம்பியிருந்தான்.

203 ஓ, சகோதரனே, பரிசுத்த ஆவியினால் நிறைந்த ஒரு சபையை எனக்குக் கொடுங்கள். இரண்டாயிரம் ஆண்டுகளில் எல்லா வேத சாஸ்திரிகளும் செய்யத் தவறியதை தேவன் ஓராண்டில் செய்வார். சபையின் அபிஷேகம் உண்மையாகவே அந்த உண்மையுள்ள சிறு மீதமுள்ளோரின் வீட்டைத் தாக்கும் வரை நீங்கள் காத்திருங்கள். புறஜாதிகளின் கதவுகள் மூடப்பட்ட பிறகு, ஓ, அப்பொழுது தேவன் ஒரு சபையை அபிஷேகிப்பார். "அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நீதியாயிருக்கிறவன் இன்னும் நீதியாயிருக்கக்கடவன், பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாயிருக்கட்டும்." தேவன் சபையைத் தேவனுடைய வல்லமையினால் அபிஷேகிப்பார், காரியங்கள் சம்பவித்துக் கொண்டிருக்கும். அப்பொழுது அது மாத்திரமல்ல, ஆனால் அவர் அதை இப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார்.

204 அடையாளங்களையும் அற்புதங்களையும் கவனியுங்கள்; அப்பொழுது ஜனங்கள் சுற்றும் முற்றும் பார்த்து, "பாருங்கள், அது பிசாசினால் உண்டானது" என்கின்றனர். ஓ, ஏனென்றால் அவர்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும்

அறியாதிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால்தான் அவர்கள் அதைக் கூறுகிறார்கள்.

205 கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களை இவ்வளவு தாமதமாக வைத்திருப்பதற்காக நான் வருந்துகிறேன். நான் இதை மிகவும் அரிதாகவே செய்கிறேன், ஆனால் நான் உங்களுடன் அவ்வளவாகப் பழகுவதில்லை. எனவே உங்களுடைய எண்ணங்கள் மற்றும் காரியங்களின்படி நான் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்காமலிருக்கலாம். இந்தக் காலையில் இரண்டு பதில் அளிக்கப்பட்டது. நான் அவ்வாறு செய்யவில்லையென்றால், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களை வருத்தப்படுத்தவோ அல்லது அதுபோல எதையுமோ செய்ய வேண்டும் என்று நான்—நான் நினைக்கவில்லை. நான் கூற வேண்டியதாயிருந்தது...நீங்கள் என்னிடம் கேள்வியைக் கேட்கிறீர்கள். நான் என்னுடைய அறிவுக்கு எட்டினவரை பதிலை அளிக்கிறேன். அது உண்மை.

206 இப்பொழுது, ஒருக்கால் அந்தக் காரியங்களைக் குறித்து எனக்கு அதிகமாகத் தெரியாது. நான் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு காரியத்தை நான் அறிவேன், இயேசு கிறிஸ்து நம்மைப் பாவத்திலிருந்து இரட்சித்து, பாவத்திலிருந்து நம்மைக் காத்து, அவருடைய வல்லமையை, அவருடைய ஆசீர்வாதங்களை நமக்கு அளிக்கிறார்.

207 நீங்கள் சுற்றும் முற்றும் கவனித்து, ஜெபிக்கப்பட்ட மக்களுக்குள் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்தால்...எல்லா தேசங்களையும் நோக்கிப் பாருங்கள், எங்கும் உள்ள அடையாளங்களையும், அதிசயங்களையும் நோக்கிப் பாருங்கள். வரப்போகும் நேரத்தை நோக்கிப் பாருங்கள். சில காலத்திற்கு முன்பு நாம் இங்கே பிரசங்கித்துக் கொண்டிருந்த அந்த இரண்டு கிளைகளைப் போலவே, ஆதியாகமத்திலிருந்து வந்துள்ளது, எப்படியாய் அவர்கள் எங்கும் தங்களுடைய பதிவுகளைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். எப்படியாய் அவிசுவாசி, தன்னுடைய மார்க்கத்தில் மிகவும் அடிப்படையானவர்களாய், கௌரவமுள்ளவராயிருந்து, ஆனால் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, ஆனால் அதனுடைய வல்லமையை மறுதலிக்கிறார்கள்...சபையானது முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது.

208 கர்த்தராகிய இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக, ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக என்பதே என்னுடைய ஜெபமாயுள்ளது. நீங்கள் இரவும் பகலும் உறங்க முடியாத அளவிற்கு இழக்கப்பட்ட ஆத்துமாக்களுக்காகப் பாரமாயிருந்து, மிகவும் பாரப்படும்படிக்கு ஜீவிக்க, ஜனங்களாகிய உங்கள்மேல் தேவன் அதைச் வைப்பாராக. தேவன் இந்தப் பிரான்ஹாம் கூடாரத்திற்கு மிகவும் பாரமுள்ளவர்களாக ஆவதற்குரிய சிலாக்கியத்தை அருளுவாராக. நீங்கள் ஒருபோதும்

சத்தமிடாவிட்டாலும், நீங்கள் வேறு எந்தக் காரியத்தையும் ஒருபோதும் செய்யாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை, நீங்கள் இழக்கப்பட்ட ஆத்துமாக்களுக்காக உங்களால் உறங்க முடியாத அளவிற்கு மிகவும் பாரமடைந்திருந்தால். நீங்கள் அதைச் செய்யும்போது, உலகம் இங்கே ஜெபிக்கப்படுவதற்காக நழுவி வந்து கொண்டிருக்கும். அது உண்மை. உலகம் ஜெபிக்கப்படுவதற்காக உள்ளே வரும். நீங்கள் எங்கும் அறியப்படுவீர்கள். தேவன் தம்முடைய ஆவியை எங்களுக்குத் தந்தருளுகிறார்: எங்களைத் தாழ்த்தும்; எங்களை நொறுக்கும்; வியாதியஸ்தரை சுகப்படுத்தவும், பிசாசுகளைத் துரத்தவும், மகத்தான அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்யத்தக்கதாக; நீங்கள் வியாதியஸ்தர் மீது உங்களுடைய கரங்களை வைத்து, உங்களுடைய இருதயத்தில் ஒரு சந்தேகமுமின்றி, அந்த ஆசீர்வாதத்தை கேட்கும்போது, தேவன் அதைச் செய்யப்போகிறார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். அந்த நோயாளியைக் கவனியுங்கள், அவன் குணமடையத் துவங்குவான். ஏன்? தீமை அதிலிருந்து போய்விட்டது. நின்றுகொண்டிருந்த மரத்தைப் போலவே, இயேசு பார்த்தார், அதில் கனி இல்லை. அவர், "நீ சபிக்கப்பட்டிருப்பாய்" என்றார்.

இருபத்தி நான்கு மணி நேரம் கழித்து அவர்கள் கடந்து சென்றனர். பேதுரு, "பாருங்கள், இலைகள் ஏற்கனவே உதிர்ந்து கொண்டிருக்கின்றன" என்றான். ஏதோ ஒன்று சம்பவித்திருந்தது. தேவனுடைய வார்த்தை உரைக்கப்பட்டிருந்தது.

209 இயேசு, "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். நீங்கள் இந்த மலையைப் பார்த்து, அதைச் சந்தேகப்படாமல், பெயர்ந்து போகச் சொன்னால், அது உங்களுக்குக் கீழ்ப்படியும்" என்றார். தேவனில் விசுவாசமாயிருங்கள்.

இப்பொழுது, இது இராப்போஜன நேரம். நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில், யாரையாவது இசைப் பேழையை இசைக்க வரும்படி நான் கேட்டுக் கொள்ளப் போகிறேன்.

210 கர்த்தாவே, இதுவே அந்த நேரம், இந்த வேளையில் ஒருவேளை உலகெங்கிலும் உள்ள ஆண்களும் பெண்களும், கர்த்தாவே, உலகம் முழுவதிலும் நியாயத்தீர்ப்பின் மகத்தான வேளையானது நெருங்கிக்கொண்டிருக்கிறதையும், தேவன் எல்லா தேசங்களையும் அவற்றின் அரசியல் நிலைப்பாடுகளையும் நியாயந்தீக்கப்போவதையும் காண்பார்கள். எல்லா இடங்களிலும், ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொருவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளில் நிற்க வேண்டும். பிதாவே, தப்பித்துக் கொள்ள வாஞ்சிக்கிற இந்த ஜனங்கள்…தப்பித்துக் கொள்ளுதல் ஒன்று உண்டு என்பதை அறிந்து கொள்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அந்தப் பாதை தாவீதின் சந்ததியாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினூடாக உள்ளது. அன்புள்ள பிதாவே, அவரைப் பூமிக்கு அனுப்பினதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம்,

ஏனெனில் நாங்கள் அணுகக்கூடிய மத்தியஸ்தராக அவர் இருந்தார்; நாங்கள் தேவனுடைய கோபாக்கினைக்கும், ஆக்கினைத்தீர்ப்புக்கும் தப்பிக்க நீர் எங்களுக்காகப் பரிந்து பேசி, எங்களுடைய பாவங்களைச் சுமந்தீர். கோபாக்கினை வரப்போகிறது என்பதை நாங்கள் அறிவோம். அது, கடந்த நாட்களில் யோவான் கூறினது போல, “வரப்போகும் கோபாக்கினைக்கு தப்பி ஓடுங்கள்.”

211 இப்பொழுதும், கர்த்தாவே, இன்றிரவு நாங்கள் இராபோஜனம் எடுக்கையில், கர்த்தாவே, நீர் எங்களைப் பரிசுத்தமாக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம், உம்முடைய சுத்திகரிக்கும் இரத்தத்தினால்; இந்த ஜனங்களுடைய ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்படுவதாக. தேவனே, எங்களில் ஒருவரும் அதை அபாத்திரமாய் எடுத்துக்கொள்ளும்படி நீர் அனுமதிக்காதபடிக்கு நான் தாழ்மையோடும், உத்தமமாய் ஜெபிக்கிறேன். நாங்கள் அவ்விதம் செய்தால், நாங்கள் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றவாளிகளாயிருக்கிறோம் என்று உம்முடைய வார்த்தையில் நீர் கூறியிருக்கிறீர். இப்பொழுதும் பிதாவே, நாங்கள் இதை எந்த ஒரு குறையும் இல்லாமல் எடுத்துக் கொள்ளும்படியாக, இந்த ஜனங்களைப் பரிசுத்தமாயும், அர்ப்பணிக்கப் பட்டவர்களாக்கும்.

212 இப்பொழுது, பிதாவே, இராபோஜனம் முதலில் எகிப்தில் கொடுக்கப்பட்டது என்பதை நாங்கள் உணருகிறோம். இராபோஜனம், ஆட்டுக்குட்டி, அப்பம் ஆகியவற்றைப் புசித்த அந்த ஜனங்கள், அவர்கள் அணிவகுத்து வந்தபோது, அவர்கள் நாற்பது வருடங்கள் வனாந்திரத்தில் பிரயாணம் செய்தனர்; அவர்கள் வனாந்திரத்திலிருந்து வெளியே வந்தபோது, அவர்களுக்குள்ளே பலவீனமானவர்கள் ஒருவரும் இருக்கவில்லை. அவர்கள் இராபோஜனம் எடுத்தனர்.

213 தேவனே இரக்கமாயிரும். வியாதியஸ்தர் யாவரும் சுகமடைய வேண்டும் என்றும், இழக்கப்பட்ட யாவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் நான் ஜெபிக்கிறேன். சம்பிரதாயமானவர்களும், அலட்சியமாயிருப்பவர்களும், அவர்கள் தேவனுடைய அக்கினிகளுக்கு அருகாமையில் வந்து, தங்களுடைய ஆத்துமாக்களை அனல் மூட்டிக்கொள்வார்களாக. கர்த்தாவே, அதை அருளும். இப்பொழுது எங்களை மன்னித்து எங்களுக்கு உதவி செய்யும். நாங்கள் உம்முடைய குமாரனின் நாமத்தில் ஜெபிக்கிறோம்.

214 நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில், (சகோதரன் இசைப்பேழையில் ஒரு சிறு சுருதியை எங்களுக்குக் கொடுக்கும்போது) இங்கே ஒரு நபர் தங்களுடைய கரத்தை உயர்த்தி, “சகோதரன் பில், நான்—நான் உத்தமமாக…ஒரு ஆத்துமாவின் நிலைமைக்காக. நீங்கள் என்னை நினைவு கூர வேண்டும் என்று நான்—நான்—நான் விரும்புகிறேன். நான்—நான்—நான் பரிசுத்த

ஆவியைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்” என்று கூறுங்கள். நீங்கள் உங்களுடைய கரத்தை உயர்த்துவீர்களா? “நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்” என்று கூறப்பட்டுள்ளது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை, உங்களை, உங்களை, உங்களை, உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களையும், உங்களையும் ஆசீர்வதிப்பாராக. பெண்மணியே, உங்களை, சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. என்னே, எங்கும் கரங்கள். சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள், சகோதரியே, நான் உங்களுடைய கரத்தைக் காண்கிறேன், நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள். சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

215 உங்களுக்கு இன்னும் சற்று நெருக்கமாக நடக்க நீங்கள் விரும்புகிறதில்லையா. நண்பர்களே, நாம் நம்முடைய கர்த்தருடைய வருகைக்கு அருகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இப்பொழுது தேவன் தம்முடைய வார்த்தைகளையும், அடையாளங்களையும், அற்புதங்களையும் எங்கும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

216 நிச்சயமாக, தேவன் தம்முடைய வார்த்தையைப் பற்றிய ஒரு கருத்தை எனக்குக் கொடுக்காவிட்டால், நான் வெளியே சென்று பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பெற்று அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்து, திரும்பி வந்து வார்த்தையைப் பிரசங்கித்து, மற்றும் பல, எல்லா இடங்களிலும் அதை ஆசீர்வதித்து, இவைகளைச் செய்வதை அவர் அனுமதிக்க மாட்டார். அவர் அதை அருளமாட்டார். எனவே நான் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை நான் அறிவேன்.

217 நீங்கள் இயேசு கிறிஸ்து இல்லாமல், பரிசுத்த ஆவி இல்லாமல் இருந்தால், நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் வரையில் தேவன் உங்களை இளைப்பாற அனுமதிக்காதிருப்பாராக. வஞ்சிக்கப்படாதிருங்கள். கண்ணீரில்லாத இந்தச் சம்பிரதாயமான அறிக்கைகளில் ஒன்றை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பரிசுத்த ஆவி கிடைத்தது என்று மட்டும் கூறிவிடாதீர்கள். நீங்கள் விசுவாசிக்கும்போது, நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவதில்லை. நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள விசுவாசிக்கவில்லை. அது தேவனுடைய ஒரு வரம். பவுல், “நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?” என்று கேட்டான். எனவே அதை விசுவாசியுங்கள். தேவன் அதை உங்களுக்கு அருளுவாராக.

218 இப்பொழுது, பிதாவே, தங்களுடைய கரங்களை உயர்த்தினவர்களுக்கு, நீர் பரிசுத்த ஆவியானவரையே இப்பொழுதே அவர்களுக்குத் தர வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். மேலே உயர்த்தப்பட்ட இந்த அநேக, பத்து அல்லது பதினைந்து கரங்களுக்குள்ளாக அவர் ஆழமாக

வருவாராக. அவர்கள் ஒவ்வொருவருக்கும் உம்முடைய ஜீவியத்தின் அபிஷேகத்தை நீர் அருள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவர்களுடைய வாழ்க்கையில் அடையாளங்களும் அற்புதங்களும் நிகழும் வரை, அவர்கள் எல்லாவிதமான அடையாளங்களையும் காணும்படிக்கு அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவார்களாக. இயேசு, "விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின்தொடரும்" என்று கூறினார். பிதாவே, இதை அருளும். நாங்கள் தாழ்மையாய் உம்முடைய குமாரனின் நாமத்தில், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென். (சகோதரன் நெவில்.)

54-0103E கேள்விகளும் பதில்களும் #2
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Voice Of God Recordings, India Office
19 (New No: 28) Shenoy Road, Nungambakkam
Chennai 600 034, India
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

Voice Of God Recordings
P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.
www.branham.org